www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
පක්කම් 20
දිනමුරසු වාරමලර්
ரூபா 9/00
செப்.18-24,1994

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 68

## பேச்சு முயற்சியும் பிரபாவின் செய்தியும்

எக்ஸ்ரே ரிப்போர்ட்

பரபரப்பான அரசியல் செய்திகள்

வடக்கு–கிழக்கு பிரச்சனைத் தீர்வு

அரசியல் அணுகுமுறைகள்




## ஆணிப்படுக்கையில் அசத்தும் சாதனை

கூடு – சுவை – சுவாரசியம் அதுதான் தினமுரசு

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
'போருக்கு முடிவு வருமா?
வடக்கு-கிழக்கில் விடிவு புலருமா?'
தினந்தோறும் விடிந்ததும் எழுந்து
தினசரிகளைப் புரட்டும்
எம்மவர்களின் வேகத்தில்
ஆர்வம் தெரிகிறது-ஆதங்கம் இருக்கிறது.

இனப்பிரச்சனைக்கு தீர்வு காணும்
பொறுப்பை தட்டிக்கழிப்பவர்களை
உள்நாடும்-வெளியுலகும்
விருப்போடு நோக்காது
என்பது வெளிப்பட்டு வருகிறது.

ஜனாதிபதி டி.பி.விஜேதுங்காவின்
அரசியல் தோல்விக்கு
இனப்பிரச்சனையே இல்லையென்ற
அவரது பேச்சும் ஒரு முக்கிய காரணம்.

நிகழ்ச்சிப் போக்குகள் புரியாமல்
நேரெதிராகப் பேசுவோர்
காலத்தின் கரங்களால் ஒதுக்கப்படுவர்;
அல்லது தாமே ஒதுங்கிக் கொள்வர்.

சுற்றியிருக்கும் நாலுபேர்
கரகோசம் செய்கிறார்கள் என்பதால்
சூழஉள்ள உலகம்
தூங்கிக்கொண்டிருப்பதாக நினைத்து
முழுப் பூசனிக்காயை
ஒரு கோப்பை சோற்றில் மறைக்கலாமா?

45 ஆண்டு காலமாக நீடித்து
புரையோடிய புண்ணாக
இனப்பிரச்சனை வலி தந்துகொண்டிருக்க,
"புண்ணே கிடையாது-வலிதான் உண்டு"
என்று பேசினால்-
மருத்துவர் மீது சந்தேகம் வரத்தானே செய்யும்.
மருத்துவம் மீதான மதிப்பும் போய்விடும்.

வைத்தியம் செய்வதற்கு முன்னர்
நோய் என்னவென்று அறியவேண்டும்.
நோயின் குணம்- தீவிரம் தெரியவேண்டும்.
இல்லாவிட்டால்-
சத்திர சிகிச்சைக்குப் பதிலாக
சாதாரண சிகிச்சை செய்து
ஆளையே கொன்றுவிடும்
அபாயம் நேர்ந்துவிடும்.

இன்னொன்றும் இருக்கிறது.
அதுதான் பொறுப்புணர்வு.
செய்யும் வைத்தியம் சிறப்பாகவும்
இன்னொரு முறை
கீறிச் கிழிக்க வேண்டிய
தேவை எழாமலும் இருக்கக்கூடியதாக
செய்கின்ற பொறுப்புணர்வே அது.

அந்தப் பொறுப்புணர்வு இல்லாவிடின்
வயிற்றுக்குள் கத்தரிக்கோலை வைத்து
தைத்து முடிக்கும் விபரீதம் வரும்.

அரசியல் தலைவர்களும்
பிரதான பிரச்சனைகளை தொடும்போதோ
தீர்த்துவைக்கும் செயலை நாடும்போதோ
மருத்துவருக்குரிய பொறுப்போடுதான்
மதி நுட்பத்தோடும் ஈடுபாட்டோடும்
களத்தில் இறங்க வேண்டும்.

நமது ஜனாபதியோ
'புண்ணில்லை- வலி உண்டு' என்றுபேசி
தன்மீது நோயாளிக்குள்ள நம்பிக்கையை
தளரச்செய்துவிட்டவராகிவிட்டார்.

நோயாளியின் வேதனையை
பக்குவமான பேச்சால் குறைத்துவிடும்
மருத்துவர்களும் இருக்கிறார்கள்.
நமது மாண்புமிகு ஜனாதிபதியோ
ஆரம்பப் பேச்சுக்கள் மூலமே
அவநம்பிக்கையை விதைத்திருந்தார்.

இப்போது புதிய மருத்துவர்கள்.
தலைமை மருத்துவர் சந்திரிக்கா.
தென்பூட்டும் பேச்சுக்கள்.
சிகிச்சையை தொடங்குவதற்கான
ஆரம்ப அறிகுறிகள் என்பவை
புதிய மருத்துவர்களை
சற்று நம்பிக்கையோடு
பார்க்க வைத்திருக்கிறது.

பொருளாதாரத் தடை நீக்கம்
நோயாளிக்கு நம்பிக்கை தரும் 'டொனிக்'.

சிறையில் உள்ள இளைஞர்களை
விடுதலை செய்யவும்
புதிய அரசு முன்வந்திருக்கிறது.

போக்குவரத்துப் பாதை விடயத்திலும்
யாழ் குடாநாட்டு மக்களின்
அவதிகள் அகலும் வழிதெரிகிறது.

அகதிகள் விடயத்திலும்
அவர்களது அவல வாழ்வுக்கு
நிவாரணம் தேடும் முயற்சிகள்
சுறுசுறுப்பாக்கப்படும் என்று
புதிய அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

இன-மத-பேதங்களுக்கு
இடம்கொடாத வகையில்
அகதிகள் பிரச்சனையும்
அவர்களுக்கான நிவாரணங்களும்
அணுகப்படுதலும்-செய்யப்படுதலும்
மிக முக்கியமானது என்பதை
கடந்த கால அனுபவங்கள் மூலம்
எடுத்துரைக்க வேண்டியுள்ளது.

சிகிச்சை தொடங்க முன்
நோயாளிக்கு நம்பிக்கை தருவது
ஏற்றதுதான்-மிக நல்லதுதான்.
ஆனால்-
நம்பிக்கை கொடுப்பது மட்டுமே
நோயை முற்றாக குணமாக்கிவிடாது.

□□

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—


# ஆன்மீகம்

## புதுப்பிறப்பு

"ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான்" (யோவான் 3:3) இயேசு கிறிஸ்து கூறியுள்ளார். நான் திரும்ப எப்படி பிறக்க முடியும்? என்று நீங்கள் யோசிக்கலாம். மறுபிறப்படைதல் என்பது ஒரு புதிய வாழ்க்கையின் ஆரம்பம். ஒருவன் தனது கடந்த கால வாழ்க்கையின் பயனற்ற பாவமான வழியிலிருந்து விடுதலையடைந்து இயேசு கிறிஸ்துவுக்குள் வாழும் வாழ்க்கைதான் மறுபிறப்பின் அனுபவம். 'நீங்கள் அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்கள்' என்று வேதம் சொல்கிறது. பாவம் என்பதற்கு மீறுதல் என்று அர்த்தம். கடவுளுடைய நியாயப்பிரமாணத்தை மீறுதல் பாவம். "அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு சிக்குண்டு, சோதிக்கப்படு கிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தை பிறப்பிக்கும்-(யாக் 1: 14,15) ஆனபடியால் நாம் நமது வாழ்க்கையை புதுப்பித்து வாழவேண்டுமானால் பழைய வாழ்க்கையை களைந்து புதிதாக மாற்ற வேண்டும்.

எங்களுடைய வாழ்க்கையில் காணப்படும் எல்லா தீங்கான காரியங் களையும் விட்டொழித்தல் அவசியம். பாவத்தை அறிக்கை செய்து மன்னிப்புப் பெற்று, இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்படும்போது மறுபடியும் பிறக்கின்றோம். ஆகையால் எம்மை நாமே ஆராய்ந்து கடவுளுடைய இராச்சியத்துள் பிரவேசிக்க சிந்தித்து செயல்படுவோம்.

ஜெயமணி வில்சன்.



## இறையச்சம் உள்ள பெண்

இரவு நேரங்களில் இரகசியமாக நகரைப் பார்வையிடுவது கலீபா ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் வழக்கமாக இருந்து வந்தது.

ஒருநாள் ஹஸ்ரத் உமர் (ரலி) நடு நிசியில் நகரை சுற்றிக்கொண்டு இருக்கையில் ஒரு வீட்டில் ஒரு தாய் தனது மகளிடமே "மகளே! குவளையில் உள்ள பாலில் தண்ணீர் கலக்கச் சொன்னேன் கலத்தாயா?" என்று குரல் கொடுப்பதையும்,

அதற்கு மகள் "இல்லை" பாலில் தண்ணீர் கலந்து விற்கக் கூடாதென்று கலீபா உமர் கட்டளையிட்டுள்ளாரே நான் எவ்வாறு கலப்பேன் என்று கூறுவதையும் "என்ன சொன்னாய்? கலீபா உமர் இங்கு நின்று கொண்டு இருக்கிறாரா" என்று கேட்பதையும்,

"கலீபா இங்கு இல்லாவிட்டாலும் இறைவன் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு இருக்கிறான். நான் பாலில் தண்ணீரைக் கலக்க மாட்டேன்" என்று மறுப்பதையும் கலீபா உமர் செவிமடுத்தார்.

எம்.சீ.கலீல்-கல்முனை-05.

## கவிதைப்போட்டி இல-65

### வந்து குவிந்தவற்றில் வாகை சூடியதும் வியக்கப்பட்டவற்றில் இடம் பிடித்தவையும்

### பரிசுக்குரிய கவிதை

வீடில்லை விழிமூட
உணவில்லை-நாம்
பசியாற
புதிய தீர்வு
வேண்டுமம்மா-நாம்
புதிய பூமி
செல்வதற்கு.

ஜோய் ஜெயசிங்கம்.

### வியக்கப்பட்டவை

**சரிந்திடாதா?**

வீதியோர
வாழ்க்கையிலும்
விதியென்று
விளையாடும்
சதிகார(ச்)
சன்னங்களின்
சரித்திரமே
சரிந்திடாதா?

ஏ.அஹமது ஜுனைது
ஏறாவூர்-6.

**உண்மை!**

சமாதானமும்
சமஷ்டியும்
பொய்!
போரும்
அழிவும்தான்
மெய்!?

ஆரையூர்-மலர்.

**தூரத்தில்......**

ம்ம்...
சமாதானம்
இன்னும்
தொடுவானம்தான்.

இ.யோகநாதன்
வவுனியா.

நாடிழந்து வீடிழந்து
நடுத்தெருவில் மதலையுடன்
நரம்பறுந்த யாழாக
நங்கையவள்
யார் துணையை
நாடுகிறாள்?

ஏ.பீ.எம்.ராமிஸ்
கெகுணகொல்லை.

**நிலை**

போர்பதித்த
சுவடுகளில்
எஞ்சியுள்ள
மனித எச்சங்கள்.

எஸ். கலாதாசன்
நானுஓயா.



**வறுமையின் அகோரம்**

வறுமையின் கொடுமையால்
வளர்ந்தது சாய்ந்து விட்டது.
பிறந்ததுக்கும் பசியெடுத்தால்
பெற்றவள் என்ன செய்வாள்?

ந.ரதீஸ்வரன்-தம்பிலுவில்-02.

**வந்து சேருமோ?**

தடுமாறும் பார்வை ஏன்?
தாவித் தழுவும் சேயும்
கூடி விளையாட......
போர் போர்வை நீங்கி
புன்னகை வந்து சேருமோ?

ஆர்.யோகேஸ்வரன்
நமுனுகுல.

**புகலிடம்**

தத்துப் பிள்ளை கையில் கொண்டு
தப்பிக் கொண்ட சொந்தம் ஒன்று
தரணி மீது வாழ்க்கை வாழ
தாங்கிக் கொள்ளும் புகலிடம் ஏது?

தெ.லோஜனா-கொழும்பு-15.

**சொந்த பந்தம் எல்லாம்**

கட்டுக் கட்டாய் பணமிருந்தால்
கட்டியழ சொந்தங்கள் நூறுண்டு.
கட்டிக் கொள்ள சேலையில்லை
என்னைத்தொட்டு தேற்ற யாருண்டு?

வ.துரைராசா-வவுனியா.

**எங்கள் துன்பம்**

பஞ்சம்
பசி
பட்டினி
பழகிப்போன எங்களுக்கு
தஞ்சமளிக்க
யார் வருவார்!?

பொ.உதயணன்
மட்டக்களப்பு.

**பாவமன்றோ....!**

நாட்டு நடப்புகளை
யாமறியோம்....!
ராமன் ஆண்டாலும்
ராவணன் ஆண்டாலும்
பசியும்
பிணியும்
பாவமன்றோ....!

ஷியானி நளீர்,
அக்குறணை.

சமாதான வால்வெள்ளி
ஜனநாயக வானில்ட
ஜொலிக்குமா-இல்லை
பேரினவாத கிரகத்தில் மோதி
வெடித்துச் சிதறுமா?
பொறுத்திருந்து
பார்ப்போம்!

பா.பிரதீபன்
அக்கரைப்பற்று-8.

## கவிதைப் போட்டி இல-68




சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும், சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பிவையுங்கள்.

சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா 100/=.

**அனுப்பிவைக்க வேண்டிய கடைசித் திகதி 24.09.1994.**

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 68
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772,
கொழும்பு.




அன்பின் முரசே,

அருமையான விடயங்களை அள்ளி அபிமான உள்ளங்களை நெகிழ வைக்கும் தினமுரசே, அரசியல் அலசல்கள், மற்றும் லேடிஸ் ஸ்பெசல் மற்றும் பல்சுவை அம்சங்கள் யாவும் அருமை. உன் சேவை வளர என் வாழ்த்துக்கள்.

செல்வி.ரெங்கசாமி, ஜீவராணி-பொகவந்தலாவ.

□□

தினமும் திகட்டாமல் தித்திக்கும் தினமுரசே!

வாரங்கள் தோறும் நீ தரும் ஒவ்வொரு சிறப்பம்சங்களும் பாராட்டக்கூடியதே. ஒவ்வொரு விடயத்திலும் நீ புகட்டுகின்ற பாடங்கள் எதிர்காலத்தில் மிகவும் வரப் பிரசாதமே. அரசியலை அலசுவதானாலும் நிதானம் தவறாமல் செயல்படுகிறாய். என் வாழ்த்துக்கள்.

அப்பாஸியா அஹமட்-ஏறாவூர்-06.

□□

**ஏமாற்றலாமா?**

அன்பின் முரசே!

நீ தாங்கிவரும் அனைத்து ஆக்கங்களும் பலே. சில சிந்தனையை தூண்ட வல்லன. கத்தரித்த கடிஜோக்ஸ் சிரிக்கவும் சிந்திக்கவும் ஏற்றது. அது 66ம் முரசில் இடம்பெறவில்லை. 65ம் 66ம் இதழ்களிலும் ஸ்போட்ஸ், நில்-கவனி முன்னேறு போன்றவை இல்லாமல் சுவையே இல்லை.

வாழ்க! வளர்க தினமுரசே!

எஸ்.என்.லோகநாதன்.

□□

குளிர் காலத் தென்றலாய், இதயம் வருடிச் செல்லும் தினமுரசே! முரசு 65ல் வெளியான 'எக்ஸ்ரே ரிப்போர்ட்', ஸ்பெஷல் ரிப்போர்ட், 'அரசியல் அலசல்' அனைத்தும் தூள் சூப்பர்!! அத்தனைக்கும் சிகரம் வைத்தால்போல் ஜொலித்தது 'முரசம்' சபாஷ்.

(சூடு-சுவை-சுவாரஸ்யம் என்பதோடு, 'துணிச்சல், நேர்மை, வாய்மை' என்ற வாசகங்களையும் சேர்த்துக் கொள்ளவும்)

எஸ்.தாஜுன் நிஸா றஹ்மான்
பிலியந்தலை.

□□

வாரந்தோறும் நல்ல பல தரமான புதுமையான அம்சங்களை வழங்கி வரும் தினமுரசே உன்னை வாசகர்கள் ஒருபோதும் மறக்க மாட்டோம்.

கல்லடி மூர்த்தி-மட்டுநகர்.

□□

என் இனிய முரசே! உன்னில் வெளிவரும் பல்சுவை அம்சங்களும் சுவைக்க சுவைக்க தித்திக்காதவை.

இவ்வாரம் அரசியல் கட்டுரை கள் பிரமாதமாக இருந்தன. உன் சேவை எமக்கு மட்டுமல்ல பல அரசியல் வாதிகளையும் கவர்ந் திழுக்கும் சக்தி கொண்டது. உன் வரவினை ஆவலுடன் எதிர்பார்த் திருக்கும் வாசகர்களுள் நானும் உண்டு.

மகேஸ்வரி ராமதாஸ்-வத்தேகம.

□□

தேன் கிண்ணத்தில் தேன் சிந்தும் கவிதைகள் தந்து நீங்காது என் இதயத்தில் என்றும் முழங்கும் முரசே, நீ என்றும் வாழ்க என்று வாழ்த்துகிறேன்.

ஜே.கேசவ்-ஹட்டன்.

□□

எங்கள் அபிமான தினமுரசே,

கண்ணைப் பறிக்கும் வண்ணத் தில் கருத்தை கவரும் கவிதை




களுடன் சிறந்த கதைகள், துணுக்கு கள் சூழ உலகத்தின் விந்தைப் பகுதியை சிறந்த விதமாய்ப் படம் பிடித்துக் காட்டும் வித்தியாசமான முரசே, உன் நடுநிலமையும் நியாய மான சிந்தனை வடிவங்களும் அரசியலில் ஆழ்ந்து நோக்கி எடுத்துக் கூறும் அருமையான விமர்சனங்களும் என் மனதைக் கொள்ளை கொண்டுவிட்டன. என் மனதை மட்டுமல்ல, எண்ணி லடங்கா வாசகர்களின் இதயங்கள் நிறைந்து விட்டன. மேலும் மேலும் முத்திரை பதிக்க ஆதரவுக் கரங்களை அன்புடன் தருகின்றோம்.

வித்யா தினேஷ்-கொழும்பு-13.

□□

என் உள்ளத்தை துள்ளியெழச் செய்யும் இனிய முரசே, நீ அள்ளி வரும் ஆக்கங்கள் யாவும் என் மனதை பறித்தெடுக்கிறது. என்றும் வாழ்க உன் ஆக்கங்கள், வளர்க உன் புகழெங்கும். வாசகர் எம் மத்தியில் நீ நிலை பெற வேண்டு மென வாழ்த்துகின்றேன்.

ஏ.ஆர்.கன்சுல் ஜஹான்-தெல்தொட்ட.

□□

நீ ஒவ்வொரு கிழமையும் சுமந்து வரும் சுவையான தொடர்கதையும் நெஞ்சை நெகிழ வைக்கும் உண்மை சம்பவங்களும் உன்னிலே வாசித்து அறிகிறேன். உனக்கு எனது வாழ்த்துக்கள்.

சா.பாலசன்முகம்-வட்டக்கொடை.

□□

எத்தனையோ பத்திரிகைகள் தேர்தல் முடிவுகள் பற்றி ஆருடம் கூறியிருந்தன. ஆனால் 'தினமுரசு' கூறிய ஆருடம் நூற்றுக்கு நூறுவீதம் பலித்துவிட்டது என நான் துணிந்து கூறுகிறேன்.

ஜோசப் மாட்டீன்-எந்தளை-வத்தளை.

□□

அன்பின் முரசே,

நீ வாரா வாரம் சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் அருமை யின் அருமை. இலக்கிய நயம் என் மனதை கவர்கிறது. சிறுகதை, தேன் கிண்ணம் என்னை மகிழ வைக்கின் றது. மகாபாரதம் என் இதயத்தை மகிழவைக்கிறது.

கே.ராமன் உதயமலர்-மதெகெதர-
டி.டி.ராதா- பனில்கந்த.

□□

அரசியலைக்கூட வெகு
அழகாக கூறிவிடும்
உன்
அறிவைத்தான் - அதிசயத்தைதான்
என் சொல்ல!

யாதவி-கலஹா.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# இராணுவ பலத்தை நிரூபிக்க புலிகள் முயற்சி!

# யுத்த நிறுத்தம் ஒன்றுக்கான நெருக்குதல்!!

## படைகளைத் தளரவைக்காமல் பேச முயலும் புதிய அரசு

அரசு-புலிகள் பேச்சுவார்த்தை முயற்சிகள் பற்றிய செய்திகளின் மத்தியில் வடபகுதியில் பாதுகாப்புப் படையினரின் தாக்குதல்கள் இடம்பெற்றே வருகின்றன.

புலிகளும் படையினருக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டே வருகின்றனர்.

மன்னாரில் படைகளுக்கும்-புலிகளுக்கும் இடையே நடைபெற்ற மோதலில் 6 புலிகள் பலியானதாகவும், அதில் 4பேர் கப்டன் தரத்தில் உள்ளவர்கள் என்றும் புலிகளின் செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பதவியாகுளம் பகுதியில் படையினரின் இரு காவலரன்களை தாக்கியதுடன் ரி.56 துப்பாக்கிகள் 2, 916 ரவைகள், கைக்குண்டுகள் 9, மழைக்கவசங்கள் என்பவை தம்மால் கைப்பற்றப்பட்டதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

வடமராட்சி கடலில் கடற்படையினரின் தாக்குதல் தொடர்ந்து வருவதாகவும் புலிகள் தரப்பிலிருந்து புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன.

மட்டக்களப்பு-திருமலை ஆகிய பகுதிகளிலும், யாழ்ப்பாணத்திலும் படையினர் புலிகள் மோதல்கள் நடந்துள்ளன. இரு தரப்பிலும் உயிர் சேதங்களும் ஏற்பட்டுள்ளன.

பதவியாகுள காவலரன் தாக்குதல் மூலம் இராணுவ ரீதியில் தாம் பலமாக உள்ளதை வெளிப்படுத்தவே புலிகள் விரும்பியதாக தெரிகிறது.

பலவீனமான நிலையில் தாம் யுத்த நிறுத்தக் கோரிக்கையை முன்வைக்கவில்லை என்று தெரிவிப்பதே புலிகளது நோக்கம்.

தொடர் தாக்குதல் நடத்தப்படும் பட்சத்தில் அது தொடர்பான செய்திகள் தென்னிலங்கை பத்திரிகைகளில் வெளிவரும். அதனால் புதிய அரசாங்கம் பற்றிய அவநம்பிக்கை தோன்றும். பேச்சு முயற்சிகளை பிரசாரப்படுத்தும் அரசாங்கத்திற்கு சங்கடமான நிலை உருவாகும். அதனால் யுத்த நிறுத்தம் ஒன்றுக்கு அரசாங்கம் முன்வரக்கூடும் என்று புலிகள் தரப்பில் எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிகிறது.

மறுபுறத்தில் படையினரது தாக்குதல் நடவடிக்கைகள் பற்றிய செய்திகளை புலிகள் உடனுக்குடன் யாழ் குடாநாட்டு மக்களுக்கு தெரியப்படுத்தி வருகிறார்கள்.

அரசாங்கம் பேச்சுக்கு முயலும் அதே சமயத்தில் படையினர் பழைய போக்கில்தான் நடந்து கொள்கிறார்கள் என்பதை யாழ் மக்களுக்கு தெரிவிப்பதே புலிகளின் நோக்கமாகும்.

தென்னிலங்கை பத்திரிகைகள் வெளியிடும் பேச்சு முயற்சிகள் பற்றிய செய்திகள் போலவே யாழ் குடாநாட்டில் மூன்று தமிழ் தினசரிகளும் செய்திகளை வெளியிடுகின்றன.

ஆயினும், யாழ் குடாநாட்டு பத்திரிகைகளில் படையினர் மீனவர்கள் மீதும், கிழக்கு மாகாணத்தில் பொதுமக்கள் மீதும் தாக்குதல் நடத்துவது பற்றிய செய்திகளும் முக்கியத்துவப்படுத்தப்படுகின்றன.

யாழ் குடாநாட்டில் உள்ள புலிகளின் குரல் வானொலியிலும் படையினரது நடவடிக்கைகள் பற்றிய அதிருப்திகள் தெரிவிக்கப்படுகின்றன.

கடந்த 07.09.94 அன்று புலிகளின் குரல் வானொலி பின்வரும் செய்திக் குறிப்பை வெளியிட்டது:

"திருமலை மாவட்டத்தில் இராணுவம் கொடூரமான தாக்குதலை நடத்தியுள்ளது. 03.09.94 அன்று வெருகல் மற்றும் பல இடங்களில் 25ற்கு மேற்பட்ட மக்கள் இராணுவத்தால் தாக்கப்பட்டனர். வீடுகள் எரிக்கப்பட்டன. 6ம் திகதிவரை தாக்குதல் நடந்துள்ளது. புதிய ஆட்சியில் அமைதியை எதிர்பார்த்த மக்கள் மீது தாக்குதல் நடந்துள்ளது" இவ்வாறு அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

புதிய அரசாங்கம் இனப்பிரச்சனையைத் தீர்க்கும் என்று ஏற்பட்டுள்ள நம்பிக்கைக்கு மாறான கருத்துக்கள் எதனையும் புலிகள் தெரிவிக்கவில்லை.

ஆனால், படையினர் போக்கில் மாற்றமில்லை என்பதை மக்கள் அறிந்துகொள்வதன் மூலம் புதிய அரசாங்கம் வந்த பின்னரும் பெரிய மாற்றமெதுவும் ஏற்பட்டுவிடவில்லை என்பதை புலிகள் மறைமுகமாக தெரியப்படுத்தியே வருகிறார்கள்.

மறுபுறத்தில், படையினரது நடவடிக்கைகளை உடனே கட்டுப்படுத்த அரசாங்கமும் விரும்பவில்லை.

படையினர் மத்தியில் புலிகள் தொடர்பான சந்தேகங்கள் இருப்பதும், அதே சந்தேகங்கள் அரச தரப்புக்கு இருப்பதுவுமே படைகளது நடவடிக்கைகள் தொடரக் காரணமாகும்.

சென்ற அரசாங்கம் விட்ட தவறை நாம் விடமாட்டோம் என்று பிரதமரும் அடிக்கடி கூறிவருவதில் படையினரை உற்சாகமிழக்கச் செய்ய புதிய அரசாங்கம் விரும்பாது. அதனால் முகாம்களுக்குள் படையினரை இருக்குமாறு உடனே உத்தரவிட முனையாது என்றே தெரிகிறது.

அதனால் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் போர் நிறுத்தம் ஒன்றை மேற்கொள்வதால் ஏற்படக்கூடிய சாதக பாதகங்கள் குறித்தும் அரசாங்க தரப்பினர் ஆராய்ந்து வருகின்றனர்.

போர் நிறுத்தம் தற்போது செய்யப்படுமானால் ஜனாதிபதித் தேர்தல் முடியும் வரையாவது அதனை கடைப்பிடித்தே தீரவேண்டும். இடையில் முறிந்து போனால் எதிர்தரப்பினர் அரசாங்கத்தின் மீது குற்றம்சாட்ட வழி செய்வதாகிவிடும் என்றும் கருதப்படுவதாக தெரிகிறது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட முன்னரே தேர்தல் பிரசாரங்கள் முடுக்கி விடப்பட்டுவிட்டன.

ஐ.தே.கட்சி வேட்பாளர் திரு.காமினி திசநாயக்கா சுவரொட்டிகளை வெளியிட்டு பிரசார களத்தில் குதித்துவிட்டார்.

பொ.ஐ.முன்னணி வேட்பாளராக பிரதமர் திருமதி சந்திரிக்காவே போட்டியிடுவதும் உறுதி என்ற நிலையில் பிரசாரங்கள் ஆரம்பித்துவிட்டன.

இந்நிலையில் ஜனாதிபதித் தேர்தலை சுற்றியே இனப்பிரச்சனை தீர்வு முயற்சிகளும் அமையும் என்று அரசியல் பார்வையாளர்கள் கூறுகின்றனர்.

# அமைச்சரிடம் படைவீரர்களின் 6 கேள்விகள்

## "பிரபா மீது சட்ட நடவடிக்கை வருமா?"

யாழ்ப்பாணம் பலாலி இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவ வீரர்களின் கேள்விகள் அடங்கிய கடிதம் ஒன்றை கொழும்பில் இருந்து வெளிவரும் சிங்கள வாரப் பத்திரிகையான 'ராவய' வெளியிட்டுள்ளது.

பாதுகாப்பு பிரதி அமைச்சர் திரு. அநுர ரத்வத்த சமீபத்தில் பலாலி இராணுவ முகாமுக்கு விஜயம் செய்திருந்தார்.

பலாலி இராணுவ வீரர்களால் 'ராவய'விடம் கையளிக்கப்பட்ட கடிதத்தில் உள்ள கேள்விகள் பிரதி பாதுகாப்பு அமைச்சரை நோக்கியவையாகவே அமைந்துள்ளன.

'ராவய' வெளியிட்டுள்ள கடிதத்தில் உள்ள விபரங்கள் கீழே தரப்படுகின்றன:

1. சமாதான முயற்சி வெற்றியளிக்கும் பட்சத்தில் எல்.ரி.ரி.ஈ இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கெதிராக உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மட்டத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா?
2. தமிழர்கள் இலங்கை முழுவதும் பரந்து வாழ்வதைப் போன்று சிங்கள மக்களும் யாழ்ப்பாண பகுதியில் குடியேறி வாழ்வதற்கு வழியமைத்துக் கொடுக்கப்படுமா? (சம்பத்தில் நடந்த தேர்தல் முடிவின்படி சிங்கள மக்கள் இனவாதிகளல்ல என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது)
3. சமாதான முயற்சி வெற்றியளிக்கும் பட்சத்தில் எல்.ரி.ரி.ஈ இயக்கத்தினரால் நியமிக்கப்பட்டுள்ள பொலிஸ் அதிபர்கள், சட்டத்தரணிகள், பொலிஸ் வீரர்கள், தபால் போ/வ முறைகள், வங்கிகள் போன்றவைகள் பற்றி எவ்வாறான நடவடிக்கை எடுக்கப்படும்?
4. சமாதான முயற்சி வெற்றியளித்த பின்பு எல்.ரி.ரி.ஈ. இயக்கம் வைத்துள்ள ஆயுதங்கள் மீளப் பெறப்படுமா? அல்லது அவர்களையும் நிரந்தரப் படைகளாக இயங்க அனுமதிக்கப்படுமா?
5. சமாதான முயற்சி தோல்வியடைந்து யுத்தம் தொடங்கப்படுமானால் பாதுகாப்பு அமைச்சர் என்ற முறையில் நாட்டுப் பற்றோடு யுத்த முனைக்கு வந்து படைகளை வழிநடத்திச் செல்வீர்களா? அவ்வாறான சந்தர்ப்பத்தில் வெற்றி வாய்ப்பை நோக்கி நெருங்கிக் கொண்டிருக்கும்போது எல்.ரி.ரி.ஈ. சமாதானத்திற்கழைத்தால் அத் தருணம் நீங்கள் எவ்வாறான முடிவெடுப்பீர்கள்?
6. சமாதானம் ஏற்பட்ட பின்பு இராணுவத்தில் 5,12,22 வருடங்கள் கடமையை பூர்த்தி செய்த இராணுவ வீரர்களை இராணுவத்திலிருந்து விலக்கிச் செல்ல அனுமதிப்பீர்களா? ■

## அநுரா போனார் அமெரிக்காவுக்கு!

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் மூலமாக பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட திரு.அநுரா பண்டாரநாயக்க மனமுடைந்த நிலையில் இருப்பதாக சென்றவார முரசில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது திரு.அநுரா பண்டாரநாயக்கா அமெரிக்காவுக்கு சென்றுவிட்டார்.

ஜனாதிபதித் தேர்தல் முடிவடையும்வரை அவர் அமெரிக்காவில் தங்கியிருக்கக்கூடும் என்று நம்பப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் தமது சகோதரியாரை எதிர்த்து பிரசாரம் செய்வதை அவர் தவிர்க்க விரும்புவதாக கூறப்படுகிறது.

இதேவேளை திரு.அநுராவை சுதந்திரக் கட்சிக்குள் மீண்டும் சேர்க்கும் முயற்சிக்கு பிரதமர் சந்திரிக்கா அதிக விருப்பம் தெரிவிக்கவில்லை என்று தெரிகிறது.

இதே சமயம் ஐக்கிய நாடுகள் சபைக்குரிய இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியாக திரு.அநுராவை நியமிக்க அரசாங்க வட்டாரங்கள் விரும்புவதாகச் சொல்லப்படுகிறது.

அவ்வாறு நியமித்தால் அநுரா இலங்கை அரசியலில் நேரடியாக ஈடுபடாமல் விலகும் சந்தர்ப்பம் ஏற்படும். யாரையும் பகைத்துக் கொள்ளவும் வேண்டியிராது என்று அநுராவின் குடும்ப நண்பர்கள் கூறுகிறார்கள்.

## கருச்சிதைவு அதிகரிப்பு!

1990ம் ஆண்டு முதல் யாழ் குடாநாட்டில் கருச்சிதைவு எண்ணிக்கை அதிகரித்து வருவதாக அங்கிருந்து கிடைத்த புள்ளிவிபரம் ஒன்று தெரிவிக்கிறது.

கருச்சிதைவு அதிகமாகியுள்ள காரணமும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர்ச்சூழல்,போசாக்கின்மை, அதிர்ச்சிகள் போன்ற காரணங்களால் கருச்சிதைவுகள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சீரான விலை இல்லை

தற்போது பொருளாதாரத் தடையில் ஒரு பகுதி நீக்கப்பட்டுள்ள போதும் போக்குவரத்து கஷ்டம் காரணமாக யாழ்ப்பாணத்தில் சீரான விலைகளுக்கு பொருட்களை வாங்க முடியாத நிலை காணப்படுகிறது.

# "போர் நிறுத்தம் பற்றி கூறாதது வருத்தம்"

## பிரதமருக்கு பிரபா கடிதம்

புலிகள் இயக்கத் தலைவர் திரு.வே. பிரபாகரனுக்கு பிரதமர் திருமதி சந்திரிக்கா அனுப்பி வைத்த கடிதத்துக்கு பிரபாகரன் பதில் அனுப்பிவைத்துள்ளார்.

பிரபாவுக்கு பிரதமர் அனுப்பிய கடிதத்தையும் புலிகள் யாழ்ப்பாணத்தில் வெளியிட்டுள்ளனர்.

அக்கடிதத்தில் பிரதமர் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்:

**அன்பின் பிரபாகரன் அவர்களுக்கு,**

யாழ்ப்பாண மற்றும் வடபகுதி மக்கள்மீது முன்னைய அரசு விதித்திருந்த தடையை நாங்கள் நீக்கியிருந்தமை எமது நல்லெண்ணத்தை காட்டுவதாக தாங்கள் வரவேற்றுள்ளீர்கள். பதில் நடவடிக்கையாக பல ஆண்டுகளாக தடுத்துவைக்கப்பட்டிருந்த 10 பொலிசாரை விடுதலை செய்வதற்கு தாங்கள் நடவடிக்கை எடுத்தமையை நாம் பெரிதும் வரவேற்கிறோம். இது ஒரு நல்லெண்ண நடவடிக்கையாக மட்டுமின்றி வடக்கு-கிழக்கு பிரச்சனைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணும் எமது ஆக்கபூர்வமான முயற்சிக்கு ஒரு எடுத்துக்காட்டாகவும் நாம் கருதுகிறோம்.

சமாதானப் பேச்சுவார்த்தைக்கு தயராக இருப்பதாக நீங்கள் விடுத்த அறிக்கையை நான் மிகவும் ஆர்வத்துடன் நோக்கினேன். இது பற்றி நாம் மிகுந்த கடமையுடன் செயற்பட்டு வருகிறோம். எமது பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு நீங்கள் உங்கள் பிரதிநிதிகளை நியமிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தடை நீக்கப்பட்ட பொருட்கள் தாராளமாக யாழ்ப்பாண் மக்களுக்கு கிடைக்க வேண்டுமென்பதையே நாம் விரும்புகிறோம். பருத்தித்துறை ஊடாக மட்டுமே இந்தப் பொருட்களை அனுப்பக்கூடியதாக இருப்பதால் எமக்கு சிரமங்கள் தோன்றும். எனவே யாழ்ப்பாண மக்களுக்கு பொருட்கள் தாமதமின்றி கிடைக்கக்கூடிய வழி வகைகள் பற்றி பரிசீலனை செய்ய விரும்புகிறோம்.

ஆரம்ப பேச்சுக்களை நடத்துவதற்காக நாம் நியமிக்கப்போகும் பிரதிநிதிகள் இவ்விடயம் தொடர்பான நடைமுறைப் பிரச்சனைகள் குறித்து பேச்சு வார்த்தைகள் நடத்தலாமென நாம் கருதுகிறோம்."

இவ்வாறு பிரதமர் சந்திரிக்கா தனது கடிதத்தில் கூறியிருந்தார்.

இக்கடிதத்திற்கு பிரபாகரன் அனுப்பி வைத்துள்ள பதில் கடிதத்தில் உள்ள வாசகங்கள் பின்வருமாறு:

**அன்புள்ள பிரதம மந்திரி அவர்களுக்கு,**

உங்களின் கடிதம் கிடைக்கப்பெற்றேன். மகிழ்ச்சி.

எமது காவலில் இருந்த 10 காவல்துறை கைதிகளை நாம் விடுதலை செய்தமை எமது நல்லெண்ணத்தைக் காட்டுவதாக தாங்கள் வரவேற்றுள்ளீர்கள். அதையிட்டு மகிழ்வடைகிறோம்.

பொருளாதார தடை நீக்கப்பட்ட பொருள்கள் உடனடியாக எமது மக்களுக்கு கிடைக்க வேண்டுமென நீங்கள் விரும்புவதை நாம் வரவேற்கிறோம். இந்த விடயத்தில் நாமும் அதே அக்கறையுடையவர்களாக இருக்கிறோம். மிகவும் அவசரமான இந்தப் பிரச்சனைக்கு தீர்வு காண விரும்பும் உங்கள் முயற்சிகளுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்குவோம்.

மின்சார விநியோகத்தை மீளவமைக்கவும், தொழிற்சாலைகளை திருத்தவும், நீர்ப்பாசன திட்டங்களை சீரமைக்கவும் உங்கள் அரசாங்கம் முடிவு செய்திருப்பதை நாம் வரவேற்கிறோம்.

இந்த சீரமைப்பு பணியில் ஈடுபடப் போகும் அரசாங்க-தொழில் நுட்ப அதிகாரிகளுக்கு எமது இயக்கம் சகல ஒத்துழைப்புக்களையும் வழங்கும் என உறுதி கூறுகிறோம்.

சமாதான பேச்சுக்காக நாம் விடுத்த வேண்டுகோளுக்கு சாதகமான முறையில் நீங்கள் பதிலளித்திருப்பதை வரவேற்கிறோம்.

ஆரம்ப பேச்சுக்களை ஆரம்பிக்க பிரதிநிதிகளை நியமிக்குமாறு கேட்டிருந்தீர்கள். பூர்வாங்க பேச்சுக்களை நடத்துவதற்கு கீழ்காணும் பிரதிநிதிகளை நாம் நியமித்துள்ளோம்.

1. தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர்- கரிகாலன்.
2. யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர்-இளம்பரிதி.
3. தமிழீழ பொருளாதார மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர்-ஆ.ரவி
4. தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர்-டொமினிக்.

போர் நிறுத்தம் சம்பந்தமான எமது யோசனைகள் பற்றி நீங்கள் உங்கள் கடிதத்தில் எதுவும் குறிப்பிடாதது குறித்து நாம் வருந்துகிறோம்.

சமாதானம்-உண்மையான இயல்பு நிலையை தோற்றுவித்தல் போன்றவற்றை கட்டியெழுப்பும் பணிக்கு போர் நிறுத்தம் அவசியம் என்பதை தாங்கள் அறிவீர்கள். எனவே இவ்விடயம் குறித்து நீங்கள் அவசியம் கவனத்தில் கொள்வீர்கள் என்று நம்புகிறோம்."

இவ்வாறு பிரபா தனது பதில் கடிதத்தில் தெரிவித்துள்ளார். சிறிலங்கா பிரதமருக்கு தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் அனுப்பிய கடிதம் என்ற வாசகங்களோடு புலிகளது வானொலியும், யாழ் குடாநாட்டு பத்திரிகைகளும் இதனை பிரசுரித்துள்ளன.


பூர்வாங்க பேச்சுக்கு நியமிக்கப்பட்டுள்ள புலிகளது பிரதிநிதிகளில் முதலாவதாக உள்ள கரிகாலன் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட புலிகள் அமைப்பு தலைவராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

போர் நிறுத்தம் ஒன்றின் அவசியத்தை புலிகள் வலியுறுத்தியுள்ளதால் அது தொடர்பான முடிவினை வெளியிட வேண்டிய அவசியம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

**கொச்சிக்காப் போடியார் எழுதுவது**

# வர்ணம் மாறிய பேருந்துகள் அம்பாறை போச்சுதண்ணே!



அய்யாத்துரை அண்ணே,

போன கிழம எழுதுவமெண்டா, எங்க நேரம் இல்லாம போயித்து. இலக்சன் கிலக்சன் எண்டு ஓடி ஆடித்திரிஞ்சத்தால டவுனுக்க எட்டியும் பாக்கல்ல. கொத்திபா கொலப் பக்கத்தால உட்டுக் கிடாவி, கொஞ்சம் வோட்ட கதிரைக்கு உடைப்ப மெண்டு ஓடினா, எங்க நாம போற பக்கமெல்லாம் புலி கிடந்த பத்தயெண்டா...!

மங்கிக்கட்டு, மண்டபத்தடி, கன்னங்குடா, கரையாக்கந்தீவு, கரவெட்டி நரிப்புல் தோட்டம், சிங்காரத் தோப்பு, மாடு போட்ட மடு, கண்டு கட்டினகால் இந்தக் கன்னயெல்லாம் அடிச்சி திரிஞ்சி போட்டு நேத்துத்தான் வந்தநான். சும்மா சொல்லொண்ணா-சாதித்தியெண்டுற்று நம்மடதைக்குள்ளயும் போட்டுத்தான் இருக்குதுகள். சனத்த நாம புள சொல்லவும் ஏலா. நாடு பகுதி எண்டு சொல்லுறதுக்கும் இல்ல. அதுகளும் கீறுறதுக்கு தெரிஞ்சி வைச்சிருக்கிங்கள் போல. புலிப்பொடியனுகளும் குறுக்கு மறுக்குமாக வந்து 'புளக்' பண்ணியும் போட்டானுகள். நாமளும் பொய்யையும் சொல்ல ஒண்ணாதானே? 'பொடியனுகள் வந்திட்டுத்தான் போனானுகள். புதினம் பாக்கிற கணக்கிலயும், ஆக்களப் பாக்கிற கணக்கிலயும் வந்துட்டு போனதுதான். தலைய காட்டித்து பொடியனுகள் போனாலும் இலக்சனுக்கு போன மத்தபாட்டி ஆக்கள் தப்பினம் புளைச்சம் எண்டு டவுனுக்க ஓடி வந்திட்டானுகள்.

இந்த கொச்சிக்காப் போடி சும்மா சாமான்யமானவனா? ஒருவரும் ஒண்டும் சொல்லமாட்டானுகள். மோட்ட சைக்கிளில ஓடிற எண்டாலும் சிக்காராக சங்கிலி பூட்டின கண்ணாடிய கண்ணில பொருத்தித்தான் ஓடுவன். பிசல் இல்ல எந்தப் பேய் வந்தாலும் கண்ணில இருந்து கண்ணாடி உசும்பாது.

திருப்பித் திருப்பி ஒனக்கிட்ட இந்த கொச்சிக்காப் போடிர சமத்துகள சொல்லுறதால எனக்கு விசர் வந்தாலும் வரும்போல. உனக்குத் தெரியுந்தானே-நான் என்ன சும்மா மனுஷனா? ஊரத்திண்டு உன்னிச்சயில கை கழுவின ஆள். உன்னிச்ச பண்ட உயத்திரன் உயத்திரன் எண்டு சொல்லித்து மூண்டு பொட்டி மண்ண உதறிப்போட்டு மூண்டர இலட்சம் காச கைக்குள்ள பொத்துனதும் தெரியுந் தானே? எனக்கு இந்த ஒழிச்சிக் கிளிச்சி கதைக்கிற ஆக்களோட ஒள்ளுப்பமும் புடித்தமில்ல.

இண்டைக்கு ஒருவன் சொல்லட்டும் இந்த மட்டக்களப்பு கன்னயில-மூச்சி உடமாட்டான். அவ்வளவு சிக்காரா இருக்கன் நான்.

அய்யாத்துரை அண்ணே!

இலக்சன் சத்தமும் நிண்டு போயித்து. காத்தடிச்சி ஓஞ்ச மாதிரி கிடக்கு மட்டக்களப்பு. நம்மட கோட்டமுனைப் பாலத்துப் பக்கத்தில நிக்கிற கத்தாக்கு மரத்துக்குக் கீழதான் ஆக்கள் கொஞ்சம் நிக்கினம். என்னவாம் எண்டா, இலக்சன வச்சி கந்தப்பாக்கினமாம். இதுதான் புதினம். சில எம்.பிமாருக்கு நல்ல ஏச்சாம்.

பெரிய புதினம் என்னவெண்டா, நம்மட மட்டக்களப்பு டிப்போவில கிடந்த பஸ்ஸை யெல்லாம் புடிச்சி பூசுபூசெண்டு பூசிப் போட்டானுகள். பஸ்ஸில நடுச் சென்ரறில கோழி முட்ட வட்டமும் போட்டு, நீலக்கோடும் இழுத்து சந்திரிக்காவிட போட்டோவும் ஒட்டி பஸ்ஸுகளெல்லாம் 'பெரிய கலாதி'.

ஊரடங்கு போட்டாலும் நம்மட ஆக்களும் அத பெரிசா எடுக்கல்ல. ஆமிப்படையும் கரச்சல் படுத்தல்ல. தீத்தம் திருவிழா நடத்தயும் குறுக்க நிக்கல்ல.

நம்மட மட்டக்களப்பு கச்சேரியிலயும் ரெண்டு கூட்டம் கூட்டினதாக்கும். கவுண் மேந்து ஆக்கள் கூடத்தானே வேணும்! 'வந்திருக்கிற ஆக்கள் கொஞ்சம் பொறுப்பு- கொஞ்சம் கவனமாக இருங்க எண்டு ஏசண்டுத்துரையும் றக்கோட்ட மாத்திப் போட்டதாம்.

அப்படியெண்டா நம்மட முந்தின அரசாங்கத்தோட நம்மட கவுண்மேந்து வேலகார ஆக்கள் விசுவாசம் இல்லாம இருந்த எண்டு நம்மட ஏறாவூர் மயிலிப் போடிர மகன் மானாகப் போடி கேட்டுத்துப் போறாரு.

எண்டாலும் எல்லாரும் சத்தே பொறுங்க! சரியாக மனசுக்கு சரியில்லத்தான். இரிக்கிற சவுப்புக்கு கோணர் பார்ல ஒரு அடி அடிச்சித்து வந்தாத்தான் மீட்டர் வேலை செய்யும்.

உண்மையாகச் சொல்லுறன்- அய்யாத்துரை அண்ண! நீங்களும் என்ன அணாப்பாதேயிங்கோ. ஒரு அடி அடிச்சபுறகுதான் கனமாக கதைக்கிறன் எண்டு எண்ணாதேங்க. நம்மட அம்பாறையில ஒரு தமிழன் வரயில்லையே அண்ணே. சரியான கவல எனக்கு. சாப்பிடவும் மனம் இல்ல. இலக்சன் முடிஞ்ச காலத்தில இருந்து தீன் ஊண் ஒண்டுமில்ல. நம்பினா நம்புங்க. அதாலதான் ஒரே தண்ணில தொண்டைக்க ஊத்துற வேலய எடுத்திருக்கன்.

ஊர் மனையில எல்லாம் இலக்சனுக்குள்ள நிமிர்ந்து நடந்தவனுகளெல்லாம் இப்ப குனிஞ்சி நடக்கானுகள். விலாசமில்லாதவனெல்லாம் நிமிந்து நடக்கானுகள். கொஞ்சம் உறுக்கியும் கதைக்கானுகள். இது பெரிய ஆக்கினையாக வந்திருக்கு.

கெதியா கொழும்புக்கு வந்து ஒரு புடி புடிச்சாத்தான், இஞ்ச வெடிவால் முறுக்கின ஆக்களுக்கு மருந்து கட்டலாம் எண்டு நினைக்கன். மருந்தும் சும்மா கிம்மா இந்தப் போடி கட்டுவான் எண்டு நினைக்கக் கூடாது. ஓடிஆட முடியாத சிக்காரான மருந்து கட்டவேணும்!

## மொழி தெரியாத மேற்பார்வையாளர்கள்

அநுராதபுரம் நகரில் அண்மையில் நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையின் போது தமிழ் மொழி மூல மாணவர்கள் தோற்றிய நிலையத்தில் தமிழ் மொழி தெரிந்த மேற்பார்வையாளர் இல்லாமை காரணமாக பரீட்சைக்குத் தோற்றிய ஐந்தாம் ஆண்டு மாணவர்கள் மிகவும் கஷ்டப்பட்டனர்.

இப்பரீட்சை சம்பந்தமான அறிவுறுத்தல் களை தமிழில் சொல்லாமையால் இவர்களால் இவற்றை விளங்கிக்கொள்ள முடியாமல் இருந்ததாக பெற்றோர்கள் தினமுரசுக்கு முறையிடுகின்றனர்.

அனுஷா

## தளபாடத் தட்டுப்பாடு

திருகோணமலை மாவட்டத்தில் பெரிய பாடசாலையாக விளங்கும் தி/அல்-அக்ஷா மகாவித்தியாலயத்தில் தளபாடம் தட்டுப்பாடு காணப்படுகின்றது. இப்பாடசாலையில் இரண்டாயிரத்து ஐந்நூறுக்கு மேற்பட்ட மாணவர்கள் படிக்கின்றனர். ஆனால் மாணவர்களின் தொகைக்கேற்ப தளபாடங்கள் குறைவாகவே காணப்படுகின்றன. இதனால் சில மாணவர்கள் தளபாடம் இல்லாமல் ஏனைய மாணவர்களின் தளபாடத்தை திருடிக் கொண்டு படிக்கின்றார்கள். தளபாடத்தை திருடக் கொடுத்த மாணவர்கள் மறுநாள் காலையில் அவர்களுடைய தளபாடங்களை தேடி அலையும் காட்சியை கண்களால் பார்க்க முடிகிறது.

ஆகவே இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனைக் கவனத்தில் கொண்டு தி/அல்-அக்ஷா மாணவர்களின் தளபாட அல்லலைத் தீர்க்குமாறு இப் பாடசாலை மாணவர்களின் சார்பில் தினமுரசு வாயிலாக கேட்டுக் கொள்கின்றேன்.

எம்.ஐ.முஜிப் ரகுமான்-கிண்ணியா-1.

## நீர் வசதி கிடைக்குமா?

புத்தளம் மாவட்டத்தின் புத்தளம்-கொழும்பு பிரதான பாதையில் உள்ள முந்தல், மங்கள எலிய, மதுரங்குளி ஆகிய மூன்று ஊர்கள், பெரிய கடைத் தெருவாகும். இம்மூன்று ஊர்களில் குடிப்பதற்கோ, குளிப்பதற்கோ நன்னீர் இல்லை. இதனால் இம்மூன்று ஊர் மக்கள் நன்னீர் உள்ள கிராமங்களுக்குப் போய் குளித்துவிட்டு, குடிப்பதற்காக நீரையும் கொண்டு வருகிறார்கள். அது மட்டுமா? இம்மூன்று ஊரில் உள்ள சாப்பாட்டுக்கடைகளுக்கு நீர் அவசியம். இக்கடைக்காரர்கள் பணம் கொடுத்து வாங்குகிறார்கள்.

இக்குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய விரைவில் குழாய் மூலம் நீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவும்.

புத்தளம் நிருபர்.

## போதிய ஊதியமுமில்லை—நியமனம் நிரந்தரமுமில்லை!

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பில் சுகாதார சேவைத் தொண்டர்களாக சுமார் ஒன்றரை வருடங்களுக்கு மேலாகப் பணியாற்றி வரும் 20 யுவதிகள் தமக்கு நிரந்தர நியமனம் கிடைக்காதா என எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

பல்வேறு வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு ஏற்பட்டுள்ள இவ்வேளையிலும் இத்தொண்டர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவாக ரூபா 600.00 மாத்திரமே வழங்கப்பட்டு வருகிறது. இத் தொண்டர்கள் கடந்த கலவர கால வேளையில் அகதி முகாம்களில் நன்கு பணியாற்றியவர்களாவர். தற்போது இவர்கள் குடும்பநல சுகாதார சேவை அலுவலர்களுடன் வீடு வீடாகச் சென்று சௌக்கியப் பணியாற்றி வருகிறார்கள்.

## என்றும் மணி 12

கொழும்பு கிராண்ட்பாஸ் சந்தியில் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் நிர்மாணிக்கப்பட்ட பிரமாண்டமான மணிக் கூட்டுக் கோபுரம் கடந்த பல மாதங்களாக பழுதடைந்த நிலையில் எப்போதும் 12 மணியையே காட்டி நிற்கிறது. பொது மக்களுக்கு பெரும் பயனளித்து வந்த இந்த மணிக்கூட்டுக் கோபுரம் ஒலியிழந்து செயலிழந்து அமைதியாக காட்சியளிப்பதைப் பார்த்து மக்கள் பெரும் கவலை கொண்டுள்ளனர்.

பெருந்தொகை செலவில் அமைக்கப்பட்ட இம்மணிக்கூட்டுக் கோபுரத்தின் பரிதாபநிலையினை பொதுமக்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவித்து நடவடிக்கை எடுக்குமாறு பணித்த போதிலும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால் 'புகார் பெட்டி'மூலம் இம்மணிக்கூட்டுக் கோபுரத்தின் செயற்பாட்டுக்கு சம்பந்தப்பட்டவர்கள் கவனத்திற் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அவ்வல்ஷாவியா அக்ரம்-கொழும்பு-14.

## புகார் பெட்டி


## விளம்பரப் பகுதி



### மலையாள மாந்திரீகம்

27 வருடங்களாக மலையாள மாந்திரீக துறையில் நுணுக்கமாக நான் கற்றறிந்த வகையில் இக்காலங்களில் அவ்வப்போது அவரவர் குறைகளுக்கு என்ன பரிகாரம் என அச்சொட்டாக அவ்வேளைகளிலே மலையாள பகவதி வெளிச்ச வீடாக எனக்கு காட்டிக் கொடுக்கின்றது.

இதையொட்டியே வளர்ந்த எனது நிறுவனம் வரையறுக்கப்பட்ட கம்பனியாக மாறியது. அத்துடன் நவீன உலகத்துக்கு தகுந்தவாறு என்னிடம் மாந்திரீகம், ஜோதிடம், கைரேகை இவைகளுக்கான அதி அற்புத கம்பியூட்டர் உண்டு. உங்கள் குறை என்ன? காதல் தோல்வியா? கல்யாணம் நடக்கவில்லையா? நினைத்தது நினைத்தவாறு நடக்கவேண்டுமா? காதலுக்காக சாவா? வாழ்வா என நினைப்பதை விட்டு என்னை சந்திக்கலாமே.

இவ்வாண்டு மாந்திரீக சக்தியின் வெற்றி பெற்ற ஜபிதா இதோ?

இவ்வாண்டு மலையாள மாந்திரீக காந்த சக்தியும் வெற்றியும்:

நிறைவேறாத காதல் வசியம்- 100/97
கடல் கடந்து செயல் புரியும் காதல் வசியம்- 100/97
கணவன் மனைவி பிணக்கு- 100/45
பெற்றோர் விரும்பாத காதல்-100/87
குத்தகை குடிமிருப்போர் பிரச்சனை-100/33
தீரா ஆஸ்துமா நோய்- 100/100
திருமணத் தங்குதடை நிவர்த்தி-100/97
குடிபோதை நிவர்த்தி- 100/97
கல்வி ஞான விருத்தி- 100/72
சகல வியாபார விருத்தி- 100/83
மீன்பிடி, பண்ணை, ஆடு,மாடு,கோழி வளர்ப்பு- 100/27
புத்திர பாக்கியம்-100/33
பிசாசு தோஷம், சூனிய நிவர்த்தி-100/97

கொழும்பில் மாதந்தோறும் மாதக் கடைசியில் 30,31 திகதிகளில் தான தர்மமும் துர்க்கை உச்சாட பூசை காலை 10 மணிமுதல் மாலை 6 மணிவரை நடைபெறும். அன்று நிச்சயம் உண்மை அறியலாம்.

**தலைமைப்பீடம்**
P.K.சாமி JDGAN
(மாந்திரீகச் சக்கரவர்த்தி)
சிறீ துர்க்காதேவி ஆலயம்
32, தினச்சந்தை காம்பிளக்ஸ்
நுவரெலியா.
தொலைபேசி: 052-2508, 052-3039

**கொழும்பு இல்லம்-**
இல: 162,
கொட்டாஞ்சேனை வீதி,
கொட்டாஞ்சேனை.
கொழும்பு-13.
தொலைபேசி: 342463, 342464



### நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்:

| | | |
|---|---|---|
| ஒரு வருடத்திற்கு | ரூபா 440/= | (52 வாரங்கள்) |
| ஆறு மாதங்கள் | ரூபா 225/= | (26 வாரங்கள்) |
| மூன்று மாதங்கள் | ரூபா 115/= | (13 வாரங்கள்) |

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுயமுகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல:1772
கொழும்பு

THINAMURASU VAARAMALAR
P.O.BOX: 1772
COLOMBO

என்ற முகவரிக்கு கடிதங்களை அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.



### பாதுகாப்பாக கவனிக்க வேண்டுமா?

உங்கள் வீட்டை, பாதுகாப்பாக பரிசுத்தமாகப் பராமரிக்க ஒரு குடும்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா? கொழும்பு 13 இல் மட்டும்- வெளிநாடு செல்பவர்களாயினும் உள்ளூரில் வசிப்பவராயினும் நம்பிக்கையானவர்கள் தொடர்பு கொள்ளவும். தங்கும் காலத்திற்கு வாடகை செலுத்தப்படும். முற்பணம் செலுத்தப்படமாட்டாது.


-தொடர்பு கொள்ளவும்-

தொலைபேசி இலக்கங்கள்: 336169, 071 28505, 333330, 071 31423


### 9வது நினைவு அஞ்சலி

மண்ணில்:02.10.1937 விண்ணில்:03.10.1985

திதி:24.09.1994



கணபதி சுப்பிரமணியம்
(மல்லாகம்)

அன்பிற்கிலக்கணமாய்
பண்பிற் கோர் பெட்டகமாய்
பாரினிலே அவதரித்து
பேரோடும் புகழோடும்
பெருவாழ்வு வாழ்ந்ததன்பின்
விண்ணுலகம் தனைநாடி
விரைந்தோடி ஆண்டுகளோ
ஒன்பதும் நிறைந்தாலும்
ஒண்ணாது உங்களுடன்
ஒருங்கிணைந்து வாழ்ந்த
ஒப்பற்ற காலமதை மறந்திடலாமோ.
உத்தமரே உங்களது
உதிரத்திலுதித்தோரும்
கரம்பற்றி காதலுடன்
காலமெல்லாம் வாழ்ந்தவளும்
கலங்குகின்றோம் உம்பிரிவால்
கைகூப்பி வணங்குகிறோம்
காக்கும் கடவுளவன் நீ என்றே!

பிரிவால் துயருறும்:
மனைவி: சு.செல்வமணி
மகன்கள்: கலீ,கமல்,விமல்
மகள்கள்: கமலினி, செந்தினி

கிருலப்பனை
கொழும்பு-6.

## குண்டை வெடிக்கவைத்து தற்கொலை

# புலி என்று தமிழக பொலிஸ் சந்தேகம்!

(ஏழுமலை)



குண்டு வெடித்து தற்கொலையாகியுள்ள விஜயன்

**கடந்த 3.9.94 அன்று சென்னையில் விஜயன் என்னும் இலங்கை தமிழ் வாலிபர் ஒருவர் தமிழக பொலிசாரிடம் கைதாக மறுத்து தற்கொலை செய்துகொண்டார்.**

கைத் துப்பாக்கியால் பொலிசாரை சுட முயன்றபோது அது இயங்கவில்லை. எனவே தன்னிடமிருந்த கைக்குண்டை வெடிக்கவைத்து அவர் பலியானார்.

விஜயன் தங்கியிருந்த வீட்டில் இருந்து சக்திவாய்ந்த தொலைத் தொடர்பு சாதனம், பிரபாகரன் பற்றி தமிழக அரசியல்வாதியொருவர் எழுதிய புத்தகம், செக்கஸ்லோவிய தயாரிப்பான 9.மி.மீட்டர் பிஸ்டல் என்பன கண்டெடுக்கப்பட்டன.

விஜயன் தங்கியிருந்த வீட்டின் உரிமையாளர் சுந்தரம் வை.கோபால் சாமியின் கட்சியைச் சேர்ந்தவர் என்று பொலிசார் கூறினர். ஆனால் [illegible] அதை மறுத்துள்ளார்.

இது இவ்வாறு இருக்க [illegible] போல வேறு பல புலிகள் [illegible] உறுப்பினர்களும் [illegible] பதுங்கியிருக்கக்கூடும் என்ற [illegible] தமிழகப் பொலிசார் தமது [illegible] தீவிரப்படுத்தியுள்ளனர். [illegible] சென்னைக்கு வந்த காரணம் [illegible] வென்று கண்டறியும் [illegible] நடைபெற்று வருகிறது.


### வீடியோ படப்பிடிப்பில் முன்னணி நிறுவனம்

**VICTOP RECORDING STUDIO**
**356, GALLE ROAD, WELLAWATTE, COLOMBO-6**

ஆவணி மாதம் பிறந்துவிட்டது. உங்கள் திருமணம் மற்றும் விசேட நிகழ்ச்சிகளை சிறந்த முறையில் Video மூலமும் எடுத்துப் பெற்றுக்கொள்ள முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.

அதுமட்டுமல்ல, மங்களகரமான நிகழ்ச்சிகளை சிறந்த வீடியோ கமராக்களில் பதிவுசெய்வதோடு, ஸ்டில் புகைப் படங்களையும் சிறந்த முறையில் எடுத்துத் தருவோம்.

மற்றும் மங்கள நிகழ்ச்சிகளுக்கு தேவையான அலங்காரப் பொருட்கள் (மேக்கப் செற்) வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

* T.V.—டெக் வாடகைக்கு
* 24 மணி நேரம் குளிரூட்டப்பட்ட எயர்போட்டிற்கான வான் சேவீஸ்.

உங்கள் மின்சார உபகரணங்கள் பழுதடைந்துவிட்டதா? 532453, 078 63749 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் இல்லத்தில் உங்கள் கண்முன் திருத்தித் தரப்படும்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# எக்ஸ்ரே ரிப்போர்ட் — நாரதர்

# பேச்சு முயற்சியும் பிரபாவின் செய்தியும்

அடுத்த காட்சியாக அரசியல் அரங்கில் அரங்கேறப்போவது ஜனாதிபதித் தேர்தல்.

இப்போது இனப்பிரச்சனை தீர்விற்கான பேச்சுவார்த்தை முயற்சிக் காட்சிகள் அரங்கில் தோன்றி வருகின்றன.

தற்போதைய தலைப்புச் செய்திகள் யாவும் பேச்சுவார்த்தையைச் சுற்றியே எழுதப்படுகின்றன.

வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்கள் மூலஸ்தானக் கதவுகள் திறக்கக் காத்திருக்கும் பக்தர்கள் போல யாழ்ப்பாணத்தில் போய் பிரபாகரனைச் சந்திக்க கதவு எப்போது திறக்கும் என்று கியூ வரிசையில் காத்து நிற்கின்றன.

இப்போது பிரபாகரனின் வாயிலிருந்து வரும் ஒவ்வொரு சொல்லுக்கும் மதிப்பு இருக்கிறது.

ஆனால், அவரோ மிக அரிதாகவே வாய் திறக்கிறார்.

ஒரு வெளிநாட்டு செய்தி நிறுவன நண்பர் நகைச்சுவையாக கூறியது இது: "திரு.பிரபாகரன் தனது மக்களையும் அதிகம் பேசவிடுவதில்லை. அதுபோலவே அவரும் அதிகமாக வெளியுலகோடு பேசுவதில்லை."

இரசிக்கக்கூடிய அரசியல் ஜோக் இது.

ஆனாலும், பிரபா காரணம் இல்லாமல் மௌனம் சாதிப்பதில்லை.

யாழ்ப்பாணத்தில் உள்ள பத்திரிகைகளும், உலகின் பல பாகங்களில் இருந்து வெளிவரும் புலிகளது ஏடுகளும் "தமிழ் ஈழத்தின் தேசியத் தலைவர்" என்றுதான் குறிப்பிடுகின்றன.

விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பொறுத்தவரை அதன் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் பிரபாகரன் என்னும் தலைவரை மட்டுமே விசுவாசிப்பவர்களாகவே இருக்கிறார்கள்.

மிகத் தெளிவான ஒரு உண்மை யாதெனில் புலிகளுக்குள் பிரபாகரன் மட்டும்தான் ஹீரோ. ஏனையோர் எவராக இருந்தாலும் தலைவரால் விரும்பப்படும் வரைதான் வெளியே அறியப்பட்டவர்களாக இருப்பார்கள்.

தலைவர் முகம் சுளிக்கும்படி நடந்து கொண்டால், அவ்வாறு நடப்பவர்களின் முகங்களை நாம் காணமுடியாமல் போகலாம்.

பிரேமாவோடு புலிகள் பேச்சு நடத்தியபோது மாத்தையாவும்-யோகியும், அன்ரன் பாலசிங்கமும் புலிகளுக்குள் தீர்க்கமான தலைவர்கள் போலவே வெளியே தெரிந்தார்கள். அன்றைய தலைப்புச் செய்திகளில் அவர்களின் பெயர்களே அடிக்கடி இடம்பிடித்துக் கொண்டன.

அதன்பின்னர் நாலு வருடங்கள் மட்டுமே நகர்ந்து போயிருக்கின்றன.

மீண்டும் ஒரு பேச்சுப் பற்றிய பேச்சுக்கள் பிரமாதமாக அடிபடுகின்றன. மீண்டும் பேச்சுவார்த்தை செய்திகள் தலைப்புச் செய்திகளாக மாறியிருக்கின்றன.

ஆனால், அன்றிருந்தோர் இன்றில்லை. திரு.அன்ரன் பாலசிங்கம் மட்டுமே மிஞ்சியிருக்கிறார். திரு.யோகரத்தினம் யோகி, மாத்தையா ஆகியோர் எங்கே என்ற செய்தியைக்கூட எவரும் அறிய முடியவில்லை.

யோகி உயிரோடு இருக்கிறார். ஆனால் புலிகளோடு இல்லை. ஆனால் மாத்தையா...?

"யாக்கை நிலையாமை" என்று திருவள்ளுவர் சொன்னது புலிகளுக்குள் பிரபாவைத் தவிர அனைவருக்கும் சாலவும் பொருந்தும்.

மாத்தையாவின் பின் பிரபாகரனுக்கு அடுத்தவராக கருதப்பட்டவர் பேபி சுப்பிரமணியம்.

வட பகுதிக்கு சென்ற சமாதான தூதுக்குழுக்களோடு நடந்த பேச்சுவார்த்தைகளில் புலிகளின் தரப்பில் பிரபாகரனது பிரதிநிதியாக இளங்குமரன் என்னும் பெயரில் கலந்துகொண்டவர் பேபி சுப்பிரமணியம்.

அவர் இப்போதும் இருக்கிறார்; என்றாலும் முன்னர்போல முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை.

அரசோடு பேச்சுவார்த்தைக்கான முயற்சிகள் பற்றிய கருத்துக்கள் வெளியிடுவோர் பட்டியலிலும் புலிகளின் தரப்பில் பேபியின் பெயர் காணப்படவில்லை.

அன்ரன் பாலசிங்கம், புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் தமிழ் செல்வன் ஆகியோரின் பெயர்களே தற்போது அறியப்படுகின்றன.

இதற்கிடையே வெளிநாடுகளில் உள்ள புலிகள் அமைப்பு பிரதிநிதிகளையும் செய்தி நிறுவனங்கள் இருக்க விடுவதில்லை.

முன்னர் புலிகளின் நடவடிக்கை பற்றி என்ன செய்தியறிய வேண்டுமானாலும் இலண்டன் பி.பி.சியில் உள்ள நிருபர்கள் உடனே சுழற்றும் தொலைபேசி இலக்கம் திரு.லோரன்ஸ் திலகருக்கு சொந்தமானது.

"தெரியாது என்று சொல்லக் கூடாது, மரியாதையில்லை" என்பதால் திலகரும் பட்டும் படாமல் ஏதாவது கூறிவிடுவார்.

அதன்மூலம் திலகர் சகல சூக்குமங்களும் அறிந்த ஒருவர் என்று கருதப்பட்டார்.

பிறகென்ன 'யாக்கை நிலையாமை' தத்துவப்படி "திலகர் சற்றே அடங்கியிரும் பிள்ளாய்" என்று தலைவர் சொல்லிவிட்டதாக ஒரு தகவல். இப்போது திலகர் தேவையில்லாமல் வாய் திறப்பதில்லை.

ஆயினும் இம்முறை இலண்டன் பி.பி.சி இலண்டனில் உள்ள புலிகள் இயக்க பிரதிநிதி அன்ரன் ராஜாவை வலைபோட்டுப் பிடித்து, புதிய அரசாங்கம் பற்றி கருத்துக் கேட்டிருந்தது.

அவரும் 'புதிய அரசாங்கத்தை வரவேற்கிறோம். ஆனால் பிரச்சனையை தீர்க்கும் பலம் இருக்கிறதா அரசிடம் என்பது சந்தேகம்' என்றெல்லாம் பேட்டி கொடுத்தார்.

உடனே ஒரே நாளில் அன்ரன் ராஜாவை உலகமறிந்து கொண்டது.

தலை இருக்க வால் ஆடக்கூடாது என்பார்கள். அது அன்ரன் ராஜாவுக்கு பேட்டி கொடுக்கும்போது புரிந்திருக்காது.

ஆனால், யாழ்ப்பாணத்தில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு.அன்ரன் பாலசிங்கம் தனது பேட்டியில், "வெளிநாட்டில் உள்ள எமது பிரதிநிதிகளோடு பேசத் தேவையில்லை. தலைமை இங்குதான் (யாழில்) இருக்கிறது. எம்மோடு பேசலாம்" என்று கூறியிருந்தார்.

திலகரோ-அன்ரன் ராஜாவோ அல்லது வேறு எவருமோ புலிகள் சார்பில் பேச அதிகாரம் படைத்தவர்கள் அல்ல என்பதையே திரு.பாலசிங்கம் தெளிவுபடுத்தியதாகக் கொள்ளலாம்.

உண்மையில் பாலசிங்கத்தின் கூற்று அவருக்கும் பொருந்தும்.

ஏனெனில் பிரபா மட்டுமே புலிகள் அமைப்பின் ஒரேயொரு அதிகாரமுடைய தலைவர் என்பதால் பாலசிங்கம் பிரபாவின் கருத்து என்னவென்று கூறமுடியுமே தவிர, பாலசிங்கத்தின் கருத்து புலிகளின் கருத்து என்று முழுதாக நம்ப முடியாது.

இந்த உண்மையை நீண்டகால அனுபவத்தின் பின்னர் செய்தி நிறுவனங்கள் பல கண்டறிந்துள்ளன.

அதனால்தான் பிரபாகரன் என்ன சொல்கிறார் என்று அறிய ஆவல்படுகின்றன.

அதுவும் பிரபாவை நேரில் சந்தித்து அவர் வாய்மூலமாகவே சில சந்தேகங்களுக்கான விடைகளைக் கேட்டறிய முற்படுகின்றன.

எனினும் குறிக்கப்பட்ட கேள்விகள், குறிக்கப்பட்ட பத்திரிகையாளர்கள் என்று வரையறுத்துக்கொண்டு பிரபா பேட்டிக்கு சம்மதிப்பதே வழமையாகும்.

புதிய அரசாங்கம் பிரச்சனைத் தீர்வுக்கு எடுத்துவரும் முயற்சிகளை வரவேற்கிறோம். நிபந்தனையற்ற போர் நிறுத்தம், பேச்சுவார்த்தை என்பவற்றுக்கு தயாராக இருக்கிறோம் என்பதே புலிகளின் நிலைப்பாடு.

யாழ்ப்பாணத்தில் புலிகள் தொடர்ந்து அந்த நிலைப்பாட்டையே வலியுறுத்தி வருகின்றனர்.

பிரபாகரன் யாழ்ப்பாணத்தில் 2.9.94 அன்று விடுத்த செய்தியிலும் அந்த நிலைப்பாடே முக்கியப்படுத்தப்பட்டிருந்தது.

ஆனால், சில செய்தி நிறுவனங்கள் பரபரப்பை தருவதற்காக 'புதிய மொந்தையில் பழைய கள்' என்பது மாதிரியான செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

உதாரணமாக பிரதமருக்கு பிரபா அனுப்பிய செய்தி-என்று கூறப்படும்போது அதற்கு ஒரு முக்கியத்துவம் உண்டு.

பிரபாவே செய்தி அனுப்பியுள்ளார். இனியென்ன பேச்சுவார்த்தைதான்; திருப்பம் தான் என்றே சாதாரண மக்கள் நினைக்க வேண்டியிருக்கும்.

ஆனால் உண்மையில் பிரபாகரனின் அறிக்கை ஒன்றுதான் பிரதமருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

பத்துப் பொலிசாரை யாழில் புலிகள் விடுவித்தபோது பிரபாகரனின் செய்தி என்று தமிழ் செல்வன், அன்ரன் பாலசிங்கம் ஆகியோரால் 'புலிகளின் குரல்' வானொலியிலும், பத்திரிகையாளர் மாநாட்டிலும் வாசிக்கப்பட்ட அறிக்கையே அது.

அந்த அறிக்கையில் உள்ள செய்திகளை பத்திரிகைகள் மற்றும் செய்தி நிறுவனங்கள் மூலமாக இம் மாதம் 3ம் 4ம் திகதிகளில் உள்நாடும், வெளிநாடுகளும் அறிந்துவிட்டன.

அந்த அறிக்கையைத்தான் புலிகள் பிரதமருக்கும் அனுப்பியிருந்தார்கள். இம் மாதம் ஐந்தாம் திகதியளவில்தான் பிரதமருக்கு ஐ.சி.ஆர்.சி. அதனை 'ஃபாக்ஸ்' மூலமாக அனுப்பிவைத்துள்ளது.



90இல் பிரேமா-புலிகள் பேச்சுவார்த்தையும்; 'ஐலன்ட்' பத்திரிகை வெளியிட்ட கேலிச் சித்திரமும்

யாழ்ப்பாணத்தில் இருந்து பிரதமரது அலுவலகத்திற்கு அந்த அறிக்கையை அனுப்பிவைக்க புலிகளுக்கு வேறு ஊடகம் இல்லை. எனவே சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலமாக அதன் 'ஃபாக்ஸ்' சாதனம் ஊடாக புலிகள் அனுப்பிவைத்தார்கள்.

பகிரங்கமான பத்திரிகை அறிக்கை என்றபோதிலும் அதனைத் தனக்கும் பிரத்தியேகமாக அனுப்பிவைத்தமை குறித்தும், அந்த அறிக்கையில் பொருளாதார நீக்கத்தை வரவேற்றுள்ளதற்காகவும் பிரதமர் மகிழ்ந்திருக்கலாம். எனவே அந்த அறிக்கை கிடைத்தமையை கூறி, தனது கருத்துக்களையும் இணைத்து பிரதமர் பதிலும் அனுப்பி வைத்துள்ளார்.

இன்னொரு விடயமும் கவனத்தில் கொள்ளப்படவேண்டும்.

பிரபாவின் செய்தி பிரதமருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பத்திரிகைகள் செய்தி வெளியிட்டபோது, அது ஏதோ புதிய பிரத்தியேகச் செய்தி என்றே பொது மக்களால் நினைக்கப்பட்டிருக்கும். அதனை அரசாங்கம் கவனத்தில் கொள்ளவில்லையா அல்லது அப்படி நினைப்பது பிரசார லாபம் என்று அரச தரப்பால் கருதப்பட்டதா என்பது புரியவில்லை.

பொருளாதாரத் தடை தளர்வு பற்றிய முணுமுணுப்புக்களை அடக்கிவைக்க பிரபா பிரதமரை நோக்கி நேசக்கரம் நீட்ட முன் வந்துள்ளார் என்னும் எண்ணம் உதவலாம் என்று அரச தரப்பினர் நினைத்திருக்கலாம்.

பிரதமர் சந்திரிக்காவின் சமாதான முயற்சிகள் காலத்தின் அவசியம் என்பதால் தென்னிலங்கையில் வெளிப்படையான அதிருப்தி உடனடியாக எழாது.

குறிப்பாக ஜனாதிபதித் தேர்தல்வரை பிரதமர் சந்திரிக்கா சறுக்கிக்கொள்ளும் சந்தர்ப்பங்கள் இல்லை என்று நம்பலாம்.

ஆனால், இனப்பிரச்சனை தீர்வு, போருக்கு முடிவு கட்டுவது என்பவற்றில் சந்திரிக்கா எடுத்துவைத்துள்ள அடிகள் நம்பகமானவை என்றும்-

17 வருடமாக ஆட்சியில் இருந்த ஐ.தே. கட்சி அரசாங்கம் சாதிக்க முடியாததை, ஆட்சிக்கு வந்த 17 நாட்களுக்குள் சாதிக்க ஆரம்பித்தவர் என்றும்,

திருவாளர் பொதுஜனம் திருப்தியாக நினைத்தால், ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிக்காவுக்கு யானைப்பலம் கிடைக்கலாம். உண்மையான யானைச் சின்னக் கட்சியை அவர் சுலபமாக அடக்கிவிடலாம்.

அப்படி நடக்க வேண்டுமானால் புலிகளின் தரப்பும் பேச்சில் ஆர்வம் காட்டுவது போலவும்,

ஆட்சி மாற்றம் புலிகளிடமும் மாற்றத்தை கொடுத்துள்ளது போலவும், திருவாளர் பொதுஜனம் நம்பக்கூடிய காட்சிகள் அரங்கில் தெரியவேண்டும்.

அரசின் தகவல் தொடர்பு சாதனங்களின் பிரசாரங்களை அவதானிக்கும் ஒருவர், புலிகள் பிரதமரை நம்புகிறார்கள். தீர்வு விரைவில் பிறக்கப்போகிறது என்று நம்பக்கூடிய நிலைக்கு செல்லக்கூடும்.

புலிகள்-அரசு உறவுகள் நினைப்பது போல இனிப்பாக மாறாது போனால், அளவுக்கதிகமாக உருவாக்கப்படும் எதிர்பார்ப்புகள் அரசின் மீதான அதிருப்தியாக மாறக்கூடும்.

மறுபுறம், தமிழர்களையே நம்பக்கூடாது. நம்பவைத்து ஏமாற்றிவிடுவார்கள் என்னும் இனவாத ரீதியிலான கருதுகோள் ஏற்படவும் உண்மை நிலைக்கு மாறான பிரசார மிகைப்படுத்தல்கள் காரணமாகலாம்.

எனினும் அது நாளை மறுநாள் வரப்போகும் பிரச்சனை.

இன்றும்-நாளையும் உள்ள பிரச்சனை, கிடைத்துள்ள அதிகாரத்தை உறுதிப்படுத்துவதும், ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்வதுமே என்று அரச தரப்பு நினைத்துக் கொள்வது மாதிரியே தெரிகிறது.

தாம் தீர்வுக்கு எதிரானவர்களல்ல என்று மௌனமாக இருக்கும் ஐ.தே.கட்சி இப்போதிருந்தே சகல சம்பவங்களையும் குறிப்பெடுத்துக்கொள்ளும்.

திருமதி சந்திரிக்கா எங்காவது இடறுப்பட்டாரேயானால் குறிப்பெடுத்த விடயங்களை அவருக்கு எதிரான குற்றச்சாட்டுப் பத்திரமாக திருவாளர் பொதுஜனத்திடம் கொண்டுசெல்லும்.

புலிகளைப் பொறுத்தவரை அளவுக்கதிகமான எதிர்பார்ப்பை அவர்கள் உருவாக்கவில்லை. அளந்தே பேசுகிறார்கள். எண்ணித்தான் கைதிகளையும் விடுவிக்கிறார்கள்.

புலிகள் தரப்பின் நிலை என்ன, அவர்கள் பக்கம் உள்ள பிரச்சனைகள் என்ன என்பது பற்றி வரும் வாரத்தில் நோக்கலாம். ■

---

## அதிரடி அய்யாத்துரை



எலக்சன் வழக்கு வன்னியிலை போட்டிருக்கினம் கூட்டான தமிழ்க் கட்சி. சாட்சிக்கு ஆள் தேடுற விசயத்திலைதான் கஷ்டப்பட்டுப் போட்டினமாம்.

உள்ளே பிரச்சனை இருந்தாலும் வெளியிலை விட்டுக் கொடுக்காமல் வேலை செய்வினம் எங்கடை ஆட்கள் எண்டு பச்சை அணி வட்டார முக்கியஸ்தர் ஒருத்தல் சொன்னவர் பாருங்கோ. எண்டாலும் பிரதம பொறுப்பில் இருந்தவரை பின்னுக்கு தள்ளுறதிலை உள்ளே புகையிற ஆட்கள் உற்சாகம் காட்டுவினம் போலை தெரியேல்லையாம்.

பேச்சுச் செய்தி அடிபட்டுக்கொண்டிருக்கிறதாலை யாழ்ப்பாண சனத்திலை சிலர் கனவு காணத்தொடங்கீட்டினமாம். சி.ரி.பி. பஸ் ஓடத் தொடங்குமோ எண்டு கேட்கிற அளவுக்கு நிம்மதி வந்தா...ச்சா.... எப்படியிருக்கும் எண்டு எங்கடை ஆட்கள் யோசித்துப் பார்க்கினம். சி.ரி.பி.பஸ் ஓடுறது கிடக்கட்டும், சீச்சீ இந்தப் பழமும் புளிக்கும் எண்டு கதை முடியாட்டிச் சரிதான்.

யாழ்ப்பாணத்திலை பொருட்கள் விலை வீழ்ச்சி எண்டு கேள்விப்பட்டிருப்பியள். பாண் ஒரு றாத்தல் என்ன விலை எண்டு விசாரிச்சனான். ஏழு ரூபா, ஏழு ரூபா ஐம்பது சதம் எண்டு போகுதாம். பிறகெப்படி வீழ்ச்சி எண்டு கேட்கிறியளோ? முந்தி 9 ரூபாவல்லோ?

திருவான மலையிலை சம்பந்தரா? துரையா? எண்டு போட்டி நடந்தது. இப்ப ஜனவரி மாதம்வரை எம்.பியா இரும். பிறகு இடத்தை காலி பண்ணும் எண்டு தங்கமான துரையருக்கு உத்தரவாம். ஒப்பந்தமும் எழுதி துரையர் கையெழுத்தும் போட்டிருக்கிறாராம். எண்டாலும் சட்டப்படி செல்லாதாம். துரையரா விட்டுக்கொடுத்தாத்தான் உண்டு.

திருவான மலை எம்.பி. எண்டு சம்பந்தமானவர் பெயரை எங்கடை வானொலி அறிவிச்சுப் போட்டுதாம். அதாலை கூட்டான கட்சி அலுவலகத்திற்கு போனுகள் வந்து துளைச்செடுத்துப் போட்டுதாம். வானொலியிலும் பகிடி விடுகினம் பார்த்தியளோ?

ஜனாதிபதித் தேர்தல் வரை தீர்வுத் திட்டத்தை வைக்கிறது புத்தியான விசயமல்லவென்று தலைவியாருக்கு நெருக்கமான வட்டாரங்கள் உறுதியான அட்வைஸ் பண்ணியிருக்கினமாம். அவரும் அதை ஆமோதிச்சிருக்கிறமாதிரித்தானாம்.

யாழ்ப்பாணத்திலை உள்ள மாணிக்கமான அதிகாரிக்கு மத்தளத்தின் கதி. இரண்டு பக்கத்தையும் விரோதிக்கக்கூடாது. கயிற்றிலே நடக்கிறமாதிரி எண்டாலும் மனுசன் பிழைக்கத் தெரிஞ்சவர். இல்லாட்டி மகனுக்கு சீதனமாய் இலட்சம் இலட்சமாய் வாங்கிப்போட்டு ரெண்டு எழுத்தாரை சமாளிச்சிருக்க முடியுமோ?

சின்னக் குழந்தை ஒண்டு யாழ்ப்பாணத்திலை இருந்து வந்திருந்தது. எடுத்துக் கொஞ்சிப்போட்டு, "இங்கையே இரடா" எண்டு சொல்ல தகப்பனுக்கும் தாய்க்கும் வந்துது பாருங்கோ கோபம். "உங்களுக்கென்ன, சொல்லுவியள். பிணை நிண்டவரல்லோ உள்ளுக்கை போகவேணும்" ! வயதுப் பிள்ளை குடாநாட்டை விட்டு வரவும் பிணை நிண்டு பாஸ் எடுக்கவேணுமல்லோ. அதுதான் பிரச்சனை. அதுசரியுங்கோ பாதை திறந்த பிறகும் பாஸ் சிஸ்டத்தை ரெண்டு எழுத்தார் கைவிட மாட்டினமோ?

காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையில் இருந்து ஒரு செய்யுள்:

"அறமெனப் படுவது யாதெனக் கேட்பின்
மறவாது இதுகேள் மன்னுயிர்க்கு எல்லாம்
உண்டியும்-உடையும் உறையுளும் அல்லது
கண்டதில்லை"

என்ன பாருங்கோ: பாதிப் பொருளாதார தடை நீக்கினதும் அறமெனப்படலாமோ? ●

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

## சென்றார் — வந்தார் — வென்றார்

# ஐ.தே.கட்சிக்குள் காமினியின் கொடி
# வென்றாலும்-தோற்றாலும்-இனிக்காமினி!

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் திரு.காமினி திசநாயக்கா களம் காணத் தயாராகிவிட்டார்.

பொதுத் தேர்தலில் தனது கட்சிக்கு ஏற்பட்ட தோல்விக்கு அதன் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா மறைமுகமாக பொறுப்பேற்றுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து அவர் விலகிக்கொண்டதை அவ்வாறு கருதுவதில் தவறில்லை.

மறைந்த ஜனாதிபதி பிரேமதாசா உயிரோடு இருந்தவரை ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான அரசியல் தாக்குதல்கள் அனைத்துமே அவரை குறிவைத்தே நடத்தப்பட்டன.

அவரது மறைவின் பின் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருந்த ஜனாதிபதி விஜேதுங்காவோ, அல்லது முன்னாள் பிரதமர் ரணிலோ அவ்வாறான தாக்குதலை தமது எதிர் முகாம்களில் இருந்து எதிர்நோக்கவில்லை.

ஆனால்-இனி காமினி தனது எதிர் முகாம்களால் கடுமையான அரசியல் தாக்குதல்களை எதிர்நோக்குவார்.

திரு.காமினிமீது பிரதமர் சந்திரிக்காவும் கோபமாகவே இருக்கிறார்.

பாராளுமன்ற தொடக்க விழாவில் எதிர்க்கட்சி தலைவர் என்றவகையில் திரு. காமினி சபாநாயகரை வாழ்த்தி உரையாற்றியபோது சபையில் இருந்த பிரதமர் அவரது பேச்சை கவனியாதவர் போலவே காணப்பட்டார்.

எதிர்க்கட்சித் தலைவராக திரு.ரணில் விக்கிரமசிங்க வரவேண்டும் என்றே பிரதமரும் பொதுஜன முன்னணியும் விரும்பியிருந்ததாகத் தெரிகிறது.

திரு.காமினி திசாநாயக்காமீது பொதுஜன முன்னணி கோபப்படுவதற்கு காரணம் இல்லாமல் இல்லை.

பிரேமாவுக்கு எதிராக திரு.காமினியும், லலித் அத்துலத் முதலியும் போர்க்கொடி உயர்த்தியபோது எதிரணிகளது ஒத்துழைப்பையும் அவர்கள் கோரினார்கள்.

லலித் கொல்லப்பட்ட பின்னர் திரு. காமினி எதிரணிகளது நம்பிக்கை நட்சத்திரம் போல் காணப்பட்டார்.

கடந்த மாகாணசபைத் தேர்தலின்போது திரு.காமினி பொதுஜன முன்னணியோடு தோள் சேர்ந்து செயற்பட்டவர்.

பிரேமாவின் மறைவின்பின் பொதுஜன முன்னணிக்கு தெரியாமல் திரு.காமினி ஜனாதிபதி விஜேதுங்காவோடு பேசத் தொடங்கினார்.

ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சியில் இருந்து இறக்குவதும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பதுமே இலட்சியம் என்று போர்க்கொடி உயர்த்தியவர் அதை வீசியெறிந்துவிட்டு ஒரு நல்ல நாள் பார்த்து தனது தாய் வீட்டுக்கே சென்றுவிட்டார்.

சென்றது மட்டுமல்ல, அங்கிருந்து பொ.ஜ.முன்னணிக்கு சவால்விடும் ஒருவராகவும் மாறினார்.

அரசியலில் எதிரிகள் நண்பர்களாகலாம். நடந்ததை மறப்போம் என்றும் பேசலாம்.

ஆனால், ஏட்டிக்குப் போட்டியான இரு முகாம்களில் இருப்பவர்கள் மத்தியில் நடந்ததை மறப்போம் பேச்சுக்கு இடமில்லை.

காமினி விடயத்தில் அவரது நடத்தை தொடர்ந்து உறுத்திக்கொண்டே இருக்கும்.



அன்று-
கட்சியை விட்டு விலக்கப்பட்டார்.
வெளியே போனார்.
மீண்டும் வந்தார்.
கட்சிக்குள் மெல்ல மெல்ல கை நீள்கிறது.
இனி கொடி பறக்குமா?

இப்போது அவரே ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் என்பதால் இனிமேல் காமினியை நினைத்தால் பொ.ஜ. முன்னணிக்கு முகம் கறுக்கும்.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளும் காமினிக்கு எதிர்ப்பு இருக்கத்தான் செய்கிறது.

வெளியே போய் விட்டு வந்தவர் உள்ளேயே இருந்தவரான ரணிலை ஓரம் கட்டுவதை நினைத்து ஐ.தே. கட்சிக்குள் உள்ள பிரேமா விசுவாசிகள் பொறுமிக் கொண்டிருக்கிறார்கள்.



போட்டி வேண்டாம்- ரணிலின் முடிவு. காமினிக்கு வெற்றி

எதிர்க்கட்சித் தலைவர் தெரிவு நியாயமில்லை என்ற புகைச்சல் அடங்குவதற்கு முன்னரே, ஜனாதிபதி வேட்பாளர் விடயத்திலும் ரணிலை ஓரத்தில் தள்ளியாகிவிட்டது.

"திரு.காமினி எதிர்க்கட்சித் தலைவர்-அவரே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதுதான் முறை. அவர் முன்வராவிட்டால் நான் தயார்" என்று ரணில் கூறியது நாகரிகமான அரசியல்வாதி என்று அவருக்குள்ள மதிப்பை மேலும் கனப்படுத்தியிருக்கிறது.

காமினி சுற்றி வளைக்காமல் நேரடியாகவே கூறிவிட்டார். "நான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட விரும்புகிறேன்" என்று.

கட்சியை கைப்பற்றுவதில் அவருக்குள்ள வேகம் அது என்று அவரது எதிராளிகள் முகச் சுழிப்போடு பேசுகிறார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஜனாதிபதி வேட்பாளருக்கான ஒரு போட்டி நடந்திருந்தால்கூட திரு.காமினியே வெற்றி பெற்றிருப்பார்.

தனது அதிருப்தியாளர்களின் பலம், பலவீனம் பற்றி அறிந்து அதற்கேற்ப காய்களை நகர்த்துவதில் காமினி நிச்சயம் புத்திசாலி.

கட்சிக்குள் தனது கொடியை அவர் பறக்கவிட்டிருப்பதற்கு அந்த புத்திசாலித்தனம் உதவலாம்.

ஆனால், தேர்தலில் வெல்ல அந்த புத்திசாலித்தனம் மட்டும் போதாது. வெகுஜன செல்வாக்கு முக்கியம்.

சிறுபான்மைக் கட்சிகளது ஆதரவும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற அவசியம்.

இரண்டுமே திரு.காமினிக்கு உடனே சாத்தியமில்லை.

ஆனால், தூண்டிலை போட்டுவிட்டு பொறுமையாகக் கரையில் காத்திருப்பதே திரு.காமினியின் தந்திரம்.

ஓடு மீன் ஓடி உறுமீன் வருமளவும் காத்திருக்கவேண்டும்.

இப்போது வெகுஜன அலை சந்திரிக்கா பக்கம் வீசுகிறது. அதனால் ஜனாதிபதித் தேர்தலில் அவரே வெற்றிபெறும் சாத்தியம் இருக்கிறது.

ஆனால், ஜனாதிபதித் தேர்தல் வெற்றி தரப்போகும் அதிகாரம், செல்வாக்கு காரணமாக சந்திரிக்காவோ, பொ.ஜ. முன்னணியோ நிதானம் தவறி வழுக்கி விழுந்தால் காமினியின் தூண்டிலில் உறுமீன் வந்து விழக்கூடும்.

எனவே-உடனடி லாபத்தை நோக்கி மூலதனத்தை போடும் வியாபாரியல்ல திரு.காமினி திசநாயக்கா.

இப்போது ஜனாதிபதித் தேர்தலில் அவர் போடும் மூலதனம் ஜனாதிபதித் தேர்தலுக்கு பின்வரும் காலகட்டத்திற்கானது.

"ஓரடி பின்னால் ஈரடி முன்னால்." ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்தால் கவலையில்லை.

நாடு முழுவதும் தனது செல்வாக்கை பரீசீலிக்கவும், தன்னை ஐ.தே.கட்சியின் தலைவராக அறிவித்துக்கொள்ளவும், எதிர்வரும் காலத்தின் வெற்றிக்கு இன்றே விதை போட்டு வைக்கவுமே காமினி [illegible] காணுகிறார்.

எனினும், பொ.ஜ.முன்னணிக்கு திரு. காமினி ஒரு சிறந்த போட்டியாளர் என்பதில் சந்தேகமில்லை. அலட்சியப்படுத்தக் கூடியவருமல்ல.

ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா போட்டியிட்டிருந்தால் தோல்வியால் அவர் அரசியலிருந்து ஒதுங்குவார் என்று பொது முன்னணி எதிர்பார்த்திருக்கலாம்.

ஆனால்-காமினி விடயத்தில் கதை வேறு. அவர் தோல்வி பெறுகிறாரோ வெற்றி பெறுகிறாரோ- ஆனால் ஐ.தே.கட்சி தலைமை அவர் கைக்கு போகிறது என்பது பொ.ஜ.முன்னணிக்கு ஆறுதலான விசயமல்ல. எதிர்கால அரசியல் நிகழ்வுகள் அதனை உறுதிப்படுத்தும்.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருக்கும் புகைச்சலை பொ.ஜ.முன்னணி பெரிதும் நம்பியிருக்க இடமில்லை.

பொ.ஜ.முன்னணியை எதிர்த்து அரசியல் நடத்தக்கூடிய ஒருவராக காமினி மாறும்போது அதிருப்தியாளர்களும் மெல்ல அவர் பக்கம் சாயத் தொடங்குவர்.

தவிர-ரணிலும் கட்சியை பலவீனப்படுத்த விரும்பாதவர். முதுகில் குத்தும் போட்டியாளராக அவர் இருக்க மாட்டார். அதுமட்டுமன்றி "உள் மோதலால் பொதுஜன முன்னணிக்கு அரசியல் லாபம் போய்ச் சேரக் கூடாது" என்பதில் ஐ.தே.கட்சிக்குள் ஒத்த கருத்து இருப்பது அக்கட்சியின் அடிப்படைப் பலம் என்பது கவனத்திற்குரியது.

ரணில் இருக்கும் இடத்தில் வேறு ஒருவர் அதே பலத்தோடு இருந்திருந்தால் இப்போது உள் மோதல் சூடாக இருந்திருக்கும். பொ.ஜ.முன்னணி மெல்ல அவல் கிடைத்திருக்கும்.

ரணிலின் அரசியல் நாகரிகம் காமினிக்கு 'முதுகில் கண் தேவையில்லை' என்றாக்கியுள்ளது.

அதே நேரம் ரணிலின் அரசியல் நாகரிகத்தால் தனது எதிர் முகாம் இரண்டுபடாமல் இருப்பது பொதுஜன முன்னணிக்கு சுவாரசியமில்லாத விசயமாகிவிட்டது. ■

---

இப்போது புலிகள் அமைப்பினரால் புதிய அரசாங்கம் மீது கூறப்படும் கருத்துக்களே முக்கிய செய்திகளாகும்.

கிட்டத்தட்ட நாலரை வருடங்களின் முன் புலிகள் பிரேமதாசா அரசாங்கத்தோடு பேசினார்கள். அப்போது பிரேமா பற்றி பிரபா என்ன சொல்லுகிறார் என்று செய்தி உலகம் செவிகொடுத்து கேட்டுக் கொண்டிருந்தது.

பிரேமா அரசோடு நடத்தப்பட்ட பேச்சுவார்த்தை பற்றி 01.04.90 அன்று பிரபா யாழ்ப்பாணத்தில் பத்திரிகையாளர்களை சந்தித்து விளக்கினார். யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியாகும் ஈழநாதம் பத்திரிகையில் 02.04.90 அன்று வெளியாகிய பிரபாவின் செய்தி இங்கே தரப்படுகிறது.

## 4 1/2 வருடங்களுக்கு முன்னர்

# சமாதானப் பேச்சால் 'தமிழ் ஈழத்தில்' அமைதி!

# பிரேமாவின் துணிச்சலான அணுகுமுறை பிரபா வரவேற்பு!

கிட்டத்தட்ட ஒரு வருடகாலமாகச் சிறிலங்கா அரசுடன் நாம் சமாதானப் பேச்சுக்களை நடத்தி வருகிறோம். இந்தப் பேச்சுக்கள் பரஸ்பர நம்பிக்கையுடன் ஆக்கபூர்வமான முறையில் முன்னேற்றம் கண்டுவருவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்தச் சமாதானப் பேச்சுக்களின் பயனாக இன்று தமிழீழத்தில் அமைதியும், சகஜநிலையும் தோன்றியிருக்கிறது.

இன ஒடுக்குமுறையாலும், இராணுவ அடக்குமுறையாலும் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது என்பதை இன்றைய சிறிலங்கா அரசு உணர்ந்திருப்பதுபோலத் தெரிகிறது. ஜனாதிபதி பிரேமதாசாவின் துணிச்சலான புதிய அணுகுமுறை காரணமாகவே இன்று இந்த நல்ல சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த அமைதி நிலை நீடித்து, எமது மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழவேண்டும் என்பதே எமது விருப்பம். இது சிங்கள அரசியற் தலைவர்களினதும் சிங்கள மக்களினதும் பார்வையையும், அணுகுமுறையையும் பொறுத்திருக்கிறது. வரலாற்று ரீதியாக எமது மக்களுக்கு இழைக்கப்பட்ட பாரிய அநீதிகளையும், தவறுகளையும் சிங்கள மக்கள் நன்குணர்ந்து மனித நீதியின் அடிப்படையில், மனித தர்மத்தின் அடிப்படையில் எமது பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சிக்க வேண்டும்.

எமது மக்களுக்கு நீதி வழங்க மறுத்து, மீண்டும் எம்மீது அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்படுமானால், நாம் எமது மக்களின் சுதந்திரத்தையும், பாதுகாப்பையும் நிலைநாட்ட ஆயுதம் எந்திப் போராடுவதற்குச் சிறிதேனும் தயங்க மாட்டோம்.

### ஜனநாயக வழி

நாம், நீண்டகாலமாக ஆயுதப் போர் வடிவத்தில் எமது போராட்டத்தை முன்னெடுத்து வந்திருக்கிறோம். ஆயினும் வரலாற்றுச் சூழ்நிலைக்கும், காலத்தின் கட்டாயத்திற்கும் ஏற்ப, எமது போராட்ட வடிவங்களில் மாறுதல்கள் ஏற்பட்டும் வந்தன.

எமது இலட்சியப் பாதையில் இப்படியான வடிவ மாற்றங்கள் எழுவது சகஜம். இன்று எமது கட்சியமைப்பைக் கட்டியெழுப்ப, ஜனநாயக அரசியல் வடிவத்தை தழுவிக் கொள்ள நாம் தீர்மானித்திருக்கிறோம்.



யாழ்ப்பாணத்தில் 1.4.90இல் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் பிரபாவோடு பாலசிங்கம்.

எமது விடுதலை இயக்கத்தை மக்கள் இயக்கமாக விரிவுபடுத்தி, புலிகளே, தமிழீழ மக்களின் உண்மையான பிரதிநிதிகள் என்பதை நாம் உலகிற்கு எடுத்துக்காட்டுவோம்.

### போர் நிறுத்தம்

சிறிலங்கா ஆயுதப் படைகளுக்கும் விடுதலைப் புலி வீரர்களுக்கும் மத்தியில் இப்பொழுது போர் நிறுத்தம் நிலவுகிறது. எனினும், எமது மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு இன்னும் தீர்வு ஏற்படவில்லை. எமது மக்களின் பொருளாதார வாழ்வு சீர்குலைந்த நிலையில் இருக்கிறது. யுத்த அழிவுகளால் எமது கிராமங்களும், பட்டினங்களும் சுடுகாடுபோல காட்சியளிக்கின்றன. எமது மக்களுக்கு எதிராக ஏவப்பட்ட ஒடுக்குமுறை வடிவங்கள் முற்றாக இன்னும் நீங்கியபாடில்லை.

அரச பயங்கரவாதத்தால் ஏற்பட்ட வடுக்கள் இன்னும் மாறிவிடவில்லை.

எமது மக்கள் தமது பாதுகாப்புக் குறித்து இன்னும் அஞ்சிய நிலையில் வாழ்ந்துவருகிறார்கள்.

இந்த சூழ்நிலையில், ஆயுதங்களைப் போட்டதும் இனப் பிரச்சினை தீர்ந்துவிடும் என கருதுவது மிகவும் தவறான கண்ணோட்டமாகும். பூதாகரமாக வளர்ந்துவிட்ட இனப்பிரச்சினையும், அதனால் எழுந்த சுதந்திர வேட்கையும் புரட்சிகர வெளிப்பாடாகவே ஆயுதப் போர் வடிவம் தோற்றம் கண்டது. ஆகவே இனப்பிரச்சினை சுமுகமாக தீர்க்கப்படாத வரை ஆயுதப் பிரச்சினை தீரப்போவதில்லை. இதனை சிறிலங்கா ஆட்சியாளரும், சிங்கள மக்களும் தெளிவாகப் புரிந்துகொள்வார்களென நம்புகின்றேன்.

எமது மக்களுக்கு ஒரு சுபீட்சமான எதிர்காலத்தையும், நிரந்தரமான அமைதியையும், சுதந்திரமான வாழ்வையும் பெற்றுக்கொடுக்க எமது விடுதலை இயக்கம் தொடர்ந்து போராடும். இன்று எமது மக்களின் நம்பிக்கையின் நட்சத்திர மாக திகழ்வது எமது இயக்கம்தான். எமது இயக்கத்தை ஒரு பலம்பொருந்திய தேசிய சக்தியாக கட்டியெழுப்புவதற்கு தமிழ்-முஸ்லிம் மக்கள் எமது இயக்கத்தின் பின்னால் அணி திரள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். ●

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

## அலசுவது - இராஜதந்திரி

# வடக்கு-கிழக்கு பிரச்னைத் தீர்வு:-

# மனிதாபிமானரீதியில் கட்டியெழுப்பப்படவேண்டிய அரசியல் அணுகுமுறைகள்!

புதிய பிரதம மந்திரி திருமதி.சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்கவிடம் போர் நிறுத்தம், நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகள் என்பவற்றுக்கு தாம் தயாராக இருப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு.வேலுப்பிள்ளை பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

கடந்த பத்து வருடகாலமாக இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரதேசத்தில் கொடிய யுத்தம் இடம்பெற்று வருகின்றது. யுத்தக் கெடுபிடியினால் மட்டுமல்ல, பொருளாதார ரீதியிலான நெருக்கடிகளினால்கூட வடக்கு-கிழக்குப் பிரதேசம், குறிப்பாக வடபகுதி பெருமளவு பாதிப்பைக் கொண்டிருக்கின்றது.

வடக்கு-கிழக்கின் பத்து வருடகால, யுத்தத்தில் கடந்த நான்கு வருடகாலமே பெருமளவு கெடுபிடியைக் கொண்டதாக இருக்கின்றது.

1990ம் ஆண்டு மறைந்த ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தைகள் முறிவடைந்ததையடுத்து ஏற்பட்ட யுத்தம், வடக்கே பெருமளவிலான நெருக்கடிகளை உருவாக்கியிருக்கின்றது.

நேர்த்தியான போக்குவரத்து முற்றாக துண்டிக்கப்பட்டுள்ளது. மின்சாரம் அறவே அற்றுப்போயுள்ளது. இவைதவிர மருத்துவப் பொருட்கள், எரிபொருள் என்பவற்றின் மீதான தடைகள் வடபகுதி மக்களை பெருமளவிலான இன்னல்களுக்குட்படுத்தி விட்டுள்ளன.

கடந்த நான்கு வருடகாலத்தில் வடபகுதிக்கான போக்குவரத்து முற்றிலுமாகத் துண்டிக்கப்பட்ட நிலையில் கிளாலிக் கடலேரியையும், கரடுமுரடான பாதைகளையும் கடந்து பயணங்களை மேற்கொண்டதில் பல அப்பாவிப் பொதுமக்கள் மரணத்தைத் தழுவியுள்ளனர்.

உணவுப் பொருட்கள், மருத்துவப் பொருட்கள் மீதான தடைகள் காரணமாக ஆயிரக் கணக்கான வடபகுதி மக்கள் பட்டினி நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதுடன் அபாயகரமான நோய்-நொடிகளுக்கும் உள்ளாகியுள்ளனர்.

எரிபொருள் மீதான தடை வடக்கே போக்குவரத்தை ஸ்தம்பிதமடைய வைத்துள்ளதுடன் விவசாய நடவடிக்கைகளையும் பாதிப்படையச் செய்துள்ளது.

இத்தகைய பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் அரச படையினரின் கண்மூடித்தனமான குண்டு வீச்சுக்கள், ஷெல் வீச்சுக்கள் என்பன வடபகுதி மக்களை அணு, அணுவாகச் சித்திரவதை செய்பவையாகவே இருக்கின்றன.

எனவே பொருளாதார நெருக்கடி, யுத்தக் கெடுபிடி ஆகியனவற்றுக்கு மத்தியில் விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டிருந்த வடபகுதி மக்களுக்கு பிரதமர் சந்திரிக்கா வடக்கிற்கான பொருளாதாரத் தடையைத் தளர்த்தியுள்ளமை, மற்றும் சமாதான அணுகுமுறைகளில் ஆர்வங் காட்டுகின்றமை போன்றன வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கான சமாதானத்தீர்வு குறித்த நம்பிக்கையையும், புத்துணர்வையும் தருவதாக இருக்கின்றன.

இந்த நம்பிக்கைக்கு மேலும் உரமூட்டுவதாகவே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரன் பத்துப் பொலிஸ்காரர்களை விடுதலை செய்துள்ளமை மற்றும் நிபந்தனையற்ற பேச்சுக்கள், போர்நிறுத்தம் என்பனவற்றுக்குத் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளமை ஆகியன விளங்குகின்றன.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 26ம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரன் தனது இயக்கத்தவரின் 'மாவீரர் தினம்' குறித்து விசேட செய்தியொன்றை வெளியிட்டிருந்தார்.



அச் செய்தியில் பூட்டானின் தலைநகரான திம்புவில் முதல் தடவையாக மேற்கொள்ளப்பட்ட சமரசப் பேச்சுவார்த்தைகள் முதற்கொண்டு கொழும்பில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள்வரை இலங்கை அரசு எத்தகைய தீர்வுத் திட்டத்தையும் முன்வைக்கவில்லை என்று திரு.பிரபாகரன் தனது செய்தியில் கூறியிருந்தார்.

1984ம் ஆண்டு இலங்கையின் சகல தமிழ் அரசியல் குழுக்களும் இந்தியாவின் அனுசரணையுடன் இலங்கை அரசுப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகளில் குதித்திருந்தன.

ஆனால் திம்பு பேச்சுக்களின்போது எத்தகைய ஒரு சமரச முடிவும் கிட்டியிருக்கவில்லை. இதனையடுத்து இலங்கையில் அன்றைய ஜே.ஆர். அரசாங்கம் அனைத்துக் கட்சி மகாநாடு என்ற பெயரில் இனப்பிரச்னை தீர்வு குறித்து ஆராய்ந்திருந்தார்.

தமிழ் நாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட இலங்கையின் தமிழ் தீவிரவாத அரசியல் குழுக்கள் பலவும் இயங்கிவந்த காலத்தில் இந்திய அரசாங்கமே இலங்கைத் தமிழர் அரசியலில் மிகுந்த அக்கறையை வெளியிட்டிருந்தது.

இலங்கையின் வடக்கு-கிழக்கு நிலவரம் தொடர்பாக இந்திய அரசியலாளர்களும், இராஜதந்திரிகளும் தமிழ் அரசியல் அமைப்புக்களுடனும், இலங்கை அரசுடனும் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பேச்சுக்களை நடத்தியிருந்தனர்.

இலங்கையின் தமிழ் அரசியல் அமைப்புக்கள் தமிழ்நாட்டில் தஞ்சமடைந்திருந்த நாட்களில் இலங்கை அரசு, எந்த வகையிலும் இலங்கைத் தமிழ் அமைப்புக்களுடன் தொடர்பு கொள்ளவில்லை.

இலங்கையில் சகல தமிழ் தீவிரவாத இயக்கங்களும் பயங்கரவாத அமைப்புக்கள் என்று பெயர் சூட்டப்பட்டிருந்ததுடன், அந்த அமைப்புக்களின் உறுப்பினர்களும் பயங்கரவாதிகள் என்றே குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இவ்வாறு இலங்கைத் தமிழ் தீவிரவாத அமைப்புக்கள் பயங்கரவாதக் குழுக்களாகக் கருதப்பட்டு அவற்றின் உறுப்பினர்களும் பயங்கரவாதிகளாகக் கருதப்பட்டிருந்த கால கட்டத்திலேயே இன்றைய பிரதமரான திருமதி.சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தமது கணவரான மறைந்த ஸ்ரீலங்கா மக்கள் கட்சித் தலைவர் விஜயகுமாரதுங்கவுடன் தமிழ் நாட்டுக்குச் சென்று தமிழ் தீவிரவாதத் தலைவர்களைச் சந்தித்திருந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் உட்பட, தமிழ் தீவிரவாத தலைவர்கள் மற்றும் முக்கியஸ்தர்களை விஜயகுமாரதுங்க, சந்திரிகா ஆகியோர் சந்தித்திருந்தனர்.

இதனையடுத்து காலஞ்சென்ற திரு.விஜயகுமாரதுங்க வடபகுதிக்கும் தனியாக விஜயமொன்றை மேற்கொண்டு சென்று அப்போது வடக்கே புலிகளின் யாழ் மாவட்ட தளபதியாக இருந்த கிட்டு என்றழைக்கப்படும் சதாசிவம் கிருஷ்ணகுமாரையும் சந்தித்திருந்தார்.

ஜே.ஆர்.ஜயவர்த்தன தலைமையிலான அன்றைய இலங்கை அரசு தமிழ் தீவிரவாதத் தலைவர்களைப் பயங்கரவாதிகள் என்று பிரகடனப்படுத்தி, அவர்கள் ஒவ்வொருவரது தலைக்கும் பல இலட்ச ரூபா சன்மானப் பணத்தை அறிவித்திருந்த காலத்திலேயே விஜயகுமாரதுங்க, சந்திரிகா ஆகியோர் தமிழ் தீவிரவாதத் தலைவர்களைச் சந்தித்து வடக்கிற்கும், தெற்கிற்குமிடையே சமரசத்தை ஏற்படுத்துவது குறித்துப் பிரஸ்தாபித்திருந்தனர்.

இன்று சந்திரிகா இலங்கையின் பதினோராவது பிரதம மந்திரியாகப் பதவியேற்றுள்ளதுடன், வடபகுதி மக்கள் மீதான நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் வகையில் அப்பகுதி மீது முன்னைய அரசினால் விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடையையும் ஓரளவு தளர்த்தியுள்ளார். பிரதமர் சந்திரிக்காவின் இந்த நல்லெண்ண நடவடிக்கையை வரவேற்கும் விதத்திலேயே தமிழீழ விடுதலைப் புலிகளும் தமது காவலிலிருந்த பத்துப் பொலிஸ் காரர்களை விடுதலை செய்துள்ளனர்.

வடக்கு-கிழக்குப் பிரச்னையைப் பொறுத்தவரை அப்பிரச்னையைத் தீர்ப்பதற்கான அரசியல் அணுகுமுறைகளில் காலடி எடுத்து வைப்பதற்குமுன்னர், வடக்கு-கிழக்கு மக்களின், நல்லெண்ணத்தைச் சம்பாதிப்பதே இன்று மிகவும் அத்தியாவசியமாகின்றது.

வடக்கு-கிழக்குப் பிரச்னையை அரசியல் ரீதியாக, ஆக்கபூர்வமான முறையில் அணுகுவதை விடுத்து மூர்க்கத் தனமான இராணுவ நடவடிக்கைகள் மூலமாகவே முன்னைய ஆட்சியாளர்கள் அணுகியிருந்தனர்.

இதனால் வட பகுதியில் பாரியளவு மனிதாபிமானப் பிரச்னைகள் தோன்றியுள்ளதுடன், அப்பகுதி மக்கள் கெடுபிடி யுத்தம் குறித்த உளரீதியிலான பாதிப்புக்கும் உட்பட்டிருக்கின்றனர்.

இருந்தபோதிலும் வடபகுதியினர் கடந்த நான்கு ஆண்டு காலமாக பொருளாதாரத் தடைகளையும், இராணுவக் கெடுபிடிகளையும் எதிர்கொண்டு தமது நாளாந்த வாழ்க்கையை வெற்றிகரமாகச் சமாளித்தவர்களாகவே இருக்கின்றனர்.

மின்சாரத் தடை, எரிபொருள்தடை என்பவற்றினால் வடபகுதியின் விவசாய நடவடிக்கைகள் எவ்வகையிலும் பாதிப்படைந்திருக்கவில்லை. மரக்கறி வகைகளின் உற்பத்தி மற்றும் உள்ளூர் விவசாய உற்பத்திகள் வடபகுதியில் நல்ல முறையில் இடம்பெற்றிருந்தன.

கல்வித்துறையிலும் எதுவித பாதிப்புக்களும் ஏற்பட்டுவிடாதிருக்கக் காணப்படுகின்றது. தென்னிலங்கையில் அதிகளவு வசதி வாய்ப்புக்களுடன் கூடிய பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டிருந்த வேளைகளிலெல்லாம் வடபகுதியின் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தொடர்ந்து இயங்கி வரக் காணப்படுகின்றது.



மின்சாரமின்மை, எரிபொருள் இன்மை என்பன பல்வேறு இடைஞ்சல்களை உருவாக்கியுள்ள போதிலும் வடபகுதி மாணவர்களின் கல்வித் துறை ஈடுபாடு அபரிமிதமானதாகவே இருக்கின்றது.

வடபகுதியின் மருத்துவபீட மாணவர்களில் பலர் பெருஞ் சிரமத்துக்கு மத்தியில் தமது கல்வியைப் பூர்த்தி செய்தவர்களாக இன்று கொழும்பிலும் அதன் சுற்றுப்புற வைத்தியசாலைகளிலும் வைத்திய பணியை மேற்கொண்டிருக்கின்றனர்.

> **ஒரு தனிநபரின் நாளாந்த உணவுச் செலவைவிட பன்மடங்கு தொகையை ஒரேநாளில் 'சுட்டுக் கருக்கும்' ஒரு சிப்பாயின் துப்பாக்கி!**



எனவே எத்தகைய கஷ்ட நிலைமைகளுக்கு மத்தியிலும் வடபகுதியினர் நல்ல மனத்திடத்துடன் தமது நாளாந்த வாழ்க்கையை மேற்கொள்பவர்களாகவே இருக்கின்றனர்.

சந்திரிகா வடபகுதி மீதான பொருளாதாரத் தடையைத் தளர்த்தியதையடுத்து, வடக்கே தமிழீழ விடுதலைப் புலிகள் போர் நிறுத்தம், மற்றும் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை என்பவற்றில் தமக்கிருக்கும் விருப்பத்தை வெளிப்படுத்தியிருந்தனர்.

வடக்கு-கிழக்கு யுத்தம் அப் பிரதேச மக்களை நேரடியாகப் பெரிதும் பாதிப்புக்குள்ளாக்கியுள்ளது. மறுபுறத்தே முழு நாட்டின் அபிவிருத்திக்கும் இந்த யுத்தம் ஒரு பெருஞ் சவாலாகவே இருந்து வருகின்றது.

உணவுப் பண்டங்களின் விலைக்குறைப்பு குறித்து தென்னிலங்கையில் பிரஸ்தாபிக்கப்படுகின்றது. முதற்கட்ட நடவடிக்கையாக இலங்கையர்களின் 'பிரபல உணவுப் பண்டமான' பாணின் விலையை புதிய ஆட்சியாளர்கள் ரூபா 3.50 சதமாகக் குறைத்துள்ளனர்.

ஆயினும் இந்த விலைக்குறைப்பை ஈடுசெய்வது கடினமானதாகவே இருக்கும் என்று எதிரணியினர் குறிப்பிடுகின்றனர்.

இன்று ஒருகிலோ பாணின் விலை ரூ.3.50 சதமாகக் குறைக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் வடக்கு-கிழக்கில் நிலைகொண்டுள்ள ஒவ்வொரு சிப்பாயின் துப்பாக்கியும் உள்ளடக்கியுள்ள தோட்டாக்கள் ஒவ்வொன்றும் பணத்தை விரயமாக்குகின்றன.

படையினரின் பயிற்சி நடவடிக்கைகள் உட்பட அவர்களது நாளாந்த பாவனையில் ஆயிரக் கணக்கில் பலதரப்பட்ட பெறுமதிவாய்ந்த பல்வேறு ரகத்திலுமான ரவைகள் சுட்டுத் தீர்க்கப்படுகின்றன.

இவைதவிர வடக்கே வீசப்படும் குண்டுகள் மற்றும் அவற்றை வீசுவதற்குப் பயன்படுத்தப்படும் விமானங்கள், ஹெலிகாப்டர்கள் என்பவற்றுக்கான எரிபொருள் விரயமும் பெருமளவில் காணப்படுகின்றது.

இந்நிலையில் ஒரு தனிநபர் அன்றாட வாழ்க்கையில் தனது உணவுக்குச் செலவிடும் தொகையிலும் பார்க்க பல மடங்குகள் ஒரு சிப்பாயின் துப்பாக்கியிலிருந்து தினமும் தீப்பொறியாகக் கருகி வெளியேறுகின்றது.

பேச்சளவில் இருந்த இனத்துவேசம் நாளடைவில் காடைத்தனம் மூலம் இனக் கலவரமாக மாறியிருந்தது. தற்போது இனவாதத்தின் இனக்கலவரங்கள் ஏற்படுத்திய தாக்கம் வடக்கு-கிழக்கில் ஒரு பெரும் கெடுபிடி யுத்தத்தையே உருவாக்கியிருக்கக் காணப்படுகின்றது.

இனவாதத்தின் உச்சக்கட்ட நிலையை உணர்த்துவதாக இருக்கும் வடக்கு-கிழக்கு யுத்தத்தின் முற்றுமுழுதான முடிவிலேயே வடக்கு-கிழக்கு இனப்பிரச்னைத் தீர்வுக்கான ஆரம்பமும் பெருமளவில் தங்கியிருக்கின்றது.

இராணுவக் கெடுபிடிகளும், பொருளாதார நெருக்கடிகளும் முற்றுமுழுதாக நீக்கப்படாத நிலையில் சமரச முயற்சிகளில் இறங்குவதன் மூலம் காத்திரமான முறையில் பரஸ்பர விசுவாசத்தைக் கட்டியெழுப்புவது கடினமாகவே இருக்கும்.

சமரச முயற்சிகளுக்கான நல்லதோர் ஆரம்பத்தைத் தோற்றுவிக்கும் வகையில் பிரதமர் சந்திரிக்கா வடபகுதி மீதான பொருளாதாரத் தடையை ஓரளவு தளர்த்தியுள்ளார்.

இதன் மூலம் வடக்கு-கிழக்குப் பிரச்னை குறித்து தாம் கொண்டுள்ள மனிதாபிமானக் கண்ணோட்டத்தை சந்திரிகா வெளிப்படுத்தியுள்ளார்.

எனவே இந்த மனிதாபிமான அணுகுமுறைகளின் அடிப்படையில் இராணுவ ரீதியிலான நடவடிக்கைகளுக்கும் முற்றுமுழுதான 'கால்கட்டை'ப் போடுவதன் மூலமே அரசியல் ரீதியாக வடக்கு-கிழக்குப் பிரச்னைத் தீர்வு குறித்து சாதகமான சூழ்நிலைகளை உருவாக்கிக் கொள்ள முடியும்.



# பாலகுமாரன் பார்வை சரிதானா?

## அவரே சொல்லும் விளக்கம்!

தமிழகத்தின் பிரபல எழுத்தாளர் திரு.பாலகுமாரன். அவருக்கு பெண் வாசகர்கள் நிறைய. அவர் பற்றிய விமர்சனங்களும் உண்டு; வியப்பான பார்வைகளும் உண்டு. சில விமர்சனக் கேள்விகளுக்கு அவரது பதில் இது 'சுப மங்களா'வில் வந்திருந்தது.



• **பெண்கள் விடுதலை என்பதையோ, ஆணாதிக்கம் என்பதையோ நீங்கள் 'செக்ஸ்' என்ற ஒரு கோணத்தில் தானே பார்க்கிறீர்கள்? செக்ஸிலிருந்து விடுதலை– அதாவது Free sex என்கிற அளவில் தானே பார்க்கிறீர்கள்!**

உங்களுடைய அனுமானத்தை நான் ஒப்புக்கொள்ள முடியாது. காதல் என்பதன் வெளிப்பாடு காமம். காதல் என்பது என்ன? காதல் என்பது மதித்தல். மதித்தல் என்பது பரஸ்பரம் புரிந்துகொள்ளுதல். ஒரு பெண் படுக்கைக்கு ஆணுடன் செல்கிறாள் என்றால் இதற்குப் பின்னால் பல காரணங்கள் இருக்கின்றன. நான் செக்ஸ் என்று குறிப்பிடுவதால் அவள் உடம்பு கொதித்துப் போய் அவனை அழைக்கிறாள் என்ற அர்த்தமில்லை. ஒரு பெண் ஒரு ஆணுடன் சிநேகமாகி படுக்கையைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறாள் என்றால் அதன் பின்னே பெரிய ஆராய்ச்சியே இருக்கிறது. ஒரு கணிப்பே இருக்கிறது. பல்வேறுவிதமாக அவனை எடைபோட்டுப் பார்க்கிறாள். தன் பொருளாதார நிலை, தன் சுற்றுச் சூழ்நிலை, அவன் சுற்று சூழ்நிலை. இது அத்தனையும் தாண்டித்தான் படுக்கை வருகிறது. நான் எழுதும்போது அப்படித்தான் வைத்திருக்கிறேன். அது முடிவுமல்ல. செக்ஸ் என்பது அலட்சியமானதுமல்ல. ரொம்ப ரொம்ப முக்கியம். செக்ஸைத் தவிரவும் பல்வேறு கோணங்களில் என் நாவல்களில் இது ஆராயப்பட்டிருக்கிறது. பாலகுமாரன் செக்ஸ் மட்டுமே எழுதுகிறான் என்று சொல்பவர் செக்ஸ் பற்றி ஞானமில்லாதவர் அல்லது குறை உள்ளவர்.

### லேடீஸ் ஸ்பெசல்

• **ஒரு சமூகத்துக்கோ, தேசத்துக்கோ மரபு என்பதே இல்லை என்பது உங்கள் முடிவா? இல்லை, பத்து வருடங்களுக்கு ஒருமுறை அது மாறிக் கொண்டிருக்கும் என்பதா....?**

மரபு என்பதே மாறிக்கொண்டிருப்பது. மாறாதது எதுவும் இல்லை. இந்தியாவின் கலாசாரம் என்று எதையாவது சுட்டிக் காட்டுங்கள். அது உடைந்து சுக்குநூறாகப் போனதை நான் உங்களுக்குச் சுட்டிக்காட்டுகிறேன். வெறுமனே அக்கறையின்றி கலாசாரம் பற்றி பேசுபவர்கள் எல்லாம் பொய்யர்கள். எதுவுமே நிரந்தரமாக இருக்க முடியாது என்பதுதான் உண்மை. இங்குள்ள மதம், அரசியல், இயக்கம், இஸம் எல்லாம் தோன்றும்; அழியும். எந்த இஸம் மிகப்பெரிய இஸம் என்று சொல்லப்பட்டதோ அது பிறந்த இடத்திலேயே புதைக்கப்பட்டது. எந்த மதம் சிறந்த மதம் என்று சொன்னோ மோ அந்த மதம் அந்த மதத்திற்கு எதிரான விஷயத்தையே செய்துகொண்டிருக்கிறது.

# கருவளர்ச்சியைத் தூண்டும் மருந்து கரு உருவாகும் வாய்ப்பையும் தடுக்கும்

## எச்சரிக்கைத் தகவல்

ஒரு குழந்தையைப் பெற்றெடுப்பதற்கேற்ற 'செழுமை' தம்மிடம் இல்லை என்பதனால் பல பெண்கள் மருத்துவர்களின் ஆலோசனைப்படி கரு வளர்ச்சியினைத் தூண்டும் சில மாத்திரைகளை மாதக் கணக்கில் உட்கொள்கின்றனர். ஆனால் இவர்களில் பெரும்பாலானோர் கரு முட்டைகளை உற்பத்தி செய்யும் வாய்ப்பினைப் பெற்றாலும், அக்கரு சினைப்படவோ, சினைப்படும் பட்சத்தில் அது கருப்பையில் தங்கி குழந்தையாக வளர்ச்சி அடையவோ முடியாத நிலை ஏற்பட்டுவிடுகிறது.

ஒரு குறிப்பிட்ட நோய்க்காக கண்டு பிடிக்கப்பட்டு- பயன்படுத்தப்பட்டு- அதே நோயைக் கண்டிக்கும் ஒரு மருந்து, பக்க விளைவுகளை ஏற்படுத்தி வேறுபல பிரச்சனைகளை உருவாக்கி விடுவது கண்கூடு. இதேபோன்று மேற்கு நாடுகளில் இப்போது இலட்சோப இலட்சம் பெண்கள் தங்கள் வயிற்றில் குழந்தைகளுக்குரிய கருஉருவாகுவதற்கான 'செழிப்பினை' நல்கும் மாத்திரைகளை உண்டு வருகின்றனர்.

இவற்றின் பயனாக கரு முட்டை உருவாக்க முடியாத பெண்கள், கரு முட்டைகளை நிச்சயமாக உருவாக்கும் 'செழுமை'யினைப் பெறுகிறார்கள். ஆனால் இந்த மருந்து கருப்பையின் உள்ளேயுள்ள மென்மையான படையினை அரித்து அதன் உறுதியை சிதைத்துவிடுகிறது. இதன் காரணமாக பத்து மாதங்கள்வரை கருவை தன்னகத்தே வைத்துப் பாதுகாத்து ஊட்டமளிக்கும் சக்தியினை கருப்பை இழந்து விடுகிறது.

கருப்பை உறுதியையும் ஊட்டத்தையும் இழப்பதனால் கருகலையும் வாய்ப்பே அதிகமாகும். தொடர்ந்து கருவளர்ந்தாலும் உரிய காலத்துக்குமுன் குறைப்பிரசவம் நேரலாம். அதுமட்டுமல்லாமல் பிறக்கும் குழந்தை நோய் தாங்கும் சக்தியற்று, பிறந்த சில நாட்களிலேயே இறந்து விடவும் கூடும்.

லொஸ் ஏஞ்சல்ஸில் உள்ள வெஸ்ற் லேக் வில்லேஜ் பசிபிக் கருச் செழிப்பு மையத்தில் நடைபெற்ற ஆய்வுகளில் திரட்டப்பட்ட தரவுகளின் அடிப்படையிலேயே, இதே மையத்தைச் சேர்ந்த மருத்துவ இயக்குநர் டாக்டர் மைக்கல் ஃபியன்மன் இக்கருத்துக்களை வெளியிட்டார்.



"அமெரிக்காவில் சில மருத்துவர்கள் கருச் செழுமையற்ற பெண்களுக்கு தொடர்ந்து 6 மாதங்கள் இம்மருந்தை உபயோகிக்கும்படி கூறிவிடுகின்றனர். இவ்வாறு அதிக காலம் இம்மருந்தைப் பயன்படுத்துபவர்கள் ஆரோக்கியமான குழந்தைகளை என்றுமே பெற்று வளர்க்க முடியாது. முட்டைகள் உற்பத்தியாகும்; ஆண் ஜீவ அணுவுடன் இணைந்து கருவும் உருவாகும்; ஆனால் கருவளர்வதற்கான கருப்பை ஊட்டமிழந்து சேதமடைந்திருந்தால், வளரும் கருவினை அது எவ்வாறு தாங்க முடியும்?" என்று வினவுகிறார் டாக்டர் மைக்கீல். "விதை எவ்வளவு சிறப்பானதாக இருந்தாலும் அதற்கு ஊட்டமளிக்கக் கூடிய மண்ணற்ற வெறும் கற்பாறையில் அந்த விதை வளரமுடியுமா?" என்று கேட்கிறார்.

இந்த வினாக்களை விடுத்த டாக்டர் மைக்கீல் அவற்றுக்கான விடையினையும் தருகிறார்.

இந்த மருந்தினை உபயோகிப்பதனை ஒரு பெண் கைவிட்டதும் கருப்பையின் உள்ளிருக்கும் படை மீண்டும் வளர்ச்சியுற்று பழைய நிலையினை அடையும். இதற்கு அவகாசமளிக்க வேண்டும். இரண்டு அல்லது மூன்று மாதங்கள் இம்மருந்து உட்கொண்டால் முட்டைகள் உருவாக்கப் படுவதைத் தூண்டும் ஹோமோன்கள் விருத்தி யடையும். மருந்தினை நிறுத்தியதும் கருவின் உட்படை வளர்ந்து ஊட்டத்தைத் தரும்.

இத்தகைய முறையிலேயே 'கருச் செழுமைச் சிகிச்சை'முறை அளிக்கப்பட வேண்டும் என்கிறார் அவர்.

# நீங்களும் தைக்கலாம் எஸ்-எஸ்

## 5 வயதுப் பெண்பிள்ளைக்கான அழகிய சட்டை

**சட்டையின் மார்பு அகலம் 15 அங்குலம்**
**சட்டையின் பின் அகலம் 15 அங்குலம்**
**சட்டையின் நீளம் 15 அங்குலம்**

**முன்பக்கத்திற்கு மட்டும் 2 துண்டுகள் கோட் வடிவத்தின் அளவுகள்**
**அகலம் 7 அங்குலம்**
**நீளம் 14 அங்குலம்**


**கையின் அளவுகள்**
**கையின் அகலம் 8 1/2+ 8 1/2 அங்குலம்**
**கையின் நீளம் 12 அங்குலம்**

**சட்டையுடன் பொருத்தும் பாவாடையின் அளவுகள்**
**நீளம் 12 அங்குலம்**
**அகலம் 24 அங்குலம்**


### வெட்டும்முறை

**முன்பக்கம்:**

15 அங்குல அளவிலான துணியினை எடுத்து A,B,C,D என 1வது படத்தில் காட்டப்பட்டவாறு குறிக்குக. குறித்த பகுதியினை சரிசமனாக மடிக்குக. Aயிலிருந்து உள்நோக்கி 3 அங்குலம் அளந்து அவ்விடத்தில் E அடையாளமிடுக. E யிலிருந்து உள்நோக்கி 3 அங்குலம் அளந்து F எனக் குறிக்குக. F இலிருந்து 3 3/4 அங்குலம் கீழ்நோக்கி சிறிது சரிவாக வரைந்து Hஎனக் குறிக்குக. Hஇலிருந்து 1 1/4 அங்குலம் அளந்து I எனக் குறிக்குக. A யிலிருந்து கீழ்நோக்கி 5 அங்குலம் அளந்து G எனக் குறிக்குக.




படம் 1




படம்.3 படம்.2

குறித்த பகுதிகளை பென்சிலால் வரைந்து வெட்டவும். (உ.+ம் படம் 1)



**பின் பக்கம்**

முன் பக்கம் எவ்வாறு வெட்டினோமோ அவ்வாறு அளவுகளை குறித்து கழுத்துப் பகுதியை மட்டும் 1/2 அங்குலம் பதிவாக வெட்டவும். ஏனைய அளவுகள் யாவும் சரியானவை.

**முன்பக்கத்திற்கு மட்டும் 2 துண்டுகள் கோட் வடிவத்தினை வெட்டும் முறை**

மேலே குறிப்பிட்ட அளவுகளின்படி 2 துணியினை எடுத்து மடித்துக்கொள்ளவும். அப்பகுதிகளை (படம் 1ல்) காட்டப்பட்டவாறு கைப்பகுதியை வெட்டவும். வெட்டியபின்னர் Eயிலிருந்து 2 1/2 அங்குலம் அளந்து Jஎனக் குறிக்குக. படம் 2ல் காட்டியபடி J,K பகுதியை சரிவாக வெட்டவும். வெட்டிய அப்பகுதிகளிலிருந்து அதாவது- Kலிருந்து 4 அங்குலம் செங்குத்து வடிவில் Lஎனக் குறிக்குக. L லிருந்து 4 1/2 அங்குலம் அளந்து மேல் நோக்கி Mஎனக் குறிக்குக. குறித்த பகுதிகளை வரைந்து வெட்டவும். வெட்டியபின்னர் படம் 2 வடிவம் வந்துள்ளதா?

**கை வெட்டும் முறை:**

கைக்கென மேலே குறிப்பிட்ட 17 அங்குல அளவிலான துணியினை எடுத்து மடிக்கவும். மடித்த பகுதிகளை A,B,C,Dஎனக் குறிக்குக. Cயிலிருந்து 3 அங்குலம் அளந்து Eஎனக் குறிக்குக. E-Dக்கும் 5 1/2 அங்குலம் உள்ளது. Aயிலிருந்து கீழ்நோக்கி 4 அங்குலம் அளந்து Fஎனக் குறிக்குக. Fலிருந்து Bவரை படம் 3ல் காட்டப்பட்டவாறு வளைவாக வரைந்து வெட்டவும். இவ்வாறு 2 கையினை வெட்டிக் கொள்ளவும்.

**பொருத்தும் முறை:**

முதலில் கோட் வடிவ 2 துணிகளுக்கும் 1/2 அங்குலப் பைப்பிங் போட்டுத் தைக்கவும். அதனை எடுத்து வைத்து கொண்டு முன்பக்க 'ப'வடிவத்திற்கு அதே வடிவத் துண்டு வெட்டி தைத்தபின்னர் கோட் துண்டினை அதன்மேல் வைத்து பின் பக்கத்தையும் பொருத்திக்கொண்டு அதன்பின்னர் விலாப் பகுதியை சிறிது வளைவாக தைக்கவும். அதன் பின்னர் பாவாடையை சிறு சிறு சுருக்கிட்டு மேற்சட்டையுடன் பொருத்தவும். இதனை பொருத்திய பின்னர் படம் 3ன் கையை கைக்கான பகுதியில் பொருத்தி அழகுறச் செய்து கொள்ளுங்கள். சட்டைக்கு அழகூட்டுவதற்கு பட்டின் என்பன பயன்படுத்தல் நன்று.

# தாமதம் ஏன்?

தினமுரசு-அருள் ஜுவல்லர்ஸ் போட்டி முடிவுகள் இவ்வாரம் அறிவிக்கப்படுவதாகத் தெரிவித்திருந்தோம். அருள் ஜுவல்லர்ஸ் உரிமையாளருக்கு ஏற்பட்ட தவிர்க்கமுடியாத காரணத்தால் பரிசுக்குரியவர்களைத் தெரிவு செய்ய முடியாமல் போய்விட்டது. எனவே, அடுத்த முரசில் முடிவுகள் வெளிவரும் என்பதைத் தெரிவித்து க்கொள்கிறோம்.

# முரசின் பரிசு

யார் அந்த 50 அதிஷ்டசாலிகள்?

தினமுரசு நடத்தும் பரிசுப் போட்டி.

* 50 பேர் அதிஷ்டசாலிகளாகத் தெரிவு செய்யப்படுவார்கள்.

| |
|---|
| முரசின் பரிசு |
| கூப்பன் இல 7 |
| உண்மை–நேர்மை–வெளிப்படைத்தன்மை |

* பெண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும்.
* பரிசுக் கூப்பன்களை 1-25 வரை பத்திரமாக சேர்த்து வைக்க வேண்டும்.
* நாம் அனுப்பச் சொல்லும் போது 25 கூப்பன்களையும் அனுப்பி வைக்கலாம்.
* மிக்ஸி- ரைஸ் குக்கர்கள்-இட்லி குக்கர்கள், கைக் கடிகாரங்கள், நவீன ரக இல்லப் பொருட்கள் என்பன பரிசுகளாக வழங்கப்படவுள்ளன.
* கூப்பன்களை பத்திரமாக சேகரியுங்கள்.

உங்கள் அதிஷ்டத்தைப் பரிசீலிக்கலாமே!

# சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது–சுகந்தினி

## தக்காளி சாதம்

**தேவையானவை:**

**அரிசி–1/2 கிலோ**
**தக்காளி– 200 கிராம்**
**தேங்காய்–பாதி**
**இஞ்சி– ஒரு துண்டு**
**பூண்டு– 2 (பெரியது)**
**வெங்காயம்– 2**
**பச்சை மிளகாய்– 8**
**சீரகம் சிறிதளவு**
**ஏலக்காய்– 5**
**கராம்பு– 5**
**நெய்– 100 மில்லி லீட்டர்**
**கறிவேப்பிலை– ஒரு நெட்டி**
**உப்பு–அளவாக**

**செய்முறை:**

இஞ்சி, பூண்டு, சீரகம் ஆகியவற்றை நன்றாக அரைத்துக் கொள்ளவும். தேங்காய் துருவி பிழிந்துக் கொள்ளவும். வெங்காயம், பச்சை மிளகாய் ஆகியவற்றைச் சிறிதாக நறுக்கிக் கொள்ளவும்.

பாத்திரத்தை அடுப்பில் ஏற்றி, நெய் ஊற்றிக் கொதிக்க விடவும். நெய் கொதித்ததும், ஏலக்காய், கராம்பு கறிவேப்பிலை ஆகியவற்றைப் போடவும். நறுக்கிய வெங்காயம், பச்சை மிளகாய், அரைத்த மசாலாக்களையும் போட்டு வதக்கவும். வாசனை வந்ததும் தக்காளிப் பழத் துண்டுகளைப் போடவும். வதங்கியபின் தேங்காய்ப் பால் ஊற்றி தேவையான தண்ணீர் ஊற்றவும். பின் அரிசியைப் போட்டு வேக வைக்கவும். வெந்தபின் இறக்கிப் பரிமாறவும்.

## வீட்டுக் குறிப்பு

**காஸ் அடுப்பு, அடுப்பு மேடை போன்றவற்றைச் சுத்தப்படுத்தும்போது வெதுவெதுப்பான நீரில் சிறிதளவு சலவைச்சோடாவைக் கலந்து கழுவிப் பாருங்கள். எண்ணெய் பிசுக்கு எல்லாம் இருந்த இடம் தெரியாமல் போய் பளபளப்பாகி விடும்.**

# "என் அழகின் இரகசியம்"

"உணவு விஷயத்தில் எனக்கு எந்த விதமான கட்டுப்பாடும் கிடையாது. ஆனால் சில விஷயங்களை நிச்சயம் கடைப்பிடித்தாக வேண்டும். புத்தம் புதிய காய்கறிகள், பழங்கள், நிறைய தண்ணீர் சாப்பிட வேண்டும்.

உணவுகளை நான் தேர்ந்தெடுப்பதில்லை. மூன்று வேளையும் முழுமையாகச் சாப்பிடுகிறேன். காலை உணவு அதிகமாகவும், மதியம், இரவு உணவைச் சற்றுக் குறைவாகவும் சாப்பிடுகிறேன்.

என்னுடைய சரும அழகிற்கான இரகசியம், காலையில் வெதுவெதுப்பான நீரில் தேன் கலந்து சாப்பிடுகிறேன். மேக் அப்பைக் கலைக்கும் போது அழுத்தி முழுமையாகக் கலைக்க வேண்டியது அவசியம். அதி முக்கியமான விஷயம் மேக்-அப்பைக் கலைக்காமல் தூங்கப் போகக் கூடாது.



என்னுடைய வாழ்க்கையில் சீரான சிந்தனையை முக்கியமாகக் கருதுகிறேன். மகிழ்ச்சியும் திடமான மனப் பக்குவமும் நீண்டகால வெற்றிக்குப் பக்கபலமாக இருக்கக்கூடியவை.

உணர்ச்சிவசப்படும்போதோ கவலைகள் ஏற்படும்போதோ சில நிமிடங்கள் பொறுமையாக அமர்ந்து மூச்சை உள்ளுக்குள் இழுத்து நிதானமாக வெளிவிடுவேன். இந்தப் பயிற்சி மனதை அமைதிப்படுத்த உதவுகிறது.

அழகுராணிப் போட்டிகளின்போது அறிவுக் கூர்மை நிச்சயம் தேவை. குழப்பமான சிந்தனைகளோடு மேடை ஏறக்கூடாது. அவர்கள் கேட்கும் தந்திரமான கேள்விகளுக்கு உடனுக்குடன் மாட்டிக்கொள்ளாமல் பதிலளிக்கும் சாமர்த்தியம் இருக்க வேண்டும்."

இவ்வாறு கூறியிருப்பவர் யார் தெரியுமா? இந்தியாவில் மொடலிங் உலகில் கொடி கட்டிப் பறக்கும் ஐஸ்வர்யா ராய்.

# குலுங்கிச் சிரிக்கவைக்கும் குள்ள மனுஷி

இடத்தையும் காலத்தையும் உணர்ந்து புத்திசாதுரியமான வேடிக்கை வார்த்தைகளைக் கொட்டி இரசிகர்களை குலுங்க குலுங்கச் சிரிக்க வைக்கும் நகைச்சுவை நடிகை குளோறியா சாமுவெல்ஸ். இவருக்கு வயது 42. இரு பிள்ளைகளின் தாய். இருப்பினும் இவருடைய உயரம் ஆக 2 அடி 10 1/2 அங்குலம் மட்டுமே.

குளோறியா எப்போதும் தன்னுடைய உருவ அமைப்பை அடிப்படையாகக் கொண்ட நகைச்சுவை வசனங்களை மேடைகளில் பேசுவார்.

அமெரிக்காவிலுள்ள பிரதான நகரங்களில், தெருக்களில் கொக்கா கோலா விற்கப்படும் தானியங்கி மையங்கள் வைக்கப் பட்டுள்ளன. அவை பெரும்பாலும் நாலடி உயர மட்டத்தில்தான் இருக்கும். "கோலாவுடன் ஒரு சிரிப்பையும் பெற்றுக் கொள்ளுங்கள்" என்று ஆங்கிலத்தில் வாசகமும் பொறிக்கப்பட்டிருக்கும். இதனை யிட்டு குளோறியா "இந்த கோலா எனக்கு வேண்டாம். இது தரும் சிரிப்பும் வேண்டாம்" என்று நகைச்சுவையுடன் கூறுவார். தான் அளவில் சிறிதாக இருப்பதனால் அந்த கோக் போத்தலைப் பெறுவது தன்னால் இயலாத காரியம் என்பதனைக் குறிப்பிடவே அவ்வாறு கூறுவார்.




குளோறியாவின் 18 வயது மகன் அந்தனியின் உயரம் 6 அடி 1 அங்குலம். 14 வயது மகள் அன்ட்ரியாவின் உயரம் 5 அடி 7 அங்குலம். அவர்களெல்லாம் வயது வந்தவர்களுக்கான திரைப் படங்களைப் பார்க்கப் போகும்போது, திரைப்படமாளிகையில் இப் படங்களைப் பார்க்க குளோறியாவை அனுமதிப்பதில்லையாம் என்று வருந்துபவர்போல் மேடையில் அவர் கூறும்போது இரசிகர்கள் சிரிப்பு கொட்டகையை அதிரவைக்கும். 3வயதுப் பிள்ளைகளுக்கான உடைகளையே இவர் அணிகிறார். உணவு விடுதிகளில்-தன் குடும்பத்தாருடன் சென்றால் ஐஸ்கிரீம், சொக்கலேட்டு களில் "எந்த ரகத்தை இந்தக் குழந்தை விரும்பி உண்ணும்" என்று தன் பிள்ளைகளிடமே உணவு பரிமாறும் ஊழியர் கேட்பாராம்.

கலிஃபோர்னியாவில் என்சினோ நகரைச் சேர்ந்த 'லா காப்ரே கொமெடி கிளப்'பில் குளோறியா ஒரு நடிகையாகச் சேர்ந்து அமெரிக்கா முழுவதும் சென்று தனது நகைச்சுவையால் இலட்சக் கணக்கான இரசிகர்களைக் கவர்ந்து வருகிறார். வளைகுடா யுத்தத்தின் போது யுத்த முனையிலிருந்த அமெரிக்க வீரர்களை மகிழ்வூட்ட அங்கு சென்றிருக்கிறார். 'அமெரிக்காவின் சின்னஞ் சிறு நகைச்சுவையாளராக இருந்த போதிலும் மாபெரும் இரசிகர் பட்டாளத்தையே ஆட்டிப் படைக்கும் வல்லமை பெற்றவராக குளோறியா திகழுகிறார்." என்று மேற்படி கொமெடி கிளப்பின் உரிமையாளர் ரே பிஷப் கூறுகிறார்.

## தகவல் பெட்டி.... தகவல் பெட்டி...

## பெட்டி.... தகவல் பெட்டி.... தகவல்





ஆணிப்படுக்கையில் 'ஹாயாக' மல்லாந்தபடி கிறிஸ்ரொடல். மார்பில் கல் ஏற்றி சம்மட்டியால் வெளுத்துவாங்குவது கோமர். பி.கு:- வீட்டில் இந்தப் பயிற்சி செய்ய முயற்சிக்க வேண்டாம். தனக்கிடா முயற்சி தன் உயிருக்கு சேதம்.

# ஆணிப்படுக்கை பஞ்சு மெத்தை!

## உடலா... இது உடலா?! இரும்புபோல் இருக்குது!!

ஆறு அங்குல நீளமான நூற்றுக்கணக்கான இரும்பு ஆணிகள்- இரண்டு அங்குலத்துக்கு ஒன்றாக-செங்குத்தாகப் பதிக்கப்பட்ட படுக்கையில் கிறிஸ் ரொடல் படுத்தார். ஒவ்வொன்றும் 25 இறாத்தல் எடை கொண்ட இரண்டு கொங்கிறீட்கற்கள் அவருடைய மார்பிலே ஒன்றன்மேல் ஒன்றாக வைக்கப்பட்டன. ஒரு பெரிய சம்மட்டியினைஎடுத்த கோமர்,ஒரே அடியில் அந்த கொங்கிறீட் கற்களைச் சக்குநூறாக உடைத்தார்.


திறந்திருந்த வாய்க்குள்ளும் மூக்குக்குள்ளும் தூசுகளும் துண்டுகளும் புகுந்தன. முள் படுக்கையினாலோ மார்பிலே கற்கள் சிதறடிக்கப் பட்டமையினாலோ எவ்வித வேதனையும் அடையாத கிறிஸ், தன்னுடைய கனவு நனவான மகிழ்ச்சியில் திரண்டிருந்த பார்வையாளர்களை நோட்டமிட்டவண்ணம் எழுந்தார்.

கோமர் என்ற பெயரில் புகழ்பெற்ற அசகாய சூரருக்கு 62 வயதாகிறது. ஓகையோ மாநிலத்திலுள்ள வூஸ்டர் நகரைச் சேர்ந்தவர். முள் படுக்கையில் படுத்தவண்ணம் 1,642 இறாத்தல் வரையிலான கொங்கிறீட் பாறையைத் தனது மார்பிலே ஏற்றி சம்மட்டியால் உடைத்து நொறுக்க வைத்துச் சாதனை புரிந்து, சாதனைப் புத்தகமான கின்னசில் இடம் பிடித்தவர் கோமர். இவருடைய இயற்பெயர் வேர்ணன் கிரெய்க்.

கோமரின் சாதனை பற்றி அறிந்து பத்திரிகை ஒன்றுக்கு பேட்டி காணச் சென்ற கிறிஸ் ரொடல் அவரின் சீடராகவே மாறிவிட்டார். இது ஏதோ கண்கட்டுவித்தை என்றே ஆரம்பத்தில் கிறிஸ் கருதினார் ஆனால், இந்தச் சாதனை புலனடக்கத்தினால் மட்டுமே நடபெறுகிறது என்ற உண்மையினை கிறிசுக்குப் புலப்படுத்தினார் கோமர். மனதை அங்கிங்கென்று அலைய விடாமல் ஒரு நிலைப்படுத்தினால் செயற்கரிய காரியங்களை செய்யமுடியும் என்பதனை எடுத்துக்கூறி சாதனைக்கு வழிகாட்டினார்.

கிறிஸ் தான் கற்றறிந்த வித்தையினை பலர் முன் காட்டுவதற்குத் தீர்மானித்தார். அதன்படியே முள் படுக்கையில் படுக்கும்போது, மனதில் சற்று தளர்ச்சி ஏற்பட்டதும் தாங்க முடியாத வலி தென்பட்டதாகவும் உடனடியாக புலனடைக்கத்தை மேற்கொண்டதும் நோ பறந்து விட்டதாகவும் கூறினார். தனது சாதனைக்கு முன்னர் ஒரு ஒரேஞ்ச் பழத்தினை சாதாரணமாக அந்த முள் படுக்கைமீது போட்டதும் அதனை ஆணிகள் துளைத்துவிட்டதாகவும் கூறினார்.

தனது மார்பின்மீது வைக்கப்பட்ட கற்கள் சிதறடிக்கப் பட்டபோது திறந்தவாயினுள்ளும் மூக்கினுள்ளும் தூசியும் துகள்களும் புகுந்தமையினால் புலனடக்கம் குழம்பிய மையினால் ஆணிகள் தன் முதுகில் பதிந்து இரத்தக் கசிவை ஏற்படுத்தியதனையும் வேதனை தோன்றியதையும் கிறிஸ் ஒளிவு மறைவின்றிக் கூறினார். உடனடியாக மன ஒடுக்கத்தைக் கடைப்பிடித்து வேதனையை அகற்றி விட்டதாகவும் அவர் கூறினார்.




## கெட்டியாகப் பிடித்துக்கோ

'சமோ மல்யுத்த மலைகள் ஏன் இந்தப் பெண்ணை துரத்துகிறார்கள்? கெட்டியாக பிடித்துக்கொள்ளும் திட்டத் தோடு மாமிச மலைகள் நீட்டும் கரங்களில் இவள் சிக்கா மல் தப்ப முடியுமா?' என்றெல்லாம் நீங்கள் 'திக்-திக்' கொள்ளத் தேவையில்லை. காரணம் மாமிச மலைகள் அல்ல அவை. இரண்டுமே அட்டகாசமான பொம்மைகள். மல்யுத்த போட்டி விளம்பரம் ஒன்றுக்காக லண்டன் மாநகர வீதி வழியாக தூக்கிச் செல்லப்படுகின்றன.

பெண் ஏன் பயந்தார்? தத்ரூபமாக உள்ள பொம்மை களை திடீரென்று அருகில் பார்த்தபோது நிஜம் என்று நம்பி பயந்துவிட்டார் பாவம்! அந்த நேரத்தில் ஒரு அரிய 'கிளிக்'.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## "மீண்டும் வருவேன்"

'வள்ளி' படத்தின் பின்னர் பிரியாராமன் தமிழில் ஒரு இடத்தைப் பிடிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. பரபரப்பாகவும் பேசப்பட்டார். ஆனாலும் எதிர்பார்த்தளவு படங்கள் அவரிடம் வரவில்லை.

இப்போது மலையாளத்தில் ஜோஷி இயக்கும் 'சைன்யம்' படத்தில் மம்முட்டியின் ஜோடியாக நடித்துள்ளார். தெலுங்கிலும் லீடர், மஹுரு மகாராஜா போன்ற படங்களில் நடித்து வருகிறார்.

மலையாளத்திலும், தெலுங்கிலும் ஒரு ரவுண்ட் முடித்துவிட்டு மீண்டும் தமிழ் படவுலகப் பக்கம் வருவேன் என்கிறார் பிரியாராமன்.



## வினிதா சுற்றது

'சகல விதத்திலும் படுவேக முன்னேற்றம்' என்று கோடம்பாக்க வட்டாரத்தில் இன்று பேசப்படும் நடிகை யார் என்று கேட்டால் பட்டென்று சொல்லிவிடலாம். வினிதா!

அறிமுக வேகத்திலேயே அமர்க்களப்படுத்திவரும் வினிதாவுக்கு தணிக்கைக் குழுவின் கத்தரிகள் மீது கெட்ட கோபம். 'சின்ன மேடம்' 'மகளிர் பிரமாணம்' போன்ற படங்களில் அவர் சம்பந்தப்பட்ட பல காட்சிகளை ஈவிரக்கம் இல்லாமல் வெட்டிவிட்டார்களாம். கோபம் வராதா பின்னே?

அது மட்டுமல்ல, கதை கேட்காமல் நடித்து தன் இமேஜ் போய்விட்டதாக நினைக்கிறார் வினிதா. இனிமேல் கதை கேட்டுத்தான் நடிப்பாராம். அனுபவம் கைகொடுக்கும்.

எல்லாம் சரி, கதைப் பஞ்சம் கடுமையாக இருக்கும் இக்காலத்தில் வினிதாவுக்கு கதை சொல்ல யார் வருவாரோ?

## சுகன்யாவின் கோபம்

அரசியல்வாதியொருவரோடு தன்னை இணைத்து பேசப்பட்டதால் சுகன்யா மூட் அவுட். ஆனாலும் நெருப்பில்லாமல் புகையவில்லை. விசயம் உண்மை என்கிறது சினிமா வட்டாரம். சம்பந்தப்பட்ட அரசியல் வாதியும் மௌனமாக இருக்கிறாரே தவிர மறுக்கவில்லை. இப்படியாகப் பட்ட நேரத்திலே சுகன்யா சொல்லும் விளக்கம் என்னவென்றால், "நான் உண்டு என் வேலை உண்டு என்று இருப்பவள் தான். என் தொழிலுக்குப் போட்டியாக இருப்பவர்கள்தான் இதன் பின்னால் இருக்கிறார்கள். எனக்கு அரசியலே பிடிக்காது. எந்த அரசியல் வாதியையும் பழக்கமும் கிடையாது" என்று அடித்துப் பேசியுள்ளார் சுகன்யா.

## பிரசாந்த் வியப்பு

"கமலஹாசனிடம் இருந்து இளம் தலைமுறைக் கலைஞர்கள் நிறையக் கற்றுக்கொள்ள முடியும்" என்கிறார் பிரசாந்த்.

எந்தப் பாத்திரத்தில் நடித்தாலும் அந்தப் பாத்திரமாகவே மாறிவிடும் கமல் பற்றி பிரசாந்த் வியப்போடு பேசுகிறார். நம்மவர் படத்தில் தாடியோடு நடிக்கும் கமல் விழாக்களிலும் தாடியோடு கலந்துகொள்கிறார். முன்னர் 'தேவர் மகன்' படத்தில் நடித்தபோது அதற்காக வளர்த்த பெரிய மீசையோடு விழாக்களில் தோன்றினார் கமல்.

பாத்திரத்திற்காக தன் இயல்பையே மாற்றும் ஈடுபாடு கமலிடம் உண்டு. அது கண்டு வியக்கிறேன் என்கிறார் பிரசாந்த்.

## இதுதான் பா...

புது முகங்கள் நடிக்க வளர்ந்துவரும் ... பிலிமாலயா சினிமா இதழ் ஆசிரியர் ... புதிய இசையமைப்பாளர் அருண் ... சில வரிகள் இதோ: "சின்னக் காவிரி ... உன்னைப் பார்த்திருப்பேன், கண்ணில் ... உள்ளம் பூத்திருப்பேன்." பாடலை பாடி...

## மன்னரும் பின்னாலே

நிழல்கள் ரவிக்கு கதாநாயகன் சான்ஸ் ... படத்தை இயக்குவது 'வரவு எட்டணா செ...' இயக்குநர் வி.சேகர். கதையும் அவரே. ... மனைவிகளாக நடிக்கிறார்கள் ராதிகா ... அம்மாவாக மனோரமா நடிக்கிறார். ... கோவை சரளா ஆகியோரும் ... "மன்னாதி மன்னனும் பின்னாலே வருவாரு ..." என்று ஜானகி பாடும் பாடலும் பதிவு ...

## அண்ணாவின் பு...

அந்தக் காலத்திலேயே நாடக உலகில் ... கலக்கியவர் இன்றைய ஆச்சி ... 'விடை கொடு தாயே' நாடகத்தில் ... நடித்துக்கொண்டிருந்தார். ஒருநாள் மனோ... சுகமில்லை. அதனால் ... நடித்தாராம். நாடக... பேரறிஞர் அண்ணா... "இனிமேல் மனோ... இந்த நாட... நாடகத்தா... என்று நி... டிருந்தேன். ... நாடகம் ... புரிந... இ... ...

அண்... சர்க்கரை பே... என்னம...

பொம்மே... என்று சுமா...

## துல்லியில் ரோஜா

ஆர்.கே.செல்வமணியின் 'ராஜமுத்திரை' படப்பிடிப்பு டில்லியில் நடைபெற்றது. ரோஜாவும் படத்தில் நடிப்பதால் டில்லி போயிருந்தார். செல்வமணியும் ரோஜாவும் டில்லியில் ஜாலியாக சுற்றித் திரிந்தார்களாம்.



விக்னேஷ்-யுவராணி
படம்-செல்லக்கண்ணு

## தோல்வியோ தோல்வி

பிரியாராமன்

மலையாளப்படவுலகில் சென்ற வருடத்தில் நூற்றுக்கு தொண்ணூறு படங்கள் தோல்விப் படங்களாம். இந்த வருடத்திலும் பிரமாதம் இல்லை. இதனால் படத் தயாரிப்பில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனால்தான் ஜெயராம் போன்ற நடிகர்கள் தமிழ் படவுலகப் பக்கம் தாவி வந்து சேர்ந்தனரோ?



மோகினி-விக்ரம்
படம்-புதியமன்னர்கள்

## நடிக்க கண்ட கனவு!

'கனி முத்துப் பாப்பா' படத்தின் மூலம் அறிமுகமாகி பல வெற்றிப்படங்களை இயக்கியவர் நட்சத்திர இயக்குநர் எஸ்.பி.முத்துராமன். ரஜினியை வைத்து அதிக படங்களை இயக்கியவர் என்ற பெருமை பெற்றுள்ள முத்துராமன், ஆரம்பத்தில் ஒரு நடிகனாக வேண்டும் என்ற எண்ணத்தில்தான் திரையுலகில் நுழைந்தாராம். அதில் அதிக போட்டி என்பதால் இயக்குநராகி விட்டாராம். இதை அவரே கூறியுள்ளார்.

## மினிசினி

- 'பாட்சா' படத்தில் ரஜினிகாந்த் ஆட்டோ ட்ரைவர் வேடத்தில் நடிக்கிறார். இதனால் இந்தப் படத்திற்காக 31 ஆட்டோக்கள் வாங்கப்பட்டன. அத்துடன் இசையமைப்பாளரான தேவா சிங்கப்பூரிலிருந்து 10 இலட்ச... பெறுமதியான நவீன இசைக்கருவிகளை வாங்கி இப்படத்திற்கு இசையமைத்துள்ளார்.
- 'வைகாசி பொறந்தாச்சு' 'மதுமதி' போன்ற படங்களின் தயாரிப்பாளரும், நடிகருமான கே.பிரபாகரன் 'இது நம்ம பசங்க' படம் மூலம் இயக்குநராகிறார். முற்றிலும் புதுமுகங்களை வைத்து உருவாக்கப்படும் இந்தப் படத்திற்கு ஏ.ஆர்.ரகுமான் இசையமைக்கிறார்.
- 'நாட்டுக்காக' படத்தை அடுத்து மலையாள நடிகர் சுரேஷ் கோபி நடித்து தமிழில் மொழிமாற்றமடையும் படம் 'கமிஷனர்'. பொலிஸ் கமிஷனர் வேடத்தில் நடிக்கும் சுரேஷ் கோபிக்கு ஜோடியாக ஷோபனா நடித்துள்ளார்.
- 'ஜென்டில்மன்' படத்தில் சுபாஸ்ரீயின் வேடத்தில், இந்தியில் நடித்து வருகிறார் ஹீரா. அடுத்து இவர் பாக்கியராஜின் 'வீட்ல விசேஷங்க' படத்தில் மோகனா நடித்த வேடத்தில் இந்தியில் தயாராகும் 'மிஸ்டர் பேச்சாரா' படத்தில் நடிக்கிறார்.
- இதுவரை காலமும் சென்சார் பிரச்சனையில் சிக்கியிருந்த ஆர்.கே.செல்வமணியின் 'குற்றப்பத்திரிகை' படத்திற்குத் தடை நீங்கியுள்ளது. இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை சம்பந்தப்பட்ட கதையமைப்பைக் கொண்ட இப்படத்தை இம்மாத இறுதியில் வெளியிடத் திட்டமிட்டுள்ளார் தயாரிப்பாளர் ரவி யாதவ்.
- தெலுங்கில் கமல் நடித்து வெற்றி பெற்ற படம் 'ரெண்டில் பூஜாரி'. இது தமிழில் 'சின்னவீடு பெரிய வீடு' என்ற பெயரில் மொழி மாற்றப்படுகிறது. இதில் கமலுக்கு ஜோடியாக ஷோபனா-நக்மா ஆகியோர் நடித்துள்ளனர்.
- 'தோழர் பாண்டியன்' படத்திற்குப் பின்னர் ராம்நாதன் தயாரிப்பில் சத்தியராஜ் மணிவண்ணன் இணையும் படத்திற்கு 'வீரப்பதக்கம்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இதில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் வேடத்தில் நடிக்கிறார் சத்தியராஜ்.
- தமிழ், மலையாளம், தெலுங்கு ஆகிய மொழிகளில் நடித்துள்ள மீனா, முதல் முறையாகக் கன்னட படமொன்றில் நடிக்கவுள்ளார். இதில் மீனாவுக்கு ஜோடியாக கன்னட முன்னணி நடிகரான ரவிச்சந்திரன் நடிக்கிறார்.
- 'சேவல்போரி பாண்டி' படத்திற்கு திரைக்கதை வசனம் எழுதியவர் கே.ராஜேஸ்வர். இவர் அடுத்து 'துறைமுகம்' என்ற படத்தை திரைக்கதை வசனம் எழுதி இயக்குகிறார். கதாநாயகனாக அருண் பாண்டியன் நடிக்கிறார்.
- கடந்த மாதம் மூன்று நாட்கள் படப்பிடிப்புக்களை ரத்துச்செய்துவிட்டு மூன்று விழாக்களைக் கொண்டாடினார் ராதிகா. கடந்த 10ம் திகதி அவரது மகள் ரொஸனின் பிறந்த நாள். அதற்கடுத்ததுதான் ராதிகாவின் பிறந்தநாள். அதற்கு அடுத்த நாள் திருமண நாள்.

## விஜயகாந்துக்கு பிடித்தது

"இதுவரை நான் நடித்த பாத்திரங்களைப் பற்றிச் சொல்லவேண்டுமானால் பெரிய பட்டியலிடவேண்டும். அண்மையில் நான் நடித்த வேடங்களில் 'சின்னக் கவுண்டர்', 'ராஜதுரை' போன்றவை என்னை மிகவும் கவர்ந்தவை. நான் நடிக்க விரும்பி இன்னமும் நடிக்காத பாத்திரங்கள் என்றால் நடிகர் திலகம் நவராத்திரி படத்தில் நடித்த ஒன்பது வேடங்களும், ரத்தக்கண்ணீரில் எம்.ஆர்.ராதா நடித்த அந்தக் கதாபாத்திரமும்தான்," என்று கூறுகிறார் விஜயகாந்த்.



## ...

"நா...

போ... நாளும் பொள்ளாச்சியி... போது நெரு... ஒரு பத்திரிகையில் என்றும் அந்த ஒளிப... விடைபோதல்ல நட்புதா... தவிர வேறெதுவும் இல்லை... என்றார் பிரகதி.

## ஊர்வசியின் முயற்சி

கமலின் 'மகளிர் மட்டும்' படத்தில் மூன்று கதாநாயகிகள் நடித்தது போல... மலையாளத்தில், பெண்களின் பிரச்சனை... வைத்து திரைக்கதை ஒன்றை தயார் செய்துள்ளார் ஊர்வசி.

'பெட்டகோழி கூவின நூற்றாண்டு' என்று பெ... பட்டுள்ளஅந்தப் படத்தில் நான்கு கதாநாய... நடிக்கின்றனர். அந்த நால்வரில் ஊர்வசியும் ...

## லேடி பாஸ்

ஆக்சன் ஹீரோயினாகப் பல வெற்றிப் படங்களில் நடித்... ருக்கும் விஜயசாந்தி நடிக்கும் புதிய தெலுங்குப் படத்தில் 'லேடி பாஸ்'. சினிமாஸ்கோப்பில் தயாராகிவரும் இப்படம் இதுவரை நடித்துள்ள படங்களின் தயாரிப்புச் செலவைவிட அ... பொருட் செலவில் உருவாகிறது.

'லேடிபாஸ்' தெலுங்கில் வெளிவரும் அதே நேரத்தில் தமிழிலும் வெளியிடத் திட்டமிட்டுள்ளார்கள். விஜயசாந்தி, வினோத்குமார், சர... இளவரசி ஆகியோருடன் இந்தி நடிகர் சுரேந்தர் பால் வில்லனாக ... 'இதுதாண்டா பொலிஸ்', 'பொலிஸ் லாக்கப்' போன்ற எண்பதிற்கும் மே... படங்களை இயக்கிய கோடி ராமகிருஷ்ணா இப்படத்தை இயக்குகிறா...

## வில்லனாக நாயகன்

'கிழக்கே போகும் ரயில்' படத்தில் பாஞ்சாலியால் அறி... பட்டவர் சுதாகர். இவர் இப்போது தெலுங்கில் முன்னணி நகைச்சுவை நடிகராக இருக்கிறார். அத்துடன் சில ... வில்லனாகவும் நடிக்கிறார். 'எந்த வேடத்தில் நடித்தால் என்ன பணம் வந்தால் போதும்' என்கிறார் சுதாகர் ...

## டால்பின் மீனோடு மோதல்

சரத்குமார்-ரோஜா நடித்துவரும் படம் மூக்குத்தி காசி. பொலிஸ் அதிகாரியாக நடிக்கும் சரத்குமார் வில்லன்களை பிடிக்க குளம் ஒன்றில் குதிக்க, அவரை டால்பின் மீன்கள் சுற்றி வளைத்து தாக்குகின்றன. டால்பின் மீன்களோடு மோதுகிறார் சரத்குமார். அந்தமானில் இக் காட்சி படமாக்கப்பட்டது. ஹொங்கொங்கிலும் சண்டைக்காட்சிகள் படமாக்கப் பட்டுள்ளன.

## ஜூனியர்–சீனியர்

'திருடா திருடா' படப் புகழ் ஆனந்த், 'சிந்துநதிப்பூ' புகழ் ரஞ்சித் இருவரும் கதாநாயகர்களாக நடிக்கும் புதிய படம் ஜூனியர்-சீனியர். சிவரஞ்சனி-கவிதா ஆகியோர் ஜோடிகளாக நடிக்கின்றனர். வித்தியாசமான பெயரைப் போலவே படமும் வித்தியாசமாக இருக்குமாம். டி.பாண்டி என்னும் புதிய இயக்குநர் அறிமுகமாகிறார். இசை சிற்பி.

## குருவை நின... சிலிர்...

'பாடவா உன் பாட... பொன்தான் அது ... விக்னேஷ். கிழக்கு... படம் வெற்றி ... விக்னேஷ் காட்டிய... காட்டுகிறது. பார... பற்றிப் பேசும்போ... நெகிழ்ந்து போகிற... 'செல்லக்கண்ணு' ... விக்னேஷ்-யுவரா... நடித்துள்ளது ... வெளிவரும் செ... மற்றொரு திருப்பு... என்று நம்புகிறா...



## மனிஷாவின் வெற்றி இரகசியம்

ஐந்து வருடங்களுக்கு முன்னர் 'சௌதாகர்' படத்தின் மூலம் திரையுலகை எட்டிப்பார்த்தவர் மனிஷா கொய்ராலா. அறிமுகமான முதல் படமே அமோக வெற்றி. மனிஷாவுக்கு அட்டகாசமான உடல் கட்டு (படமே சாட்சி) அதன் உபயத்தில் தனக்கு முன்பிருந்த மம்தா, கரிஷ்மா கபூர், பூஜா போன்ற உடல் அழகு நடிகைகளை ஓரம் கட்டத் தொடங்கினார்.

'1942 ஏ லவ் ஸ்டோரி' படத்தில் கதாநாயகியாக நடித்தார். அனில் கபூர் கதாநாயகன். இப்படத்தின் வெற்றியும் மனிஷாவுக்கு ஏறுமுகம் தந்திருக்கிறது.

கட்டான உடல், அதை வெளிப்படுத்த தயங்காத குணம், உற்சாகமான நடிப்பு மூன்றுமே மனிஷாவின் வெற்றிக்கு படிக்கட்டுக்கள் என்று நிச்சயமாய் சொல்ல முடியும்.

## விடையாக வெட்கம்

'பத்திரகாளி மைந்தன்' படத்தில்நடித்துக்கொண்டிருக்கிறார் ஐஸ்வர்யா (அர்ஜுன்) "இது திருமணத்திற்கு முன்னமே ஒப்புக் கொண்ட படம் முடித்துக் கொடுப்பது என் கடமை. தொடர்ந்து நடிப்பதா என்று இன்னமும் முடிவெடுக்கவில்லை" என்கிறார் ஐஸ். அவர் தாய்மை அடைந்த செய்தி பற்றி நிருபர் ஒருவர் மெல்லக் கேட்டபோது வாய் மூலமான பதில் வரவில்லை. வந்தது வெட்கச் சிரிப்பு



மாட்டிக் கொண்ட மதுபாலா

பாலசந்தர் சொன்னால் எப்படி வேண்டுமானாலும் நடிப்பேன் என்று பேட்டி கொடுத்தவர் மதுபாலா. இப்போது இந்தி இயக்குநர்கள் சொல்லும் விதமாக எல்லாம் நடித்துக்கொண்டிருக்கிறார் இந்தியில் போட்டி அதிகம். உடைத் தியாகத்திற்கு சற்றும் அஞ்சாத நடிகைகள் மத்தியில் மாட்டிக் கொண்டதால் மதுபாலாவுக்கும் வேறு வழியில்லை இருப்பதை தவிர தமிழில் இப்போது வந்துள்ள செந்தமிழ் செல்வனில் பிரசாந்தின் ஜோடியாக மதுபாலா வருகிறார். கார்த்திக்கோடு புதிய படம் ஒன்றில் நடிக்கப்போகிறார். இந்தியில் ஒரு கால், தமிழில் ஒரு கால் என்று தடுமாறினால் இருக்கும் இடமும் பறிபோகலாம். ஆயினும் இந்தி சினிமா பத்திரிகைகள் மதுபாலா பற்றி பக்கம் பக்கமாக எழுதித் தள்ளுகின்றன இந்தியில் அவர் தனியிடம் பிடித்தால் தமிழில் நடிக்க பிகு பண்ணுவார்.

## இந்திப் படவுலக கிசு-கிசு கண் எங்கே

இந்திய அழகியான ஐஸ்வர்யாராய் மீது ரிஷிகபூருக்கு ஒன்று அல்லது ஒன்றரைக்கண். தனக்கு ஜோடியாக அவரைப் போடுமாறு தயாரிப்பாளர்களை நச்சரிக்கிறாராம்.

ஆனால் ஐஸ்வர்யா ரிஷிகபூர் மீது பிரியம் வைத்ததே கிடையாது என்று சொல்கிறது பம்பாய் சினி வட்டாரம். இது தலைப் பிரியமோ?

## கிசு-கிசு 2 பூஜாவின் முடிவு

இந்திப்பட உலகின் செல்ல ராணி எனப்படும் பூஜா பேடி பர்கல் இப்ராகிம் என்பவரை காதும் காதும் வைத்த மாதிரி திருமணம் செய்தார். அவுஸ்திரேலியாவில் தேன் நிலவை அமர்க்களப்படுத்திவிட்டு நாடு திரும்பிய பூஜாபேடி ஒரு முக்கிய முடிவு எடுத்திருக்கிறார். அது யாதெனில் திரை குழந்தைகள் பெ...ற்...று கலகலவென்று இருக்க வேண்டுமாம். இந்திய ஜனத்தொகை கட்டுப்பாட்டுத்துறை என்ன செய்யப் போகிறது? 'காம சூத்ரா' கருத்தடை சாதன சாரத்திற்கு படு கவர்ச்சி போஸ் கொடுத்து பேசப்பட்டவர் இப்படி ஒரு முடிவு எடுக்கலாமா? ஏன் கூடாது. விளம்பரம் வேறு திரும் வேறு

## அதே குஷ்பு

நெப்போலியனுடன் குஷ்பு நடித்துவரும் படம் 'என் பொண்டாட்டி நல்லவ'. இயக்குவது செந்தில்நாதன். பூந்தோட்டக் காவல்காரன்' படத்தின் பின் தனக்கு ஒரு 'ஹிட்' படமாக இது அமையும் என்கிறார் செந்தில்நாதன்.

மார்க்கட் டல்லாக இருந்தாலும் 'குஷ்பு' அதே அளவில்தான் புச்சிரிப்போடு இருக்கிறார்.

நடிகர் ஜெயராமோடு தன்னைப்பற்றி கிசு கிசுக்கப்பட்டதால் வருத்தமாம். அதனால்தான் "பிரபுவை காதலித்தேன். அந்த குழி விழும் கன்ன அழகை ரசித்தேன்" என்று பேட்டி கொடுத்தாராக்கும். குஷ்பு கிசு-கிசுவால் வருந்துவது ஒரு புறமிருக்க, குஷ்புவோடு பேசப்பட்ட ஆக்சன் கிங் அர்ஜுன் இப்போது தனது படங்கள் எதிலுமே குஷ்பு இல்லாமல் பார்த்துக்கொள்கிறார்.

பிரபுவை காதலித்தேன் என்று குஷ்பு விடுத்த அதிரடிப் பேட்டியால் பிரபு குடும்ப வட்டாரமும் சற்று ஆடிப்போய்விட்டதாம்.

## கவுண்டமணியை சிரிக்க வைத்தவர்

நகைச்சுவை நடிகர் கவுண்டமணியை சிரிக்க வைத்த நடிகர் சத்யராஜ்தானாம். சத்யராஜ் நடிக்கும்போது சிரிச்சு உருளும் கவுண்டமணி, இந்த மனிஷாவைப் பார்த்தால் சிரிப்பாரா அல்லது...?

மனிஷா கொய்ராலா

ரசிகர்களுக்கு பிறக்காலசந்தோசம். விசேஷமாய் அழைக்கப்பட்டதால் மண்ணுக்கு வந்த வண்ண நிலா! அது சரி நிலவில் இருந்து மின்னலடிக்குமா? விஞ்ஞானப் புலவர்கள் ஆராய்வார்களாக!

முகப்பில்
ரஞ்சிதா-கௌதமி
கார்த்திக்
படம்-முத்துக்காளை

## ஜெயப்பிரதா குதித்தார்!

மார்க்கட் இறந்து போனால் ஒன்றில் திருமணம் செய் அல்லது அரசியலில் குதி இதுதான் இந்திய சினிமா நடிகைகளுக்குரிய சூத்திரம்.

இப்போது அரசியலில் குதித்திருப்பவர் ஜெயப்பிரதா. ஒரு காலத்தில் அவரை நினைத்தாலே, இந்திப்பட, தமிழ்ப்பட, தெலுங்குப்பட ரசிகர்களுக்கு இனிக்கும். ஸ்ரீதேவிக்கே சவாலாக வளர்ந்தவர் [illegible]

ஜெயப்பிரதாவுக்கு தமிழில் புகழ் தந்த படங்கள் [illegible]

[illegible]

## நலிய விடுவாரா அவர்?

[illegible]

## மே மாதம் ஹிட் ஆனால்...

[illegible]

## ஜோடி மாறுமா?

'தோழர் பாண்டியனை' அடுத்து திரைக்கு வரும் சத்யராஜ் படம் 'தாய்மாமன்'. சத்யராஜ்-மீனா-கவுண்டமணி நடித்துள்ளார்கள். இசை-தேவா. மீனாவை காதலிக்கும் சத்யராஜ் காதலை நிறைவேற்ற அரசியல்வாதியாகிறார். சத்யராஜ்-ரஞ்சிதா ஜோடிதான் இப்போது மார்க்கெட்டில் இருக்கிறது. 'தாய் மாமன்' படம் வெற்றி பெற்றால் சத்யராஜ்-மீனா ஜோடி அடுத்தடுத்த படங்களில் தொடரலாம்.



www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



"காற்றை யடைப்பது மனதாலே- இந்தக் காயத்தைக் காப்பது செய்கையிலே சோற்றைப் புசிப்பது வாயாலே- உயிர் துணி வுறுவது தாயாலே."

-சுப்பிரமணிய பாரதியார்-



## பெருமையை ஏற்றிடு!

அன்பை மனதில் பெருக்கிடு
ஆசை அதனைக் குறைத்திடு
பண்பாய் வாழப் பழகிடு
பள்ளி சென்று படித்திடு

எளியோர் கண்டால் இரங்கிடு
என்றும் ஒன்றாய் வாழ்ந்திடு
துளியே பகையும் இல்லாமல்
துடிப்பாய் இனிதாய் வாழ்ந்திடு

பெரியோர் அறிவைக் கேட்டிடு
பேணி அதன் வழி ஏகிடு
தறியாய் பணிகள் புரிந்திடு
தரணியில் சோம்பல் விட்டிடு

நல்லவன் எனும்பெயர் எடுத்திடு
ஞாலத்தின் நண்பனாய் வாழ்ந்திடு
உள்ளத்தில் தெளிவினைக் கூட்டிடு
உலகினில் பெருமையை ஏற்றிடு

பசறையூர்-மல்லிகா பத்மநாதன்

## பாப்பா முரசு சிறுகதை

# ஓநாயிடம் ஒரு மருந்து

ஓநாய்க்கு எப்பொழுதுமே நரியைக் கண்டால் பிடிக்காது. ஏதாவது வேலை செய்யச் சொல்லி ஏவிக்கொண்டே இருக்கும். நரி தந்திரமுள்ளதே தவிர ஓநாயிடம் பயம் அதிகம். அதைத் தெரிந்து கொண்ட ஓநாய் நரியிடம், 'எனக்கு ஆடு கொண்டு வா, மாடு கொண்டு வா' என்று அதிகாரம் செய்து கொண்டே இருக்கும்.


ஆட்டையும் மாட்டையும் கொண்டுவர நரி அலையும். ஆட்டை அடித்து வாயால் கவ்வியோ, இழுத்துக்கொண்டோ வந்து விடலாம். ஆனால் மாட்டை அப்படிச் செய்ய முடியுமா நரியினால்? ஓநாயின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வந்தது.

இப்போது ஓநாய் சிங்கத்தின் உதவியாளராகிவிட்டது. அதன் அதிகாரம் அதிகமாகி விடவே ஆட்டமும் அதிகமானது. நரியைப் பலவிதத்திலும் பாடாய்ப்படுத்த ஆரம்பித்தது ஓநாய்.

அந்த ஓநாயிடமிருந்து எப்படித் தப்புவது என்று யோசித்த நரி, அது நடவாத காரியம் என்பதை உணர்ந்தது. ஓநாய் பலமானது. அத்துடன் சிங்கத்தின் உதவியாளராகவும் இருக்கிறது. அதை ஏதாவது தந்திரம் செய்து கொன்றால்தான் ஓநாயின் தொந்தரவு நிரந்தரமாக இல்லாமல் போகும். அதற்கான தருணத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தது நரி.

திடீரென சிங்கம் நோய்வாய்ப்பட்டது. கரடி வைத்தியர் வந்து அதன் உடல் நிலையைச் சோதித்து மருந்துகள் கொடுத்தும் சிங்கத்தின் நோய் போகவில்லை. அது சில நாட்களில் இறந்துவிடுமென்று காட்டிலுள்ள எல்லா மிருகங்களுக்கும் பிராணிகளுக்கும் தெரிந்துவிட்டது. அவை வந்து நோயுற்றிருக்கும் சிங்கத்தைப் பார்த்து விட்டுச் சென்றன.

சிங்கத்தின் உதவியாளரான ஓநாய், நோயுற்ற சிங்கத்தைப் பார்க்க எந்தெந்த மிருகங்கள், பிராணிகள் வந்தன என்று பட்டியல் தயாரித்தது. அப்போதுதான் அதுவரை சிங்கத்தைப் பார்க்க நரி மட்டும் வரவில்லை என்று ஓநாய்க்குத் தெரிந்தது.



"ஓநாயாரே! என்னைப் பார்க்க யார் யாரெல்லாம் வந்தார்கள்?" என்று கேட்டது சிங்கம்.

தான் தயாரித்து வைத்திருந்த பட்டியலைப் படித்துக் காட்டிற்று ஓநாய்.

ஒவ்வொரு மிருகங்களின் பெயரையும் மிகவும் உன்னிப்பாகக் கவனித்து வந்த சிங்கம், பட்டியலை ஓநாய் படித்து முடித்ததும், "நரி வரவில்லை போலிருக்கிறதே?" என்றது.

"ஆம் அரசே... நோயுற்ற தங்களைக் காண நரி மட்டும் வரவில்லை.

"அதற்கு எவ்வளவு திமிர் இருந்தால் அது மட்டும் வராதிருக்கும்?" என்றது ஓநாய்.

சிங்கத்திற்குக் கோபம் வந்துவிட்டது. நோயுற்ற தன்னை யானை, புலி, கரடி, சிறுத்தை போன்ற பெரிய மிருகங்கள் எல்லாம் பார்த்துவிட்டுப் போக அற்ப ஜீவனான நரி வந்து பார்க்கவில்லை என்றால் அது மமதை பிடித்ததாகத்தான் இருக்க வேண்டும். அதைச் சும்மா விடக்கூடாது என்றெண்ணிய சிங்கம், நரியை உடனே இழுத்துவரச் சொல்லிக் காட்டுச் சேவலிடம் கட்டளையிட்டது.

காட்டுச் சேவல் தன் சகாக்களுடன் காடு முழுவதும் தேடி அலைந்து, ஒரு நதிக்கரையில் நின்ற நரியைப் பிடித்து வந்து சிங்கத்திடம் ஒப்படைத்தது.

சிங்கம் நரியைப் பார்த்துக் கர்ஜித்தது.

"ஏய் அற்ப நரியே! நோயுற்ற என்னைக் காட்டிலுள்ள எல்லா மிருகங்களும் பார்த்துவிட்டுச் செல்ல நீமட்டும் வராதது ஏன்?...அலட்சியமா...?", என்று கேட்டது.

"அலட்சியமில்லை அரசே!... உங்கள் உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஆசையும், அன்பும்தான்" என்றது நரி.

"என்ன சொல்கிறாய் நீ?" என்று கேட்டது சிங்கம்.

"அரசே...! உங்களுக்குக் கரடி வைத்தியர் செய்யாத வைத்தியமும் இல்லை. கொடுக்காத மருந்துமில்லை. ஆனாலும் உங்களுக்கு வந்த நோய் தீரவில்லை. இது எனக்குத்தீராத மனவருத்தத்தைக் கொடுத்தது. உங்களை எப்படியாவது காப்பாற்றி விட வேண்டுமென்று அயல்காடு சென்று பல மருத்துவர்களைக் கலந்தாலோசித்தேன். அவர்கள் உங்கள் நோய்தீர ஒருஅருமையான மருந்தைச் சொன்னார்கள்," என்றது நரி.

"என்ன மருந்து அது?" என்று சிங்கம் ஆவலாய்க் கேட்டது.

"ஓநாயின் ஈரலை நீங்கள் சாப்பிட்டால் போதுமாம். உங்கள்நோய் குணமாகி விடுமாம்." என்றது நரி.

அவ்வளவுதான் அருகிலிருந்த ஓநாயின் மீது பாய்ந்து அதை அடித்துக் கொன்று அதன் ஈரலைச் சாப்பிட்டுவிட்டது சிங்கம்.

நரி தன் எதிரி அழிந்ததைக் கண்டு சந்தோசத்துடன் காட்டிற்குள் ஓடிப் போயிற்று.

## ஆசிய விளையாட்டுக்கள் இதுவரை நடந்த இடங்கள்.

| ஆண்டு | இடம் | நாடு |
|---|---|---|
| 01. 1951 | புது டில்லி | இந்தியா |
| 02. 1954 | மனிலா | பிலிப்பைன்ஸ் |
| 03. 1956 | டோக்கியோ | ஜப்பான் |
| 04. 1962 | ஜகார்தா | இந்தோனேசியா |
| 05. 1966 | பாங்கொக் | தாய்லாந்து |
| 06. 1970 | பாங்கொக் | தாய்லாந்து |
| 07. 1974 | தெஹ்ரான் | ஈரான் |
| 08. 1978 | பாங்கொக் | தாய்லாந்து |
| 09. 1982 | புது டில்லி | இந்தியா |
| 10. 1986 | சியோல் | தென்கொரியா |
| 11. 1990 | பீக்கிங் | சீனா |
| 12. 1994 | ஹிரோஷிமா | ஜப்பான் |

## சர்வதேச குறியீடுகள்

01. ஒலிவ் மரத்தின் இலை-சமாதானம்
02. புறா- சமாதானம்.
03. வெள்ளைக் கொடி-சமாதானம்.
04. சக்கரம்-வளர்ச்சியைக் குறிக்கும்.
05. கறுப்புக் கொடி-எதிர்ப்பு, துக்கம்.
06. எலும்பு நடுவில் மண்டையோடு-ஆபத்து.
07. வெள்ளைக் கொடி- பௌத்தர்கள் துக்கம்.
08. தலைகீழாக கொடி-துன்பம்.

எம்.எச்.எப்.பௌமியா
க/வஹுங்கொஹ மு.வி-ஹந்தெஸ்ஸ.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 24.09.1994.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 57
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல. 55

பரிசுக்குரியவர்
எஸ்.எப்.ஸஹ்தியா யாஸீன்
அல்ஹிரா ம.வித்தியாலயம்-கொட்டாரமுல்லை.

பாராட்டுக்குரியவர்கள்

எம்.புஸ்பராஜா-சார்னியா-தமிழ் மகா வித்தியாலயம்-கந்தேகெதர.
ஆர்.கலா-இரத்தினபுரி போஸ்ட்.
பிரசன்னாத் மூர்த்தி-புனித மரியாள் தமிழ் வித்தியாலயம்-எட்டியாந்தோட்டை.
ச.சரத்குமாரி-கலவான.
வத்சலா சத்தியசீலன்-புனித தோமஸ் மகளிர் கல்லூரி-மாத்தளை.
சாமிலா தாஹிர்-மன்னார்-03.
ஹக்கீமா ராஸிக்-பஸ்யால.
கீத்தா தவபால்-இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்-வவுனியா.
த.கண்ணதாசன்-இந்துக்கல்லூரி-வாழைச்சேனை.
வி.ஜெயந்தினி-விவேகானந்த ம.மகாவித்தியாலயம், மட்டக்களப்பு.
பா.சசிகுமார்-கொட்டகலை.
செ,வசந்தமலர்-பேர்த் அரசினர் தமிழ் பாடசாலை, ஹொரணை.

## விடுகதைகளும் விடைகளும்

01. பேசாதோர் எல்லாம் வந்து பேசுவர், கூடாதவர் எல்லாம் ஒன்று கூடுவர். அது எப்போது?
02. முதுகிலே மூட்டை தூக்கி மூன்று மணிக்கு முடிந்த தூரம் போகும். அது என்ன?
3. கண்ணைப் பறிக்கும் கட்டழகி, கண் நொடியில் மறைகின்றாள். அவள் யார்?
4. பச்சை மனிதன் பாய்போட்டு படுத்திருக்கிறான். அவன் யார்?
05. பாட்டுப்பாடி வரும்- பட்டென்று அடித்தால் சட்டென சாகும். அது என்ன?

**விடைகள்**

1. தேர்தலில் 2. நத்தை
3. மின்னல் 4.கீரைப் பாத்தி
5. நுளம்பு.

எஸ்.ஜெசிந்தா
புனித பத்திரிசியார் கல்லூரி-தலவாக்கலை.

01. சொன்னதைக் கேட்கும். ஆனால் திருப்பி சொல்லாது. அது என்ன?
02. வாழ்நாள் முழுவதும் வாழுவான். காண முடியாது. திடீரென்று போய்விடுவான். திரும்பி வரமாட்டான். அவன் யார்?
03. பையிலிருந்து விழும் பொருளை எடுக்க முடியாது. அது என்ன?
04. தன்னை அழித்து பிறருக்குதவுவான். அவன் யார்?
05. அடித்தால் அழமாட்டான். உதைத்தால் குதித்தோடுவான்- அவன் யார்?

01. காது 02. உயிர்
03. வார்த்தை 04. மெழுகுதிரி
05. பந்து

ஆர்.குலோரி ரஞ்சனி-மட்டக்களப்பு.

01. அறிவை வழங்குவான். ஆனால் பேசமாட்டான். அவன் யார்?
02. பார்க்க அழகான பூ, கையில் எடுக்க்முடியாப்பூ அது என்ன?
03. எலும்பில்லாதவன் எருதுபோல் உழைக்கிறான். அவன் யார்?
04. வெள்ளத்தால் அழியாதது; வெந்தணலில் வேகாதது; கள்வரால் கொள்ள முடியாதது. அது என்ன?
05. இது இல்லாமல் உயிரினம் வாழ முடியாது. அது என்ன?

01. புத்தகம் 02. நெருப்பு
03. மண் புழு 04. கல்வி
05. காற்று

எம்.எச்.மபாஹிரா ஹபீப்
பண்ணவ.

## மனிதனால் செய்ய முடியாதவை

01. கண்களைத் திறந்து வைத்துக் கொண்டு 'தும்ம' முடியாது.
02. முரணான (வேறுபட்ட) இரண்டு வாசனைகளை ஒரே சமயத்தில் மூக்கினால் உணர முடியாது.
03. மண்ணீரலை நீக்கிவிட்டால் மனிதனுக்கு கோபம் வராது.
04. தானாகவே மூச்சை அடக்கி உயிரை போக்க முடியாது.
05. கண்களை மூடிக்கொண்டு நேராக நடக்கவும் முடியாது.

த.தனராஜன்
ஸ்ரீ இராமகிருஷ்ணா கல்லூரி
அக்கரைப்பற்று.

## எந்தக் கோணத்திலும் ஒன்று

| | | |
|---|---|---|
| ப | த | வி |
| த | வ | ளை |
| வி | ளை | வு |

அனுப்பியது
எஸ்.ஏ.ஜவாத்-ஏறாவூர்

## எண் விநோதம்

1×8+1=9
12×8+2=98
123×8+3=987
1234×8+4=9876
12345×8+5=98765
123456×8+6=987654
1234567×8+7=9876543
12345678×8+8=98765432
123456789×8+9=987654321

அனுப்பியவர்
கும்புக்கந்துறை அனீஸ் எம்.ஷாகிர்

பாப்பா முரசுக்கு
உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.
**முகவரி:**
பாப்பா முரசு
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## மிகப் பெரிய கவிதை



- **ஒரே மனிதரால் எழுதப்பட்ட மிகப் பெரிய கவிதை எது?**
  ஷா-நாமா என்பதாகும். ஷா-நாமா என்றால் 'ஷா'க்களின் புத்தகம் என்று பொருள் படும்.
- **இதன் நீளம் எவ்வளவு?**
  இது அறுபதினாயிரம் இரண்டு வரிச் செய்யுள்களைக் கொண்டது.
- **எழுதியவர் யார்?**
  பாரசீகத்தைச் சேர்ந்த கவிஞர் அப்துல் காசிம் மன்சூர் என்பவர் பிர்தவுசி என்ற புனை பெயரில் இதை எழுதினார்.
- **இந்தக் கவிதை எதைப் பற்றியது?**
  கி.மு.700ம் ஆண்டிலிருந்து கி.பி.700ம் ஆண்டுவரை பாரசீகத்தில் ஆட்சி செய்த மன்னர்களைப் பற்றிய வரலாறு இது.
- **பிர்தவுசி இதை யாருக்காக எழுதினார்?**
  மன்னன் சுல்தான் முகமது கஜினிக்காக எழுதினார். இதற்காக ஒவ்வொரு இரண்டடிச் செய்யுளுக்கும் ஒவ்வொரு தங்க நாணயம் தருவதாக கஜினி கூறியிருந்தார்.

## அறிவோம் மனதில் பதிவோம்

'புஷ்பராகம்' (டொபாஸ்) எனும் இரத்தினக் கல் விலை உயர்ந்தது. உலகிலேயே மிகவும் பெரிய டோபாஸ் கல் அமெரிக்காவில் உள்ளது. செவ்வக வடிவமாக 172 முகங்களுடன் வெட்டப்பட்ட இந்தக் கல் 22895.5 கரட் ஆகும்.




மணல் கோழி என்ற பறவை பாலைவனங்களில் வாழும். இங்கு நீர் கிடைப்பது அரிது. அதனால் இந்தக் கோழி, குஞ்சு பொரித்திருக்கும் சமயங்களில் காலையில் நெடுந்தூரம் பறந்து நீர் உள்ள இடங்களில் நீரைக் குடித்துவிட்டு உடலையும் நீரில் நனைத்துக்கொள்ளும். திரும்பி வந்து தன் இறகுகளிலிருந்து சொட்டும் நீரைக்



# தேன் கிண்ணம்





## எங்குமெங்கும்.....

உடைந்து விழுந்த
உயிர்த்துண்டின்
முறிந்த
அழுக்கேறிய
முள்ளொன்று
பல்லிளித்து
எங்கும்
முகம் காட்டும்.

ஆயிரமாயிரம்
எலும்புக்கூடுகள்
அந்தரத்தில்
ஆட்டம் போடும்
முகாரிகள்
பெருமிதமாய்
முளைத்து
தள்ளித்தள்ளி
கை
தட்டிச் சிரிக்கும்.

இது
என்ன அதிசயம்!
மண்டையோடுகள்
மண்டியிட்டு
உருண்டு
ஊளையிட்டுத் திரிகின்றனவே!
ஒவ்வொரு
காட்டேறிகளின்
கரங்களின்
பிடிகளுக்குள்ளும்
குவளைகளுக்குப் பதிலாக
ரத்தம்
நிரப்பப்பட்ட
மண்டையோடுகள்
நிர்க்கதியாய் கிடக்கும்

ஓடுகின்றேன்
ஒளியைவிட
வேகமாக
மூச்சிரைக்க
பயத்துடன் ஓடுகின்றேன்.
என்றாலும் என்
பார்வைகள்
நிலைகுத்திய
பக்கமெல்லாம்
மானுடம் கட்டிப்பிடித்த
நிலையில்
மனுஷங்களெல்லாம்
மரணத்து
மடியில்...

புலிச் சுழற்சியின்
சுற்றலோடு
நானும்
சுருண்டுபோகிறேன்;
ஆனாலும்
அமைதி
எனக்குள்
அகப்படவில்லை.

விழிகள் வெறித்து
வீசிய
பக்கமெல்லாம்
தெறித்து விழுந்த
மனித சதைத் துண்டும்
அதன் மடிமேல்
ஆயுதங்களினது
தொடர்ந்தேச்சையான
அணிவகுப்பும்...

**கிண்ணியா-சபருள்ளா.**

## நம் தேச சித்திரத்தில்!

நமது
தேசத்தின்
தெருக்கோடிகளில்
குருதியாறும்
துப்பாக்கிகள்
சலவை செய்த
அப்பாவி உயிர்களும்
அங்குமிங்குமாய்
கண்காட்சி
சித்திரங்கள் போல....!

ஹிட்லருக்கும்
ஸ்டாலினுக்கும்
அப்பாற்பட்ட
ஆதிக்க ப்ரியத்துடனான
அராஜக நடமாடல்கள்
சகஜமாகிப்போன
வாழ்க்கை நகர்வுகளோடு
இந்தச் சமூகம்....!

தீங்கிழைப்பதும்
தீ வைப்பதும்
நம்
தேசத்தின்
புதிய
கொள்கைகளாய்....!

கடந்துபோன
ஜீவியங்களின்
சொப்பனங்களோடு
கிழடுகளும்
தெளிவாய் தெரியாத
தொலைவுகளை
நோக்கியபடியே
இளசுகளும்
தம்மைத்தாமே
ஏமாற்றிக்கொண்டு
ஒரு சுழற்சிக்குள்
கூண்டுகிளிகளாய்.....!


ஐக்கியம்
ஆயுதங்களால்
துளைக்கப்பட்டு
ஆபத்தான
'ஓசோனை'ப்போல....!

சுயவிலாசம்
கேட்பதும்
சோதிக்கப்படுவதும்

நம்மைச்
சுற்றி பின்னப்பட்ட
சிலந்திவலைகளாய்....!

ம்....
நமது தேகம்
அலங்கோல மெருகேறிப்போன
கண்காட்சி
சித்திரமாய்....!

**நூரளையூரான்**
**கே.கனகராஜா.**



## இனி செத்துப்போவதைவிட வேறு முடிவேயில்லை...

இதோ... என்
மனசின் பரந்த வெளியில்
உன் நினைவுகள்
அகதியாய் அவதிப்படுகிறது...

காதலிக்கவில்லையென்று
சொல்லியிருந்தாய்
அது நியாயம்தான்....

வானம் அலங்கரித்துக்கொள்ள
ஆசைப்படாத-
அமாவாசை நாட்களில்தானே!
நாம்,
சந்தித்துக் கொண்டோம்...

சாட்சி வைத்து
சத்தியம் செய்துகொள்ள
இரக்கமில்லாத இருள்தானே...!
உட்கார்ந்திருந்தது..

மௌனங்களால் பேசியவளே...!
வார்த்தைகளை
யாருக்காக சேமித்து வைத்தாய்..?

உனக்குத் திருமணமாம்
எனக்குச் சந்தோசம்தான்...

வாழத் தெரியாத
ஒருத்தியை இழப்பதில்
யாருக்குத்தான் துன்பமிருக்கும்...?

நான் செத்துப் போனாலும்
நீ அழக்கூடாது..
ஒரு-
"துரோகி அல்லது வஞ்சகி"
கண்ணீர் விட்டால்கூட
நான் ஆனந்தப்படுவேன்..!

காதலித்தேன்- அது
என் இருதயத்தின் தேவை
காதல்...!

காதலிக்கப்படவில்லை
உன் இருதயத்தின் தேவை
திருமணம்..!

உணர்வுகளால் மைதீட்டி
கண்களை எனக்கு
பரிசளித்தாய்..!

அன்பால் இறக்கை செய்து
இருதயத்தை...
உன் பெயரில் எழுதி வைத்தேன்!

நீ கொடுத்ததை
பறித்துவிட்டாய்..!
நான் கொடுத்ததை
பறக்கவிட்டாய்...

இருந்தும்;
பரவாயில்லை காதலி..!
உன் சிறைச்சாலைக்குள்
சிதைக்கப்படாமலிருந்தால்
என்--
சிறகுகளை அனுப்பிவை...!

மனிதர்களே...இப்படி
என் கல்லறையில்
எழுதிவையுங்கள்..!

"இவன் மட்டும்தான்
இரண்டுமுறை
புதைக்கப்பட்டிருக்கிறான்..."

"அவள் நெஞ்சிக்குள்ளும்...!
இந்த மண்ணுக்குள்ளும்...!

**பொத்துவில் ஏ.மஜீத்.**

## கனவுகள்

இமை மூடி
விழியுறங்க
மனக்கதவு
படபடத்துத் திறக்கும்

அமிழ்ந்து போன
எண்ணமெல்லாம்,
மண்புழு போல்
மெதுவாய்
தலைநீட்டிப் பார்க்கும்

நிராசையான
ஆசைகள் கூட
இங்கே
வெற்றி உலா
நடத்தும்.

கசந்துபோன
உறவுகளும்--வந்து
கைகுலுக்கி
உரிமை
கொண்டாடும்.

இரத்தம் தோய்ந்த
என் தேசம் கூட
அவசரமாய்
வெள்ளையடித்துக் கொள்ளும்.

சாம்பல் மேட்டிலிருந்தே
சமாதானப் புறா
பீனிக்ஸ் பறவை போல்
சிறகடித்தெழும்பும்.
மீண்டும்
உணர்வுகள்
விழித்துக் கொள்ள
நெஞ்சில் சுமையை
ஏற்றி விட்டே
கனவுகள் மெல்ல
கலைந்து போகும்.

**மட்டுநகர்-நர்மி.**



## கறை நீங்குமா?

துப்பாக்கிகள் துப்பும்
எச்சில் ரவைகளால்
தாயின் மேனி
அசிங்க மடைந்து
நாற்ற மடிக்கிறது.
இனவாதப் பஞ்சை
சுயநல நீரில்
தோய்த் தெடுத்து
தேய்த்துக் கழுவி
சனநாயக வாசனை
பூசிவிடுவதால்
தாயின் கறைகள்
தீர்ந்து மணக்குமா?

**ஏ.ஐ.எம்.மஹ்றூபு**
**மாபோளை.**

## "பொல்லாத அனுபவம்"

அனுகல் ஒலி
அட்டகாசம் செலுத்தும்
அச்சுறுத்தலான
அந்த இராப் பொழுதுகள்...!

சப்பாத்து ஒலி கேட்டால் போதும்
எமது ஊர்க் காவலர்கள்
பறை சாற்ற தொடங்கி விடுவார்கள்
அதற்கு மெட்டாக அமைவது--எமது
இதயத் துடிப்பொலிகள்

வீதி ஓரத்தில் கிடக்கும்
எரிந்த உடல் மீதிகள்தான்
பறை சாற்றும் எமது காவலர்கள்
பசியாறும் உணவு
போதும் இந்தப்
பொல்லாத அனுபவம்.

**எம்.சுராஜ்-காரைதீவு-02.**



## மீண்டும் ஒரு நாள்! நீ வருவாய்!

என்னவளே...!
எனக்குள்ளே...
எத்தனை நாட்கள்
உன் நினைவலைகள்
எழுந்து புரள்வதைப்
பார்க்கின்றேன்...

நீ-மீண்டும் வருவாய் என்று
வானம் சொல்கின்றது
ஆனால் நிலவு மட்டும்
தேய்ந்து போகின்றது.

காதலியே...!
காலமெலாம் உனக்காக
கண் விழித்திருக்கின்றேன்
நம் காதல் சின்னத்தை
உடையவிடக் கூடாது
என்பதற்காய்.....

தூரத்தே...நீயும்
துணை இன்றி வாழுகின்றாய்
தூக்கமே எனக்கில்லை
கன்னியே...நான்
என்ன செய்வேன்?

நோயிலும்
நோன்பிருந்து
நாம் கொண்ட காதல்
உண்மைக் காதல் என்றால்
மீண்டும் ஒரு நாள்....
நீ வருவாய்....!

**தமிழ் கண்ணன்-பாரீஸ்.**

## என்னம்மா சௌக்கியமா?



கரடிக் குட்டி தனை ஈன்ற தாயை பரிவோடு வருடிக்கொடுத்து பாசமழை பொழியும் நேரத்தில் படு கச்சிதமான 'கிளிக்'.

## இந்த வாரம் உங்கள் பலன்

(18.09.94 முதல் 24.09.94 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கன்னி | - சூரியன், புதன் |
| துலாம் | - வியாழன், வெள்ளி, இராகு |
| கும்பம்- | - சனி |
| மேடம் | - கேது |
| மிதுனம் | - செவ்வாய் |

★ சந்திரன்-கும்பம், மீனம், மேடம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, காரியசித்தி. | பி.ப 2 மணி |
| திங்கள்- | செலவு மிகுதி, பொருள் வரவு தடை. | காலை 7 மணி |
| செவ்வாய்- | அந்நியரால் தொல்லை, மனக் கஷ்டம். | பகல் 12 மணி |
| புதன்- | திடீர் பயணம், செலவு மிகுதி. | காலை 9 மணி |
| வியாழன்- | அந்நியர் உதவி, மனச் சந்தோஷம். | பி.ப 4 மணி |
| வெள்ளி- | வெளியிட வாழ்க்கை, மன நிம்மதி. | காலை 9 மணி |
| சனி- | துயர் நீங்கும், முயற்சி வெற்றி. | பி.ப 3 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 5

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனக்குறை நீங்கும், தொழில் விருத்தி. | காலை 7 மணி |
| திங்கள்- | அந்நியர் உதவி, முயற்சி வெற்றி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | தனலாபம், உயர்ந்த எண்ணம். | காலை 8 மணி |
| புதன்- | வெளியிடப் பயணம், கௌரவம். | பகல் 11 மணி |
| வியாழன்- | துயர் நீங்கும், முயற்சி தடை. | காலை 6 மணி |
| வெள்ளி- | பணக்கஷ்டம், செலவு மிகுதி. | பி.ப 3 மணி |
| சனி- | மனமகிழ்ச்சி, தொழில் நிலைப்பேறு. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-9

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, முயற்சி வெற்றி. | காலை 10 மணி |
| திங்கள்- | பெரியோர் நட்பு, காரியானுகூலம். | காலை 7 மணி |
| செவ்வாய்- | துயர் அதிகம், பொருளாதார தடை. | பகல் 12 மணி |
| புதன்- | வீண் குறை கேட்டல், மனக் கவலை. | பகல் 11 மணி |
| வியாழன்- | தனலாபம், கௌரவம். | காலை 10 மணி |
| வெள்ளி- | புதிய முயற்சி, மனத் தைரியம். | காலை 9 மணி |
| சனி- | செலவு மிகுதி, வெளியிடப் பயணம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் மேன்மை, கௌரவம். | பகல் 12 மணி |
| திங்கள்- | குடும்ப சுகம், மன மகிழ்ச்சி. | காலை 9 மணி |
| செவ்வாய்- | பயணங்களில் வெற்றி, செலவு மிகுதி. | பி.ப 1 மணி |
| புதன்- | துயர் நீங்கும், பொருள் பேறு. | காலை 8 மணி |
| வியாழன்- | தன்னம்பிக்கை, மனமகிழ்ச்சி. | காலை 9 மணி |
| வெள்ளி- | வெளியிடப் பயணம், காரிய நன்மை. | பி.ப 2 மணி |
| சனி- | வீண் மனஸ்தாபம், தொழில் கஷ்டம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | புதிய முயற்சி, பொருள் இலாபம். | காலை 8 மணி |
| திங்கள்- | பெரியோர் நட்பு, கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | அந்நியர் நட்பு, தொழில் சிறப்பு. | பி.ப 1 மணி |
| புதன்- | கடன் பயம் நீங்கும், மனமகிழ்ச்சி. | பி.ப 4 மணி |
| வியாழன்- | தெய்வானுகூலம், மனக்குறை நீங்கும். | பி.ப 2 மணி |
| வெள்ளி- | வெளியிடப் பயணம், மனத் தைரியம். | பி.ப 1 மணி |
| சனி- | செலவு மிகுதி, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 2

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, காரியானுகூலம். | பகல் 12 மணி |
| திங்கள- | வீண் தொல்லை நீங்கும், புதிய முயற்சி. | காலை 9 மணி |
| செவ்வாய்- | திடீர் பயணம், செலவு மிகுதி. | பி.ப 1 மணி |
| புதன்- | எதிர்பார்த்த கருமம் வெற்றி, மகிழ்ச்சி. | காலை 10 மணி |
| வியாழன்- | மனக் கலக்கம், தேகசுகம் பாதிப்பு. | பி.ப 2 மணி |
| வெள்ளி- | பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | காலை 9 மணி |
| சனி- | தனலாபம், காரிய சித்தி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 2

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் நிலை உயர்வு, காரிய சித்தி. | காலை 8 மணி |
| திங்கள்- | மனக்குறை நீங்கும், பணக்கஷ்டம் தீரும். | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, கௌரவம். | பகல் 12 மணி |
| புதன்- | மனப்பயம் நீங்கும் செய்தொழில் நன்மை. | காலை 7 மணி |
| வியாழன்- | தெய்வ நம்பிக்கை, கௌரவம். | பி.ப 1 மணி |
| வெள்ளி- | மனப்போராட்டம், உறவினர் உதவி. | காலை 7 மணி |
| சனி- | பொருள் வரவு, தேகசுகம் நன்மை. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம் -3

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனக் கவலை, உயர்ந்த நட்பு. | காலை 7 மணி |
| திங்கள்- | இடமாற்றம், வீண் தொல்லை. | காலை 10 மணி |
| செவ்வாய்- | தெய்வ நம்பிக்கை, கௌரவம். | பகல் 12 மணி |
| புதன்- | அந்நியர் நட்பு, முயற்சி பலிதம். | காலை 8 மணி |
| வியாழன்- | பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | பி.ப 1 மணி |
| வெள்ளி- | வீண் துயர் நீங்கும், செலவு மிகுதி. | காலை 9 மணி |
| சனி- | பொருள் வரவு, காரியசித்தி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 4

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| திங்கள்- | மனக் கஷ்டம் நீங்கும், உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | பொருள் வரவு, மன மகிழ்ச்சி. | பி.ப 2 மணி |
| புதன்- | அந்நியரால் கலகம், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| வியாழன்- | துயர் நீங்கும், காரியங்களில் வெற்றி. | பி.ப 1 மணி |
| வெள்ளி- | வெளியிடப் பயணம், மனமாற்றம். | காலை 8 மணி |
| சனி- | தன்னம்பிக்கை, பொருளாதார நன்மை. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம் -1

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தனலாபம், செய்தொழில் விருத்தி. | பகல் 12 மணி |
| திங்கள்- | கௌரவம், உயர்ந்த நிலை. | காலை 9 மணி |
| செவ்வாய்- | பெரியோர் பகை, மனக் கஷ்டம். | காலை 8 மணி |
| புதன்- | தனலாபக் குறைவு, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| வியாழன்- | அந்நியர் நட்பு, வீண் மனஸ்தாபம். | காலை 7 மணி |
| வெள்ளி- | துயர் நீங்கும், நம்பிக்கை மிகுதி. | காலை 8 மணி |
| சனி- | பயனற்ற செயல், கௌரவக் குறைவு. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் கேடு, மனக் கஷ்டம். | பி.ப 2 மணி |
| திங்கள்- | முயற்சி பலிதம், கௌரவம். | காலை 9 மணி |
| செவ்வாய்- | தெய்வ நம்பிக்கை, காரியானுகூலம். | பி.ப 1 மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, அரச சன்மானம். | காலை 7 மணி |
| வியாழன்- | பயனற்ற செயல், மனத் துயர். | பகல் 12 மணி |
| வெள்ளி- | பணத்தடை, காரிய மந்தம். | பி.ப 1 மணி |
| சனி- | முயற்சி வெற்றி, செலவு அதிகம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி அதிஷ்ட இலக்கம்- 7

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)


| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் நிலை விருத்தி, முயற்சி பலிதம். | காலை 9 மணி |
| திங்கள்- | பணவரவு, தொழில் சிறப்பு. | காலை 10 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| புதன்- | பொருள் இலாபம், புதிய முயற்சி. | காலை 6 மணி |
| வியாழன்- | தொழில் மந்தம், பணக்கஷ்டம். | பகல் 12 மணி |
| வெள்ளி- | அந்நியர் நட்பு, கௌரவம். | பி.ப 1 மணி |
| சனி- | வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 5

அறிந்து கொள்ளுங்கள் — ஆரோக்கியம் பெறுங்கள் — ஆனந்தமாய் வாழுங்கள்

# மருத்துவ விந்தைகள்

## 3 வருடங்கள் தாமதித்துப் பிறந்த குழந்தை



பீட்டர் என்ற தொழிலாளி டெயிட்றே என்ற பெண்ணை மணந்து பலவருடங்களாகியும் குழந்தைப் பாக்கியம் கிட்டவில்லை. டெயிட்றே கருமுட்டைகளை உருவாக்கிய போதும் இயற்கை நிலையில் குழந்தையினை உற்பத்தி செய்யும் சக்தியற்றவராக விருந்தார். பலதரப்பட்ட பரிசோதனைகள் செய்தும் பயனற்றுப் போனமையினால் செயற்கை முறையில்-பரிசோதனைக் குழாய் மூலமான குழந்தையாவது பெற்றெடுப்பதற்குச் . சம்மதித்தனர். இதற்கான செலவுகளைச் சீர்செய்ய இங்கிலாந்தில் டீல் என்னுமிடத்திலுள்ள தங்கள் ஒரே வீட்டினை விற்றனர்.

பிரிட்டனின் போண் ஹோல் மருத்துவமனையைச் சேர்ந்த டாக்டர் பீட்டர் பிரின்ஸ்டன் சிகிச்சை அளிக்க முன் வந்தார். டெயிட்றேயின் இருபது கருமுட்டைகளுடன் பீட்டரின் உயிரணுக்கள் பரிசோதனைக் குழாய்க்குள் சேர்க்கப்பட்டபோது 15 கருமுட்டைகள் சினைப்பட்டன. இவற்றில் மூன்று மட்டுமே டெயிட்றேயின் கருப்பையில் சேர்க்கப்பட்டன. இதனால் ஒன்று நீங்கலாக மற்றைய இரு கருமுளைகளும் இரட்டைக் குழந்தைகளாக உருவெடுத்தன. 1991 ஜனவரி 17ல் பெண்குழந்தைகள் பிறந்தன.

தங்கள் ஒரே வீட்டைவிற்று மருத்துவச் செலவுகளை ஈடுகட்டிய பீட்டர்-டெயிட்றே தம்பதியினர் அவர்களுடைய நண்பர் ஒருவர் கொடுத்த ஒரு சிறு குடிசையில் ஆனந்தமாக வாழ்ந்தனர்.

கருமுளைகளில் பாதுகாப்பாக மேலும் 12- பரிசோதனைக் குழாய்களில் அப்படியே உறை நிலையிலிருந்தன. மற்றுமொரு குழந்தையைப் பெற்றெடுக்கத் தம்பதியினர் விரும்பினர். ஆனால் ஒரு தடவை முயற்சி பலனளிக்கவில்லையானாலும் மறு முயற்சியில் பலன் கிடைத்தது. முதலிரு பெண் குழந்தைகள் பிறந்து 3 வருடங்களின் பின்னர்- கடந்த ஜுலை 22ல் மூன்றாவதாக ஒரு பையன் பிறந்துள்ளான்.

றொபின் மற்றும் இமோகன் ஆகிய இரு மூத்த சகோதரிகளும் மழலைமொழி பேசி, அடிமேல் அடிவைத்து நடை பயிலும் வேளை, அவர்களுடனேயே ஒரே பரிசோதனைச் சாலையில் கருவாகியவன் 3 ஆண்டுகளின் பின்னர் முழு வளர்ச்சி பெற்ற-8 இறாத்தல் 4 அவுன்ஸ் எடையுள்ள குழந்தையாகப் பிறந்து மருத்துவ உலகில் மற்றுமொரு விந்தையினை உருவாக்கியிருக்கிறான். தங்கள் தம்பியை அக்காமார் இருவரும் அன்பாக சீராட்டி பாராட்டி வளர்ப்பதில் தாயார் டெயிட்றேக்கு மிகவும் உதவி வருகின்றனர்.



## புற்று நோயும் சோயா அவரையும்!

சோயா அவரை உண்பவருக்கு புற்று நோய்க் கிருமிகளின் தாக்கம் மிக மிகக் குறைவு என்று அண்மைக்கால ஆய்வுகள் கூறுகின்றன.

ஐரோப்பிய நாடுகளிலும் மற்றும் வட அமெரிக்காவிலும் மார்புப் புற்றுநோயின் தாக்கம் மிக அதிகம். ஆசியாவில் சோயா அவரையை உணவில் கணிசமான அளவில் சேர்ப்போருக்கு இந்நோய் வருவதில்லை என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானியப் பெண்கள் அதிக அளவில் சோயா உண்கின்றனர். பிரிட்டனிலுள்ள பெண்களைவிட ஜப்பானியப் பெண்கள் அதிகமாகவே சோயா உண்பதனால் அவர்களுக்கு மார்புப் புற்றுநோய் வருவதில்லை. இங்கிலாந்தின் கேம்பிரிஜ் பல்கலைக்கழக சத்துணவியலாளர்கள் மேற்கொண்ட ஆராய்ச்சி முடிவுகளின்படி இக் கூற்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

## கொழுத்த பிள்ளைகள்

வசதி படைத்தவர்கள் வீட்டுப் பிள்ளைகள் அளவுக்கு மீறி எடை அதிகரித்து வளர்ந்து வர வாய்ப்பிருக்கிறது. இளமையிலிருந்தே குழந்தைகளுக்கு சத்து அதிகமாவ உணவுப் பதார்த்தங்களை அளித்து வளர்ப்பதனால் அவர்களுக்கு கொழுப்பு அதிகரிக்கிறது. இதனால் அவர்களுடைய உடல் நலன் கெட்டுப்போக வாய்ப்பேற்படுகிறது.

சிங்கப்பூரில் குழந்தைகளின் வளர்ச்சியில் பெற்றோர் அதிக அக்கறை காட்டவேண்டும் என்ற ஊக்கத்தினை அந்த நாட்டு அரசாங்கமே அறிவுறுத்தி வருகிறது. சராசரி எடைக்கு அதிகமான எடைகூடிய குழந்தைகளை 'எடை கூடியவர்கள்' என்று கணித்து, உரிய காலத்திலேயே நிவர்த்தி தேட பெற்றார் வற்புறுத்தப்படுகின்றனர்.

உலகின் பல நாடுகள் தங்கள் குடி மக்கள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த பல பிரயத்தனங்களை ஏற்கனவே மேற்கொள்ள ஆரம்பித்துவிட்டன. ஆனால் உலகிலேயே அதிக மக்கள் தொகையினைக் கொண்ட சீனா குடும்பக் கட்டுப்பாட்டினை அண்மையில்தான் பிரசாரம் செய்ய ஆரம்பித்தது. அங்கும் இப்பொழுது குழந்தைகளை வளர்த்தெடுப்பது பெரும் பிரச்சனையாகி வருகிறது. அங்கும் பிள்ளைகள் இளவயதிலேயே கொழுத்து வளர ஆரம்பிப்பதால் இரத்தக் கொதிப்பு நோய் போன்ற நோய்க்கு இடமளித்து வருகின்றனர்.

## ஏழைகளைத் தாக்கும் காச நோய்

காசநோய் ஒரு மோசமான நோய். அதுவும் நுரைமீரலில் காசநோய் ஏற்பட்டால் இது மற்றவர்களுக்குச் சுலபத்தில் தொற்றக்கூடியது. நுரைமீரல் காசநோய் உள்ளவர்களிடம் நெருங்கி நின்று பேசுதல், நோயாளியின் இருமல் மற்றும் தும்மல் மூலமாக இந்த நோய் மற்றவர்களுக்கும் தொற்றிக் கொள்ளும். அதனால்தான் வெளிநாடுகளில் காசநோய் மருத்துவமனைகளை ஊருக்கு சற்று வெளியே ஒதுக்குப் புறமான இடங்களில் நிறுவியிருக்கிறார்கள்.

இந்த நோய் ஏற்படுவதற்கு அடிப்படைக் காரணம் ஏழ்மை, குடிப்பழக்கம் என்கிறார் டாக்டர் டிம் பெட்டோ என்பவர். இவர் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் காசநோயைப் பற்றித் தீவிர ஆராய்ச்சி செய்து வருகிறார்.

கிரைம் நியூஸ்

## இளம் தம்பதி படுகொலை

## கொலையாளிக்கு புதுமையான தண்டனை!



மகிழ்ச்சியின் பிடியிலிருந்து மரணத்தின் பிடியில் சிக்கிய குடும்பம்

குடிபோதையில் வண்டியை ஓட்டிச் சென்ற ஒரு சாரதி மற்றுமொரு வண்டியுடன் மோதி, அதில் பயணம் செய்த இளம் தம்பதியினரைக் கொன்றான். அவர்களின் இரு குழந்தைகளும் படுகாயமுற்றன. இந்தச் சாரதிக்கு 10 வருட சிறைத் தண்டனை வழங்கிய ரெக்சாஸ் மாநில-ஹுஸ்ரன் நகர நீதிபதி, அவனால் பரிதாபத்துக்குள்ளான குடும்பத்தின் புகைப் படத்தை அந்தக் குற்றவாளியின் (சிறை) அறையிலேயே மாட்டி வைக்கும்படி பணித்தார்.

நீதிபதி யோசித்தார். என்ன தண்டனை கொடுக்கலாம்?

"தன்னால் கொலை செய்யப்பட்ட இளம் தம்பதி பற்றிய நினைவு அந்தக் கொலைஞனின் நினைவில் என்றும் நிழலாட வேண்டும்" என்று நீதிபதி ரெட்போ கூறினார்.

மனுவேல் லோபஸ் என்ற அந்நபர் அன்று இரவு முழுவதும் குடி வெறியிலேயே இருந்தான். ஒரு மணி நேரம் மட்டுமே தூங்கினான். பொழுது புலர்ந்ததும் தனது நண்பனை வண்டியிலேற்றிக் கொண்டு புறப்பட்டான். தனது மனைவி குளோறியா (வயது 25), 5 வயதான மகள் மற்றும் 4 வயதான மகனுடன் 31 வயதான ஜுலியன் தேவாலயத்துக்கு தனது வண்டியில் சென்று கொண்டிருந்தபோது லோபஸ் இந்த வண்டியுடன் வந்து மோதியிருக்கிறான். ஜுலியனும் மனைவி குளோறியாவும் ஸ்தலத்திலேயே மாண்டனர். மகள் அமிகை மற்றும் விலா எலும்புகள் முறிந்துள்ளன. ஜுலியன் ஜுனியர் என்ற சிறுவன் நடமாட முடியாத அளவு பாதிக்கப்பட்டுள்ளான்.

விபத்து நடந்தபோது லோபசின் இரத்தத்தில் .27 வீதம் மதுசாரம் இருந்துள்ளது. இதில் மூன்றில் ஒரு பங்கு இருந்தாலே வண்டியினை ஓட்ட ரெக்சாசில் அனுமதி இல்லை.

லோபஸ் மெக்சிக்கோவிலிருந்து சட்ட விரோதமாக அமெரிக்காவில் குடி புகுந்தவன். 10 வருடத் தண்டனை முடிந்ததும் இவன் நாடு கடத்தப்படுவான் என்று தெரிகிறது.

## புதிய ஆய்வின் முடிவு

## பிடிக்காத காரியம் செய்தால் நிச்சயம் பிணியும் வரும்!

நீங்கள் விரும்பியபடியே காரியங்களைச் செய்து முடிக்கும் வாய்ப்புக் கிடைக்குமானால் நிச்சயமாக நீங்கள் நோய் நொடியின்றி நிம்மதியாக வாழ முடியும். ஆய்வின் மூலம் பெறப்பட்டுள்ள புதிய தரவுகள் இதனை மெய்ப்பிக்கிறன.

"நினைத்தபடியே காரியங்களைச் செய்து முடிப்பவர்களுடைய-நோயினை எதிர்த்துப் போராடும் ஆற்றல்-உண்மையில் அபரிமிதமாக விருத்தியடைகிறது. நினைத்தபடி தங்கள் காரியங்களை முடிக்க முடியாதிருப்பவர்கள் நோய் தடுப்பு ஆற்றலினை இழப்பதுடன் சோர்வுற்று நோய்களுக்கும் இடம் தருகின்றனர்" என்கிறார் உளவியலாய்வாளரான டாக்டர் ஆர்தர் ஸ்ரோன். ஸ்ரோனி புரூக்கிலுள்ள நியூயோர்க் மாநில பல்கலைக்கழக உளவியல் துறையில் பேராசிரியராகப் பணிபுரிகிறார் இவர்.

டாக்டர் ஸ்ரோனின் தலைமையில் நடைபெற்ற ஆய்வில் 100 ஆண்கள் பங்கேற்றிருந்தனர். இவர்களின் அன்றாடக் கடமைகள், தொடர்ந்து 84 நாட்களுக்குப் பதியப்படுவதற்கேற்ற வகையில் நாட்குறிப்பேடு (டயறி)கள் தரப்பட்டிருந்தன. அன்றாடப் பணிகளில் மனதுக்கு விரும்பத்தக்கவை எவை; விரும்பத்தகாதவை எவை என்ற குறிப்புகளும் பதியப்பட்டன. இந்த குறிப்புகள் அடுத்தடுத்த நாட்களில் ஆய்வாளர்களால் பரிசீலனை செய்யப்பட்டன. அத்துடன் அவரவர் நோய் தாங்கும் ஆற்றலும் அளவிடப்பட்டது.

தங்களுக்கு மிகவும் பிடித்தமான பணிகளை தயக்கமின்றிச் செய்து முடித்தவர்கள் முதலில் மனத்தளவில் திருப்தியடைந்தனர். இதனால் மன மகிழ்ச்சியும் மனநிறைவும் கண்டனர். தொற்று நோயாளர் மத்தியில்-அதே காலகட்டத்தில் நெருங்கிப் பழக வாய்ப்பளிக்கப்பட்ட போதும் அந்நோய்க் கிருமிகள் அவர்களை எதுவுமே செய்ய முடியவில்லை.

இதே வேளை தங்கள் மனதுக்குப் பிடித்தமில்லாத பணியினை மேற்கொண்டவர்கள் சோர்வுற்று, மகிழ்ச்சியிழந்து துயரினை அணைத்ததுடன் சதா எதனையோ இழந்துவிட்டவர்களைப் போன்று காணப்பட்டனர். தொற்று நோயாளர் மத்தியில் சில மணிநேரமே இவர்கள் கலந்திருக்க விட்டதும் உடனடியாக அந்நோய் இவர்களைத் தொற்றிக் கொண்டது.

"தங்களுக்குப் பிடிக்காத ஒரு காரியத்திலீடுபட நேர்ந்தால் அந்நபர் துன்பத்தை அணைத்துக் கொள்வார் என்று பண்டு தொட்டு ஒரு நம்பிக்கை இருந்தது. ஆனால் அது உண்மை என்பது விஞ்ஞான ரீதியாக நிருபணமாகிவிட்டது" என்று டாக்டர் ஸ்ரோன் கூறுகிறார். ஆகவே "எப்போதும் தனது மனதுக்குப் பிடிக்காத எக்காரியத்திலும் மனிதன் ஈடுபடாதிருந்தால், நோய் நொடியற்று என்றும் மகிழ்ச்சியாகவே வாழ முடியும்" என்கிறார் அவர்.

www.padippakam.com 

# அங்கம் 31

# கொலை விழும் நேரம்

புகைப்படத்தில் வினோ அருகில், அவன் தோளில் இடித்துக் கொண்டு நின்றது செத்துப் போன சித்ரா என்று தெரிந்ததும் இந்திரா அதிரவில்லை.

காயத்திரிக்கு எப்படி இந்தப் படம் கிடைத்தது?

வினோ-சித்ரா சம்பந்தப்பட்ட சகல தடயங்களும், சுத்தமாக அழிக்கப்பட்டு விட்டதாக நினைத்தது தப்பாகிவிட்டதே.

ஊசியின் செவிக்குள் நூல் நுளைவது மாதிரி பொலிஸ் சிறு துவாரம் தெரிந்தாலும் உள்ளே புகுந்து மோப்பம் பிடித்துவிடும்.

இப்போதும் அப்படித்தான். இந்தப் படம் மட்டும் இல்லாவிட்டால்,

'சித்ராவா யார் அது. கேட்ட பெயர் மாதிரி தெரியவில்லையே' என்று பொலிசோடு கண்ணாம்மூச்சி ஆடலாம்.

இனி முடியாது. என்ன செய்யப் போகிறான் வினோ?

எல்லாவற்றையும் சொல்லப் போகிறானா?

இந்திரா யோசித்தாள். யோசித்ததால் உள்ளே ஒரு இனம் தெரியாத பயம் உணர்ந்தாள்.

ஆனால் வினோ முதலில் பட்ட அதிர்ச்சியில் இருந்து தன்னை விடுதலை செய்துகொண்டான்.

காயத்திரியைப் பார்த்து,

"வெல்! யார் இந்த இரசிகை? என்னோடு இவ்வளவு நெருக்கமாக படம் எடுத்திருக்கிறாள். நான் மடையன். பெயரைக்கூட சரியாக நினைவில் வைக்க வில்லை,"

என்றான். இப்போது காயத்திரியின் இதழில் ஒரு புன்னகை ஏறி அலங்கரித்தது.

"அதுதான், சிகரெட் விரலில் சுட்டதும் தெரியாமல் அதிர்ச்சிப்பட்டாயா வினோ?"

"யா! என்ன அழகு பார். வாவ்! எப்படி மனதில் இவளை பத்திரப்படுத் தாமல் விட்டேன் என்று நினைத்தேன். அதுதான் அப்செட்டாகிவிட்டேன். ஒ.கே. இவள் யார்? உனக்கு தெரிந்தவளா? நட்பா-உறவா? முகவரி தெரியுமா? மறுபடி சந்திக்க விருப்பம். முடியுமா? நீ உதவுவாயா காயத்திரி?"

இந்திரா மனதுக்குள் வினோவின் முதுகில் தட்டிக்கொடுத்து வியந்தாள்.

காயத்திரியும் அவன் இயல்பாகப் பேசிய தோரணை கண்டு வியக்கவே செய்தாள்.

"வினோ! வெரி வெல்! நன்றாக பாடுவாய் நீ என்று தெரியும்."

"தாங்யூ காயத்திரி."

"ஆனால் நன்றாக பேசி நடிக்கவும் தெரியும் என்று இப்போது புரிகிறது. சின்ன வயதில் சிவாஜி படம் பராசக்தி பார்த்தாயா வினோ? சிவாஜி தோற்றார் போ."

"வெட்கமாக இருக்கிறது. முகத்தை மூடிக்கொள்ளவா?"

கேலியாக கேட்டான் வினோ.

"கிண்டல் போதும் வினோ. பொலிஸ் முட்டாள் அல்ல."

"ஓ....ஐ...ஸீ!"

"சித்ரா உன் இரசிகை என்பது நூறுவீத உண்மைதான். ஆனால்..."

"பொறு! நான் சொன்னது மெய் என்று நீ சொன்னதற்கு என் மூன்றெழுத்து. ஐ.மீன்- நன்றி!"

"அவசரப்படுகிறாய் நீ. ஆனால் அவசரப்படவேண்டிய சமயங்களில் மட்டும் படுவதில்லை நீ. ஓ.கே. இரசிகை காதலியானதுதான் கதை. அந்தக் கதை இடையிலே சோகமாக முடிந்ததுதான் ஆராயப்படவேண்டிய அத்தியாயங்கள்."

"ஆராயலாமே!"

"லாபம்தான். ஆனால் உன் உதவி இருந்தால் ஆராய்வது சுலபம். பிளீஸ் வினோ. பொலிசுக்கு உதவு. உன்னைக் காப்பாற்றுவது என் பொறுப்பு."

"இது வலையா? அல்லது விலையா?"

"வினோ நீ சூழல் புரியாமல் பேசுகிறாய். பொலிசின் கண்களில் மண் தூவ முடியாது. புரிந்து கொள்."

"நான் ஏன் தூவவேண்டும்? காயத்திரி! நீ வரம்பு மீறி என் பொறுமையைச் சோதிக்கிறாய்."

"சோ....நீ உண்மை பேசுவதாக இல்லை."

"தயவு செய்து இங்கிருந்து போய்விடு."

"இந்த இடத்திலிருந்து மட்டுமா உன் மனதில் இருந்துமா?"


"கற்பனை வளம் உனக்கு நிறையவே உண்டு. கதாசிரியையாக மாறியிருக்கலாம் நீ. காக்கி யூனிஃபோமுக்கு குட்பை சொல்லிவிட்டு கதை எழுது. முன்னுக்கு வரலாம். இந்திரா நான் வெளியே போகவேண்டும். நீ கதவை மூடு வா. போகலாமா காயத்திரி?"

வினோ வாசல் நோக்கி நகர, காயத்திரி உறுதியான குரலில் சொன்னாள்.

"போகலாம் இப்போதல்ல. உன் விருப்பப்படியுமல்ல. நில்!"

வினோ திரும்பிப் பார்த்தான். காயத்திரி இடுப்பின் இருபுறத்திலும் கைகளை வைத்துக்கொண்டு கம்பீரமாய் நின்று அவனைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

வினோ அவளை அலட்சியம் செய்யும் பார்வையால் மேய்ந்துவிட்டு,



"மிரட்டலா இன்ஸ்பெக்டர்? என்னிடம் வேகாது. வரட்டுமா?"

என்றான். திரும்பி முதுகுகாட்டி விரைந்தான். முதுகின் பின்னால் இருந்து காயத்திரியின் குரல் கேட்டது,

"தரட்டுமா?"

திரும்பிப் பாராமல் நடந்தவனை

"அண்ணாவை ஒன்றும் செய்யாதே காயத்திரி."

என்று சப்தம் போட்ட இந்திராவின் குரல் தடுத்து நிறுத்தியது. திரும்பிப் பார்க்கவும் வைத்தது. பார்த்தான்.

காயத்திரியின் கரத்தில் கைத்துப்பாக்கி இருந்தது. 'ஒரு நொடி போதும். உன் உயிர் எடுக்க' என்று முறைத்தது.

வினோ பயப்பட்டதாகத் தெரியவில்லை.

இந்திராதான் தாளம்போடும் விரல் போல உடல் நடுங்க, காயத்திரியின் கரத்தில் இருந்த துப்பாக்கியையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

வினோ உதட்டில் ஒரு லேசான புன்னகைக்கு இடம் ஒதுக்கியபடியே காயத்திரியிடம்;

"சுடுவாயா?"

"யெஸ்! இது மிரட்டலல்ல."

"முடியுமா உனக்கு?"

"ஏன் முடியாது? குற்றவாளிகள் தப்பிச் செல்வதை தடுக்க எனக்கு அதிகாரம் தரப்பட்டிருக்கிறது வினோ."

"யார் தந்தது?"

வினோ கேட்டான்.

"நான்தான் கொடுத்தேன்."

என்று குரல் வந்தது. அது மூன்றாவது

> "பெண்: நதி எங்கே போகிறது?
> ஆண்: கடலைத் தேடி!
> பெண்: நாள் எங்கே போகிறது?
> ஆண்: இரவைத் தேடி!
> பெண்: நிலவெங்கே போகிறது?
> ஆண்: மலரைத் தேடி!
> பெண்: நினைவெங்கே போகிறது?
> ஆண்: உறவைத் தேடி!"
>
> -கவியரசு கண்ணதாசன்-

குரல்.

'திடுக்' பட்டு வினோ திரும்ப,

வாசல் கதவருகே நின்று அவர் அமைதியாக புன்னகைத்தபோதும், அதற்குள் எச்சரிக்கையும் கலந்தேயிருந்தது.

அதிர்ச்சியில், எதிர்பாராத சந்திப்பில் எல்லோரும் கேட்கும் வழக்கமான அதே

**எழுதுவது ரசிகன்**

கேள்வியை வினோவும் அவரைப் பார்த்துக் கேட்டான்.

"நீங்களா?"

□□

காரியவாசம் துள்ளி எழுந்த வேகத்தைக் கண்டு நிர்மலா மட்டும்தான் திகைத்தாள்.

அவள் திகைக்கவில்லை. தன் கையில் இருந்த, கைக்கடக்கமான சிறிய 2.2 றிவோல்வரின் விசையை பதட்டமில்லாமல் இதமாக அழுத்தினாள்.

சொல்லிவைத்தது போல ரவை சீறிச் சென்று அவன் மார்பின் மையத்தில் துவாரம் உருவாக்கி உள்ளே போனது.

"ஆ...." வாய் பிளந்தபடி இரத்தம் சிவப்பு நிறம் என்று தனது பங்குக்கும் நிரூபித்தபடி,

காரியவாசம் மரணலோகவாசியாகும் பயணத்தை ஆரம்பித்தான் என்றெல்லாம் விவரிக்காமல் சுருக்கமாகச் சொல்வதானால்,

செத்துப் போனான்!

கண்முன்னால் மீண்டும் ஒரு கொலை.

நிர்மலா செய்வதறியாது திகைத்துப் போனாள்.

தரையில் போடப்பட்ட மீன்போல் அச்சத்தில் விழிகள் துடிக்க, அவளைப் பார்த்தாள் நிர்மலா.

அவளோ தரையில் விழுந்து கிடந்த காரியவாசத்தின் அருகில் போய் குனிந்தாள்.

என்ன செய்யப்போகிறாள் என்று நிர்மலா நெஞ்சுக்குள் 'படக் படக்' ஒலி கேட்டபடி இருக்க, அவளையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவள் இப்போது காரியவாசத்தின் இரு கால்களிலும் பிடித்து தரதரவென்று இழுத்துக்கொண்டு வலது புறத்தில் இருந்த அறைநோக்கிச் சென்றாள்.

காரியவாசத்தின் மார்பில் இருந்து கொட்டிய இரத்தம் தரையை ஈரப்படுத்த, இரத்தச் சுவையறிய ஈக்கள் வந்து தரையில் இறங்கி மொய்த்தன.

அவள் காரியவாசத்தின் உடலை அந்த அறைக்குள் இழுத்துச் சென்று போட்டுவிட்டு கதவை மூடிவிட்டு வந்தாள்.

சோபாவில் கிடந்த துவாயை எடுத்துக் கொண்டு பாத்ரூமுக்குள் சென்றாள்.

திரும்பி வரும்போது துவாய் தண்ணீரில் குளித்திருந்தது.

தரையில் அப்பியிருந்த இரத்தக்



கறைகளை துடைக்கத் தொடங்கினாள்.

நிர்மலாவுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஏன் உடலை அறைக்குள் மறைக்க வேண்டும்?

ஏன் இரத்தக் கறைகளை துடைத்து சுத்தம் பண்ணவேண்டும்?

அவள் தரையை சுத்தமாக துடைத்து முடித்துவிட்டு, பாத்ரூமுக்குள் சென்று துவாயைப் போட்டுவிட்டு, கைகளை கழுவிக்கொண்டுவந்து,

ஒரு கொலை செய்துவிட்ட பதட்டமே இல்லாமல்,

சோபாவில் அமர்ந்துகொண்டு நிர்மலாவைப் பார்த்து சிரித்தாள்.

பதிலுக்கு சிரிக்க முடியாமல் நிர்மலா முழித்தாள்.

"அட...கொலை செய்தது நான். நீ ஏன் முழிக்கிறாய்? நீதான் கொலை செய்தது. எனக்கு ஒன்றுமே தெரியாது என்று சொன்னால் பொலிஸ் சந்தேகமே இல்லாமல் நம்புமா, நம்பாதா? நம்பும்!"

அவளே கேள்வியும் கேட்டு அவளே பதிலும் சொல்லிவிட்டு நிர்மலாவைப் பார்த்து வாய்விட்டுச் சிரித்துவிட்டு;

"பயப்படாதே நிம்மி. பொலிஸ் இப்போது வராது. ஆனால் வரும். பொலிஸ் அல்ல. பொறிக்குள் சிக்கப்போகும் நரி யென்! இரை ஒன்றுக்காக காத்திருக்கிறேன். அதற்காகத்தான் இந்த முன்னேற்பாடுகள்!"

நிர்மலாவுக்கு புரிவதுபோல் இருந்தது.

இன்னொரு கொலைக்கு வலைவிரித்து அவள் காத்திருக்கிறாள்.

வருபவன் உஷாராகிவிடக்கூடாது என்பதற்காகத்தான் கொலை நடந்த தடயமே இல்லாமல்...

கதவு தட்டப்பட்டது. அவள் எழுந்தாள். கையை மேலே உயர்த்தி சோம்பல் முறித்தபோது அவள் இளமையின் திரட்சி நிர்மலாவை பொறாமைப்பட வைத்தது.

"நீ அந்த அறைக்குள் போய் மறைந்து கொள் நிம்மி. இங்கே எது நடந்தாலும் நான் அழைத்தால் தவிர தலைகாட்டாதே."

என்றாள். நிர்மலா அவள் காட்டிய அறைக்குள் சென்று கதவு மூடும்வரை பார்த்திருந்துவிட்டு, வாசல் கதவை அவள் நிதானமாய் திறந்தாள்.

உள்ளே போய் கதவை சாத்திய நிர்மலாவுக்கு வெளியே என்ன நடக்கிறது என்று அறிய வேண்டும்போல் இருந்தது.

குனிந்து சாவித் துவாரத்தின் வழியே பார்த்தாள்.

இப்போது அவள் கதவை மூடி உட்புறமாய் தாழிட்டுக்கொண்டிருக்க, வந்தவனுக்கு பொறுமையில்லாமல் பின்புறமாய் அவளை அணைத்துக்கொண்டிருந்தான்.

அவன் முதுகு மட்டுமே நிர்மலாவுக்குத் தெரிந்தது.

அவன் யார் என்று முகம் பார்த்து அறியும் ஆவல் அதிகமானது.

அவள் அவன் அணைப்பில் இருந்து விடுபட்டு, திரும்பி அவனைப் பார்த்து,

"அவ்வளவு பசியா? எத்தனை நாள் விரதம்?"

என்று கேட்டாள்.

"ஒரு வாரமும் இரண்டு நாளும். குண்டோதரப் பசி!"

என்று கைநீட்டினான்.

ஒரு நிமிசம் அனுமதித்துவிட்டு, கையை தட்டிவிட்டாள்.

"தினமும் உனக்கு வேண்டுமே. இல்லாவிட்டால் தாங்கமாட்டாயே நீ. தெரியும் எனக்கு."

என்றாள். என்றவளை அவன் இழுத்து கன்னத்தில் உதடு ஒற்ற,

"குத்துகிறது."

என்று தோளில் கைவைத்து தள்ளினாள்.

"இப்படி மீசையை வளர்க்காதே. வளர்த்தால் கொஞ்சாதே. குத்தும். வா இருந்து பேசலாம்."

"பேசும் நேரமா இது?"

"ஏன் பேசமுடியாத வேகமா உனக்கு?"

அவனை விலக்கிவிட்டு அவள் சோபா நோக்கி வர,

அவன் இப்போது திரும்பினான். சாவித் துவாரம் வழியாக அவன் முகத்தைக் கண்ட நிர்மலா உச்சபட்சமான 'திடுக்' நெஞ்சில் வாங்கினாள்.

அவள் இப்போது சோபாவில் அமர்ந்து கால்மேல் கால் போட்டுக்கொண்டு அவனை விழிகளில் கிறக்கத்தை கொண்டுவந்து நோக்கினாள்.

கால் மேல் கால் போட்டிருந்தமையால் தெரிந்த அவள் முழங்கால்களுக்கு மேற்பட்ட கால் திரட்சி அவனை அவஸ்தை செய்தது.

அவளையே பார்த்தபடி நெருங்கி வந்தான்.

அவள் நிர்மலா மறைந்திருந்த அறையின் கதவில் விழிகளை பதித்து, பின்னர் சாவித்துவாரத்தை பார்த்து கண் சிமிட்டினாள்.

தான் பார்த்துக்கொண்டிருப்பதை அவள் தெரிந்தே இருக்கிறாள் என்று புரிந்து நிர்மலா ஆச்சரியப்பட்டாள்.

அவள் நிமிர்ந்து அவனை பார்த்து,

"கொண்டு வந்திருக்கிறாயா?"

என்று கேட்டாள்.

"எதை?"

என்று அவன் பதிலுக்கு கேட்க; அவள் உடனே சிரித்தாள்.

(தொடர்ந்து வரும்)

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: எம்.பிரபாகர்
வயது: 21
முகவரி: 5, ஸ்ரீ போதிராஜ இடம், கொழும்பு-12.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், கிரிக்கெட் விளையாடுதல், ஓவியம் வரைதல்.



பெயர்: எம்.றியாஸ்
வயது: 20
முகவரி: 87, பிரதான வீதி, நிலாவெளி-01.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை, உதைபந்து விளையாடுதல்.



பெயர்: எட்வேட் எமலின்
வயது: 16
முகவரி: 8ம் ஒழுங்கை, கல்லடி, மட்டக்களப்பு.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.



பெயர்: றிஸ்விகா இஸ்மாயில்
வயது: 17
முகவரி: 1151/10, முள்ளிப்பொத்தானை, கந்தளாய்.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, கதைப்புத்தகம்.



பெயர்: வி.குமார்
வயது: 25
முகவரி: MINISTRY OF DEFENCE AVIATION, P.O.BOX-58952 RIYADH 11515, K.S.A.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், முத்திரை சேகரித்தல்.



பெயர்: எம்.நஸீர்
வயது: 22
முகவரி: P.O.BOX-2076 CODE 13021 SAFAT-KUWAIT.
பொ.போக்கு: பத்திரிகை, புத்தகம் படித்தல்.

பெயர்: எஸ். ஸ்ரீபாலகிருஷ்ணன்
வயது: 23
முகவரி: 437, பேராதெனிய வீதி, கண்டி.
பொ.போ: பேனாநட்பு, நாவல்கள், பாடல்கள் கேட்டல்.

பெயர்: எம்.பைசால்
வயது: 17
முகவரி: 132/1, நிககொல்ல, யட்டவத்தை, மாத்தளை.
பொ.போக்கு: வழமையான பொழுதுபோக்குகள்.

பெயர்: ரி.ரவி
வயது: 23
முகவரி: P.O.BOX NO.30938, DOHA, QATAR, A.G.
பொ.போ: பத்திரிகை, புத்தகம், தொலைக்காட்சி.

பெயர்: எம். பாயிஸ்
வயது: 19
முகவரி: இல.15, தனாகம, மாவனல்லை.
பொ.போ: வழமையான பொழுதுபோக்குகள்.

பெயர்: சு.மனோகரன்
வயது: 20
முகவரி: 106, பாங்ஷால் வீதி, கொழும்பு-11.
பொ.போ: இயற்கைக் காட்சிகளை ரசித்தல், பொது அறிவு விடயங்களைப் படித்தல்.

பெயர்: எம்.ஹம்சீன்
வயது: 23
முகவரி: 299, பரஹகவெல, உக்குவெல.
பொழுதுபோக்கு: பத்திரிகை, புத்தகம், வானொலி.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## சிறுகதை

# "என் வீட்டுத் தோட்டத்து பூவெல்லாம்...."

**ஷர்மிளா இஸ்மாயில்-கண்டி**



கொத்துக் கொத்தாய்ப் பூக்கள் நெருக்கமாய் பூத்திருந்தன. வெளிர் சிவப்பு, சிவப்பு, வெள்ளைச் சாயலான சிவப்பு. கண்ணைக் கவர்ந்த அழகு. நாட்டி வைத்து சரியாக ஒரு மாதம். சீக்கிரமாய்த் தளிர்த்து, செழித்து பூத்த அழகு. மெதுவாய் வருடிக் கொடுத்தேன். எங்கே என் விரல் பட்டு உதிருமோ எனப் பயம் வேறு. என்ன செடி? மலரின் பெயர்? எதுவுமே தெரியவில்லை. ஆண்ட்டி நுவரெலியா போன போது கொண்டு வந்த செடி. பாதி பாதியாய் நானும் ஆண்ட்டியும் பாகப் பிரிவினை செய்து கொண்டோம். அதென்னவோ தெரியவில்லை. நான் நாட்டிய செடி மட்டும் இப்படி பூத்து சிரித்திருக்க- பாவம் ஆண்ட்டியின் செடியின் கூடவே தெரியவில்லை.

'சுறுக்'-ஆசையாய் வைத்திருந்த சிவப்பு ரோஜா விரலைக் கிழித்தது. பூவைத் தொட்ட கோபம் போல. விரலை வாய்விட்டு எச்சில் மருந்திட்டு நீர் வார்க்கும் வேலையை இடைநிறுத்தி வீட்டுக்குள் சென்றபோது வாசலில் நண்பியின் குரல். "அதிமேதகு. மேன்மை தங்கிய திருநிறைச் செல்வி சஹானா அவர்கள் வருகை தந்துள்ளார்கள். வரவேற்பார் யாருமில்லையோ?"

வாயினுள் வைத்த விரலை எடுக்காமல் "நல்வரவாக' ஆசிர்வதித்தேன். "ச்சீ... என்ன இது? இத்தனை வயதாகியும் விரல் சூப்புகிறாயே? வெட்கம். வெவ் வெட்றா..."

சிரித்தாள் நண்பி. நான் வழிந்தேன் அசடாய்!

அரைமணிக்குள் ஆயிரம் கதைபேசி முடித்து தோட்டத்தை பார்வையிட சஹானா வெளியே வந்தபோது அந்த அநியாயத்தை என்னவென்று சொல்வது? என் ஆசைக்குரிய பெயர் தெரியாத அந்த அழகுச் செடி அவள் கண்களில் பட்டுவிட்ட சோகம். ஓடிப் போனாள். 'தொடாதே' என்று சொல்ல உதடு திறக்க முன் தொட்டுவிட்டாள். "ஹை...ரொம்ப அழகா இருக்கே.. என்ன செடியடி?" இலைகளைத் தடவினாள். என் மனசுக்குள் நெருஞ்சி முள் எப்படியும் கேட்பாள். அவளுக்கும் என்னைப் போலவே பூஞ்செடி பைத்தியம். இந்த அபூர்வ செடியைக் கொடுக்க எனக்கென்னவோ மனம் வரவில்லை. "கிளை நாட்டினா முளைக்குமா?" நான் எதிர்பார்த்த கேள்வி. ஆம் என்பதுதான் சரியான விடை. ஆண்ட்டியும் எனக்கு சின்ன தண்டைத்தானே கொடுத்தார்.

ஆனால் உண்மை மறைத்து பொய் சொன்னேன். பொய்!

"இல்லையடி.. செடியைத்தான் நாட்டணும். கிளையெல்லாம் வெச்சா வளராது." அவசரமாய்ப் பதில் சொல்லி பின் மூச்சு விட்டேன். நண்பிக்கு ஏமாற்றம். முகத்தை சுளித்தாள். ஆறுதல் சொன்னேன்." இன்னும் கொஞ்சம் காலம் போனா சின்னச்சின்ன செடி வரும். அப்போ அதில ஒண்ணு பிடுங்கி தர்றேனே..."

"உன்னப் பத்தி எனக்குத் தெரியாதா? நிச்சயம் தந்திட்டுதான் வேற வேலை பார்க்கப் போற!" தலையைத் திருப்பிக்கொண்டு சொன்னாள்.

நான் கதையை முடித்தேன். தொடரவில்லை. நண்பி போய் விட்டாள். மனசுக்குள் ஆயிரம் நெருஞ்சிப் பூக்கள். முட்கள்... மனசாட்சி பெரிதாக 'லவுட் ஸ்பீக்கர்' வைத்து கத்தியது. "சீ...ஒரு சின்ன பூச்செடிக்காய் ஏன் இத்தனை முரண்டு உனக்கு. பாவம். சஹானாவுக்கு ஒரு தண்டை உடைத்துக் கொடுத்திருந்தால் என்ன நஷ்டம் உனக்கு? உனக்கெல்லாம் ஒரு Friend Ship...... இன்னிக்கு மலர்ந்திருக்கும் பூக்கள் மாலைக்குள் வாடிப் போகலாம். ஆனால் நட்பு?" மனசாட்சியை அலட்சியப் படுத்திவிட்டேன். அது வாயை மூடிக் கொண்டு மௌனமாய் என்னை முறைத்தது.

மீண்டும் ஒரு மாதம் மலர்ந்து மறைந்தது. அன்றைய ஞாயிறு காலை. வழமைபோல் தோட்டத்துக்குள் காலடி வைத்த எனக்குள் அதிர்ச்சி, சோகம், கவலை அதை என்னவென்று சொல்வதம்மா? ஏன், பெயர் தெரியாத அந்த அபூர்வ மலர்ச்செடி வாடிப் போயிருந்தது. அன்றைய ஞாயிறு கசந்தது. பொன்மாலைப் பொழுதின் 'மலரும்... மலரும்... மலர்கள் மலரும்..." பாடல் என் சோகத்தைக் கூட்டியது. அடுத்தடுத்த நாட்களில் இலைகள் கருக, தண்டுகள் சுருங்க இறுதியில் என் செடியின் உயிர் உதிர்ந்து செத்துப் போனது.

என் மனசும் வாடிப்போனது.

தேற்றிக்கொண்ட கணங்களில் சஹானாவின் நினைவு வந்தது. அவளுக்கு சொன்ன பொய்யின் பலனோ என்னவோ? அவளைப் போய் பார்க்க வேண்டும் போல் இருந்தது.

"வரவேண்டும் மகாராணி" எப்போதும் போல் சிரித்தபடி வரவேற்றாள். எனக்குத் தான் புன்னகைக்கவே கஷ்டம் போலிருந்தது.

கிரிக்கெட், அரசியல், ஊர்வம்பு எல்லாம் பேசி முடித்தாயிற்று. அவளது அறை மேசையின் மீது ஒரு 'தினமுரசு'. லேடிஸ் ஸ்பெசல் பக்கம் விரித்து, 'ஸ்டொக்கி நெற்' பூ வேலை செய்து பார்த்த முயற்சி. தங்க நிறக் கம்பிகளும், பேப்பர் றிபனும் பரவிக் கிடந்தன. என் பார்வையை கவனித்தவள் சொன்னாள். "பூ செய்கிறேன்டி, அழகா வந்தா உனக்கும் தர்றதா இருக்கேன்." களங்கமில்லா வரிகள். தொடர்ந்தாள் நண்பி. "இன்னும் ஒண்ணு உனக்கு காட்டணும். வெளியே வா." அழைத்துப் போனாள். என் கண்களுக்குள் ஆச்சரியப் பூக்கள் விரிந்தன. பேச்சின்றி நின்றிருந்தேன்.

அங்கே... கொத்துக் கொத்தாக... இளஞ்சிவப்பு, சிவப்பு, வெள்ளைச் சாயலான சிவப்பாக...பூக்கள்... அந்த அழகிய, அபூர்வ பூக்கள், நாலைந்து செடிகள், செழுமையாகக் காட்சியளித்தன. நண்பி புன்னகையோடு தொடர்ந்தாள்.

"பக்கத்து வீட்டு ஆண்ட்டியெல்லாம் நுவரெலியா போனப்போ கொண்டு வந்து கொடுத்தாங்கடி.. நீ சொன்ன மாதிரியில்ல. சின்ன தண்டு ஒண்ணு நாட்டாப் போதும். நல்லா வளருது. உன் செடி எப்படியிருக்கு? தண்டெல்லாம் ஒடிச்சு நட்டு, நல்லா வரும்.." அவள் தொடர, நான் பேசாது நின்றேன். என்ன சொல்வது?

"என்ன கதை சொல்லச் சொன்னா எந்தக் கதை சொல்லுறது?

சொந்தக் கதை சோகக் கதை...தொண்டைக்குள்ளே நிற்கிறது..."

பாடல் வரிகள் சரியோ தெரியவில்லை. 'ஸ்லோ மோசனில்' நான் மனசுக்குள் பாடிக்கொண்டிருந்தேன். ●

# கனவுச் சுமைகள்!

**-எம். சுரேஷ்-**

"புதிய அரசாங்கம் விரைவில் இனப்பிரச்சனையைத் தீர்த்து வைக்கும்" தலையங்கத்தைப் பார்த்ததும் மேனியெல்லாம் புல்லரித்தது.......

கந்தப்பாவுக்கு ஏகப்பட்ட சந்தோஷம். காரணமின்றி அடிக்கடி வெளிக்கதவுவரை நடந்து செல்வதும் திரும்பி வருவதுமாக இருந்தார்.

அந்த பாழடைந்த அறை, விமானக் குண்டுவீச்சால் இடிந்துபோன வீட்டின் பின்புறம். காதலித்துத் திருமணம் முடித்து, வாழ்ந்து, வளர்ந்து, கிழவியாகி, இறந்து போன மனைவி பங்கஜத்தின் போட்டோ, தேசத்தைக் காக்கப் போய் மிதிவெடிக்குப் பலியான இளைய மகனின் பழைய பாதணி... எல்லாமே அவருக்கு ஒரு புதுவிதமான நிம்மதியைக் கொடுத்தது. ஒவ்வொன்றாகத் தொட்டுப்பார்த்தார். இரசித்தார். கிட்டத்தட்ட இளைய மகனும், மனைவியும் உயிருடன் திரும்பிவந்ததைப் போன்ற ஒரு மகிழ்ச்சி.

கிழவருக்கு ஏனோ இன்று வெறுமையாய் இருக்க முடியவில்லை. நேற்று முன்தினம் தானே சமைத்து, இன்றுவரை உண்ணாமல் வைத்திருந்த உணவை நாய்க்கு வைக்கப்போய், பின்பு இதை உண்டால் நாய்க்கு நோய் வந்து விடுமோ என்று யோசித்து, வீட்டுக் கோடியில் உள்ள வாழைமரத்தடியில் அதைக் கொட்டிவிட்டு, பாத்திரங்களைக் கழுவி, வருடக் கணக்காகக் கூட்டாமல் கிடந்த முற்றத்தைக் கூட்டித் தண்ணீர் தெளித்து, மீண்டும் வீட்டு வாசலுக்கு வந்து முற்றத்தைப் பார்த்தார். கூட்டிப் பெருக்கிய முற்றம் பளிச்சிட்டது. அவர் மனதில் என்றுமில்லாதவாறு ஒரு புத்துணர்ச்சி...

திருமணம் முடித்த புதிதில் இதே போன்ற ஒரு காலைப் பொழுதில் மனைவி பங்கஜம் குளித்து முழுகி பக்திப் பரவசத்தோடு கோலம் போடுகையில், ஓசை படாமல் வந்து அவளை இறுக அணைத்து, இதழ்களில் அழுத்தமாய் முத்தம் பதித்ததை பெருமையோடு நினைத்துப் பார்த்தார்.

"ஆ...என்ன அருமையான காலம்" வாய்விட்டுச் சொல்லிக்கொண்டார்.

"என்ன கந்தப்பு தனிய நிண்டு பேசுறே? மகனிட்ட இருந்து கடுதாசி, கிடுதாசி வந்ததே?" பக்கத்துக் காணிக்காரன் முருகேசன் கேட்டதற்கு 'ஆம்' என்று மட்டும் பதில் சொன்னார். (கடிதத்தைப் பற்றிக் கவலைப்படும் நிலையில் அவர் இல்லை)



"சிலவேளை பிள்ளைகள் அடுத்த அடுத்த மாசத்தோட ஊருக்கே வந்தாலும் வருங்கள்" நினைக்கும்போதே மேலெல்லாம் புல்லரித்தது.

இறந்து போன மனைவியையும், இளைய மகனையும் தவிர இன்னும் இரண்டு மகன்மார், இரண்டு மகள்மார், எல்லோரும் சுவிசுக்கும், கனடாவுக்கும் அப்போதே குடிபெயர்ந்து சென்று விட்டார்கள். இப்போது அவர்கள் (எல்லோரும்) திருமணம் முடித்துவிட்டார்களாம்." குழந்தைகளும் இருக்கின்றனவாம் (கடிதத்தில் வாசித்திருக்கிறார்) சில நேரங்களில் தன் பேரக் குழந்தைகளைப் பார்க்கக் கிடைக்கவில்லையே என்ற ஏக்கம் வரும் போதெல்லாம்..." என்ர பிள்ளைகளின்ர கலியாணத்தையே பார்க்கக் கிடைக்கேல்லை, பிறகென்னெண்டு பேரப் பிள்ளைகளைப் பார்க்கிறது?" நினைத்துக்கொள்வார்.

(அவரால் இலகுவாகச் செய்யக்கூடியது அது ஒன்றுதான்)

இந்த நிலையில் ஒட்டுமொத்தமாக எல்லாக் குழந்தைகளும், பேரப் பிள்ளைகளும் ஊருக்கே வந்துவிடும் வாய்ப்பு இருக்கிறது என்பதை நினைக்க கந்தப்பு என்ற கந்தப்பாவுக்கு ஆனந்தத்தை அடக்க முடியவில்லை.

"பிள்ளைகள் வரக்குமுந்தி வீட்டைப் பழைய நிலைக்குக் கொண்டு வந்திடோணும்"..நடுங்கும் கைகளால் பழைய தும்புக் கட்டையை எடுத்து வீடு பூராவும் நிறைந்திருந்த சிலந்தி வலைகளைச் சுத்தப்படுத்தினார். கை வலித்தது. நிறுத்தினார். மூச்சு வாங்கினார். பலாலிப் பக்கமிருந்து தாறுமாறாய் 'ஷெல்' அடிக்கும் சத்தம் கேட்டது. "இன்னும் கொஞ்ச நாளைக்குத்தானே?" சிரித்தார்.

மெதுவாகப் போய் அந்தப் பழைய (ஒரு கை உடைந்த) சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டு, பத்திரமாகச் சுருட்டி வைத்திருந்த நேற்றைய தினசரியை எடுத்து மீண்டும் ஊன்றிப் படித்தார். எழுத்துக்கள் மங்கலாகத் தெரிந்தன. "புதிய அரசாங்கம் விரைவில் இனப் பிரச்சனையைத் தீர்த்து வைக்கும்." தலையங்கத்தைப் பார்த்துச் சந்தோசித்தார். மேனியெல்லாம் புல்லரித்தது...ஒரு அதிக பட்ச திருப்தி. மீண்டும் ஒருமுறை மனைவியை நினைத்தார். பேரப் பிள்ளைகளை நினைத்தார்... கண்களுக்குள் கனவுகள் சுமையாய்க் கனத்தன.... விழிகளை மூடினார். திறக்கவே இல்லையென்று ஊரவர்கள் பேசிக்கொண்டனர். ●

# அவனும் ஒரு சாரதி

**அக்குறணை-ஹரீரா அனஸ்**

அழகான மலைப்பாங்கான பிரதேசம். கண்ணுக்கெட்டிய தூரம் வரைக்கும் பசுமை போர்த்த மலைத்தொடர்கள், சிறிய குன்றுகள், பனியில் குளித்து, விறைத்து நிற்கும் பருவப் பெண்ணின் மதர்ப்புப் போல கொள்ளை அழகு கொப்பளிக்கும் தேயிலைச் செடிகள், குவிந்து குவிந்து கொத்துக் கொத்தாய் கொழுந்துகளைச் சுமந்து கொண்டு பச்சைப் பசேல் என்ற கண் கொள்ளாக் காட்சி.

இடையில் செம்பட்டு விரித்துப் போட்டதான செம்மண் பாதைகள் வளைந்து நெளிந்து மலையின் உச்சிக்கும் தேயிலை மடுவத்துக்கும், ஸ்டோருக்குமாக தமது பணியைச் செய்யவென நீண்டு பரந்து போயிருக்கும் காட்சி.

அதோ தேவதைகள் வருகிறார்கள். பசுங் கொழுந்துகளை தமது மென் விரல்களால் கொய்து குவித்த கூடைகளை முதுகில் சுமக்க வைத்த குமரிகள், வளைந்து நெளிந்து ஆடி அசைந்து கலகலப்பாய் 'கொல்'லெனச் சிரித்து மூக்குத்தி அணிந்த நந்தவனங்கள்.

மலையகம் தான் எத்தனை அழகு! தன் மேனியின் நடுவே எத்தனை சௌந்தரியங்களை அள்ளிப் போட்டுக்கொண்டு குலுங்கிக் குலுங்கிச் சிரிக்கிறது.

சைமன் இருபத்தைந்து வருடமாய் இந்தப் பகுதியில்தான் சாரதியாகக் கடமையாற்றுகிறான். அவன் ஒரு சிறந்த சாரதி. அவனின் சாரதி அனுமதிப்பத்திரத்தில் இன்றுவரை ஒரு தப்புக்கான கீறல் கிறுக்கல் அடையாளமே கிடையாது. அவன் ஜனாதிபதியின் கையால் சிறந்த சாரதிக்கான பரிசும் பெற்றிருக்கிறான்.

□□□

பஸ் உறுமிக்கொண்டு தனது பயணத்தைத் தொடர்ந்தது.

எத்தனை பஸ் தரிப்பிடங்கள். எத்தனை மனிதர்கள். தினம் தினம் பயணம் செய்யும் ஆசிரியர், ஆசிரியைகள், மாணவர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் என்று எத்தனையோ பேர் அந்த ஒற்றைக் கதவு பஸ்ஸை நம்பியிருப்பவர்கள்.

அந்த பஸ் தரிப்பு நிலையத்தில் ஒரு சின்னஞ் சிறுவன் கைகாட்டி பஸ்ஸை நிறுத்தினான். சைமனுக்கு அவன் ஒரு கேலிப் பையனாகத் தென்பட்டான். நிறுத்துவது போல பாசாங்கு செய்துவிட்டு விருட்டென்று ஆர்முடுகலாக்கி பஸ்ஸைச் செலுத்திக் கொண்டு போனான். பக்கக் கண்ணாடியால் பார்க்கும் போது அந்தச் சிறுவன் தெரிந்தான்.

பின்னொருமுறை அதே பஸ் தரிப்பு நிலையத்தில் அந்தச் சிறுவன் சைமனின் பஸ்ஸிற்கு கைகாட்டினான். சைமன் அலட்சியமாகப் போய்விட்டான்.

மற்றுமொருமுறையும் அப்படித்தான். இப்படியாக அந்த பஸ் தரிப்பு நிலையத்தில் ஒற்றையாக நின்று பஸ்ஸிற்கு அவன் கைகாட்டுவதும் சைமன் அந்தச் சிறுவனை அலட்சியம் செய்வதுமாக எத்தனையோ நாட்கள் கழிந்துவிட்டன.

என்ன அதிசயம் இன்றும் அப்படித்தான். சைமன் தனது பஸ்ஸை வழமைபோல் 'அங்கும்புர' வழியாகச் செலுத்திக் கொண்டிருந்தான். பிரயாணிகள் ஒவ்வொருவராக ஏறி பஸ் நிறைந்து காணப்பட்டது. இனி இடமில்லாமல் நெருங்கிய படி பிரயாணிகள் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தனர்.

வழமைபோல் அந்த் பஸ் தரிப்பு நிலையத்தில் அதே சிறுவன். இன்று சைமனுக்கு என்ன நினைப்பு வந்ததோ தெரியாது. அந்தச் சிறுவனுக்காக பஸ்ஸை மறித்து அவனை ஏற்றினான். சிறுவனும் ஜன நெரிசலூடாக கஷ்டத்துடன் ஏறி சாரதி ஆசனத்திலிருக்கும் சைமனண்டையில் வந்து "ட்றைவரய்யா அவர்களே! ஏன் என்னை இவ்வளவு காலமும் பஸ்ஸில் ஏற்றாமல் வந்துவிட்டு இன்று மட்டும் பஸ்ஸை நிறுத்தி ஏற்றினீர்களே?" என்று கேட்டான்.

அதற்கு சைமன்; "உன்னைப் பார்க்கும் போது பாவமாக இருந்தது அதனால்தான் இன்றைக்கு பஸ்ஸை மறித்து ஏற்றினேன்." என்று மட்டும் பதில் சொல்லிவிட்டு பஸ்ஸை ஓட்டினான்.

□□□

விரைவாய் காலங்கள் ஓடி மறைந்தன. அந்தச் சின்னவன் பெரியவன் ஆனான்.

சைமன் ஒரு பயணம் போவதற்காக தனது வீட்டிலிருந்து வெளியாகி பஸ்தரிப்பு நிலையம் வந்தான். பஸ் ஒன்றுவர அதனை மறித்து ஏறினான். பஸ் சிறிது தூரம் சென்றது.

அதனை ஓட்டிச்சென்ற சாரதி பின்னால் நின்ற சைமனை கைச் சைகையால் அழைத்தான்.

சைமன் அவனண்டை போனதும் அவன் சைமனிடம் கேட்டான்;

"உங்களுக்கு என்னைத் தெரியுதா?"

சைமனுக்குத் திட்டமில்லை. அவனை விளங்கவில்லை.

"இல்லையே!" என்றான்.

"முன்பெல்லாம் அங்கும்புர பாதையில் ஒரு குறிப்பிட்ட பஸ் தரிப்பில் நின்று உங்கள் பஸ்ஸை மறிக்க நீங்கள் பஸ்ஸை நிற்பாட்டாமல் விருட்டென்று ஓட்டிச் சென்று விடுவீர்களே! அதே சிறுவன்தான் நான்."

சைமனுக்கு தூக்கி வாரிப்போட்டது. முகமெல்லாம் அதிர்ச்சியால் இறுகிப் போனது. தன்னைச் சுதாகரித்துக்கொண்டு அவனிடம் பேசினான். அவன் தனக்கு புதியதாகத்தான் வேலை கிடைத்தது போன்ற விபரங்களை எல்லாம் அன்னியோன்யமாக சைமனுக்குச் சொல்லிக்கொண்டிருந்தான்.

□□□

அங்கும்புர பாதையால் வளைந்து வளைந்து போகும்தார் றோட்டில் சைமன் பஸ்ஸைச் செலுத்திக்கொண்டிருந்தான். தூரத்தில் ஒரு பஸ் தரிப்பு நிலையம் அதில் ஒரு சிறுவன்.

கையைக் காட்டி பஸ்ஸை நிறுத்தினான் அவன்.


மிகவும் அக்கறையோடு அவதானமாய் பஸ்ஸை நிற்பாட்டி அந்தச் சிறுவனை தனது பஸ்ஸில் ஏறச் செய்தான் சைமன்.

"ஒரு காலத்தில் இவனும் ஒரு சாரதியாகி...நான் அவன் பஸ்ஸில்..."

அவன் மனம் சுயமாக எண்ணிக் கொண்டது.

சைமனின் எண்ணச் சுற்று பழைய நினைவுகளை மீண்டும் ஒருமுறை அசை போட்டது.

மலைப்பாதையைச் சுற்றிச்சுற்றி பஸ் வேகமாக முன்னேறிக்கொண்டிருந்தது. ●




www.padippakam.com

## —சிறுகதை—

# புரியாத உறவுகள்

—மு.தாரகன்



மின்னும் நட்சத்திரப் பெண்களுடன் வானில் சந்திரன் கண்ணாமூச்சியாடிக் கொண்டிருந்தான். பாறைகளில் கடலலைகள் நர்த்தனம் ஆடிக் கொண்டிருந்தன. வழமையாக செல்லும் புகையிரதத்தின் சத்தம் இரவினைக் கிழித்துக்கொண்டு சென்றது. நகரத்து தெருவிளக்குகள் இரவின் இருளை முற்றாக அகற்ற முடியாது அவமானத்துடன் தலை கவிழ்ந்து ஒளி உமிழ்ந்து கொண்டிருந்தன. நகரத்து வீதிகள் மெல்ல மெல்ல நித்திரைக்கு தயாராகிக் கொண்டிருந்தன.

எனது கால்கள் நடைபாதையில் நடந்து கொண்டிருந்தாலும் மனமோ ஒரு நிலையில்லாது எங்கோ வட்டமடித்துக்கொண்டது. இந்த இயந்திரமான நகரவாழ்க்கை இன்று நேற்றல்ல, கடந்த ஆறு வருடங்களாக பழகிப் புளித்ததொன்று. முதன் முதலாக சொந்த ஊரிலிருந்து தனியார் கம்பனியொன்றில் வேலை நியமனம் பெற்று இங்கு வந்தபோது பாதையோரத்து சொறிநாய் கூட பிரமாண்டமாகத்தான் தெரிந்தது. ஆனால் விரைவிலேயே நகரத்து வாழ்க்கையின் அவலம் அம்பலமாயிற்று. காலையில் அவசர அவசரமாக எழுந்து ஆயத்தமாகி ஊர்ந்து செல்லும் பஸ்ஸில் வியர்வையின் மழையில் குளித்து, மணத்தில் சங்கமித்து, நேரம் பிந்தியமைக்காக மேலதிகாரியிடம் பல்லுக்காட்டி (பலதடவை அவரே பிந்தி வருவது வேறு விடயம்), ஏதோ மனம் ஒன்றாமல் வேலையை முடித்து மாலையில் மீண்டும் வாகன ஊர்வலம். பெயருக்கு ஏதோ நாலு சுவரால் கட்டிய பொந்தை அடைந்து, தண்ணீருக்காக குழாயடியில் தவமிருந்து ஏனோ தானோ என்று குளியலை முடித்து மெல்லிய புத்துணர்வுடன் காலாற இரவு சாப்பாட்டுக்கு கடைநோக்கி படையெடுப்பது எல்லாம் ஒரு வாழ்க்கைச் சக்கரமாகிவிட்டது.

வானத்து நட்சத்திரங்களை எண்ணுவதும், பொங்கிவரும் கடலலையில் கால் நனைப்பதும்கூட மகிழ்ச்சியை தந்தது. இரண்டு கிழமை சுகமான அனுபவங்களின் பின் மீண்டும் இயந்திர வாழ்க்கை. நீண்ட நாட்களின் பின் கிராமத்துக்கு சென்றுவிட்டு இரண்டு நாட்களின் முன்தான் திரும்பியிருந்தேன்.

> உதடுகளின் உச்சரிப்பில் உறவுகளால்
> உருவாக்கப்படுவதில்லை-பாசம்
> இதயத்தின் அடித்தளத்திலிருந்து உணர்வுகளால்
> உருவாக்கப்படும் உலகின் உன்னத பொருள்.

கிராமத்து மண்வாசனையும், ஈரக்காற்றை சுமந்துவரும் தென்றலின் குளிர்ச்சியும், மனத்தை பஞ்சாக மாற்றும் அமைதியான சூழலும், கள்ளங்கபடமற்ற மனித உள்ளங்களும் என்றும் விலைமதிக்க முடியாதவை. அதற்கு மேலாக பாசங்களின் பரிமாற்றங்களும் தாய், தந்தை, சொந்தம் என்று வாழும் வாழ்க்கையும் உயர்வானது.

மனதில் இனம் புரியாத பாரம் அழுத்த நடக்கின்றேன். பாதையோரமே மாளிகையாக வாழ்க்கை நடாத்தும் இந்த மனிதர்களிடையே என் கண்கள் எதையோ ஆவலுடன் தேடுகின்றன. இன்றும் ஏமாற்றம்தான். மூன்று நாட்களாக இதே எதிர்பார்ப்பும், ஏமாற்றமும்தான்.

ஆறு மாதத்திற்கு முன் நடந்த சிறு சம்பவம் மனத்திரையில் ஓடுகிறது.

அன்றும் வழமைபோல் இந்த நடைபாதையில் நடந்து கொண்டிருந்தேன். திடீரென அ...அண்ணா என்றழைக்கும் குரல் கேட்டு திரும்புகிறேன்.

ஆறு வயது மதிக்கத்தக்க ஒருகுழந்தை. மா நிறம். மெலிந்த உடல், எண்ணெய் கண்டு நாளாகிவிட்ட பரட்டை தலை. ஏதோ காற்சட்டை, சேட் என்ற பெயரில் கிழிந்த உடை. ஆனாலும் அந்த கண்களின் குறுகுறுப்பும் கவர்ச்சியும் யாரையும் ஒருமுறை பார்க்கச் செய்யும். கையில் எனது பேர்சுடன் புன்னகைத்தது. 'இ... இந்தாங்க கீழ வீ...விழுந்திட்டுது' என்று திக்கித்திக்கி கூறியபடி பேர்சை நீட்டியது. நல்லவேளை தொலைந்திருந்தால்...பணம், சில முக்கிய ஆவணங்கள், இதற்கு மேலாக அடையாள அட்டை. இன்றைய கால கட்டத்தில் அடையாள அட்டை இல்லையென்றால், யோசிக்கவே பயம் பிடித்தது. பர்சை தந்துவிட்டு சிரித்தபடியே துள்ளி ஓடிற்று.

அன்று முழுவதும் அந்தக் குழந்தையின் கள்ளம் கபடமில்லாத மனமும் சிரிப்பும்தான் மனதில் நிழலாடியது. இந்த அறிமுகம் நாளடைவில் ஒவ்வொரு நாளும் நான் போகும்போது என்னைக் கண்டு சிரித்து மழலை மொழியில் கதைப்பதும், நான் பதில் சொல்லுவதுமாக இருவருக்குமிடையில் ஏதோ இனம் புரியாத பாசம்- பந்தம் உருவாயிற்று. இரவு வேளைகளில் எனக்காக அந்த நடையோரப் பாதையில் தூக்க விழிகளுடன் காத்திருப்பதுவும் என்னைக் கண்டதும் குதித்தோடி வந்து கண்கள் குறுகுறுக்க திக்கித்திக்கி கதைகள் சொல்லும். நான் ஏதாவது கொடுக்கும் போதெல்லாம் அன்பு பொங்க ஆசையுடன் அதை வாங்கிக்கொள்ளும். இதில் எனக்கும் ஒரு மன நிம்மதி. இந்த நகரத்து வாழ்க்கையில் ஏதோ ஒரு சிறிய மாற்றத்தை உணர்ந்தேன். முற்பிறப்பு தொடர்போ என்னவோ இப்பிறப்பில் என்னிடம் ஐந்து சதம் பத்து சதமாக சேர்த்து எனது பிறந்தநாளன்று உண்டியலில் போட்டு சாமியை வேண்டியது அதிகாலையில் கொட்டும் பனியில் விபூதியுடன் தெருவோரத்தில் எனக்காக காத்து நின்றது. இந்த உறவு சொந்தமா பந்தமா கடவுளைக் கேட்டேன். நானும் அது ஆசையுடன் கேட்ட விளையாட்டு காரொன்றை என் ஞாபகமாக வாங்கிக் கொடுத்தேன். ஆசையுடன் வாங்கி கையை முத்தமிட்டது. நடைபாதையில் சந்தோஷத்துடன் உருட்டி விளையாடியது.

இரண்டு கிழமை விடுமுறையில் நானும் ஊருக்கு புறப்பட்டேன். கண்ணீருடன் விடை தந்தது அந்த சிறிய உள்ளம்.

ஊருக்கு போனதும் இந்த உறவை வீட்டில் சொல்லியபோது அப்பா முறைத்தார். அம்மா திகைத்தாள். பாட்டி பிச்சைக்காரரோடு என்ன சகவாசம் என்று எச்சரித்தாள். நண்பர்கள் எக்காளமிட்டு சிரித்தனர். சில அன்பான பாசங்கள், உறவுகள் மற்றவர்களுக்கு புரிவதில்லை. புரியவைக்கவும் முடிவதில்லை. அனுபவம்தான் புரிய வைக்கும். நானும் மேலும் கல்லில் நாருரிக்க விரும்பவில்லை.

மகிழ்ச்சியான நினைவுகளுடன் இரண்டு நாட்களின் முன்தான் ஊரிலிருந்து திரும்பினேன். இந்த மூன்று நாட்களாக அந்தக் குழந்தையை காணாதது வேறு நெஞ்சை நெருட்டியது.

ஒரு கிழமையாகிவிட்டது. குழந்தை என் கண்ணுக்கு தென்படவேயில்லை. யாரிடம் போய்க் கேட்பேன்? பெயர், ஊர் எதுவுமே தெரியாது. அந்த நடைபாதையில் இருக்கும் எல்லோரையும் கேட்டுவிட்டேன். பயனில்லை.

அன்றிரவு மேசை விரிக்க பழைய பேப்பர் ஒன்றை எடுத்தபோதுதான் அந்த பயங்கரம் தெரிந்தது. நான் ஊரில் இருந்தபோது வெளிவந்த நாளேடு- மேலோட்டமாக பார்த்தேன்.

**'ரயில் மோதி ஆறு வயது குழந்தை பலி'** என்று சிறு தலையங்கம் என்னை உற்று படிக்கவைத்தது. அதே அங்க அடையாளங்கள். பக்கத்து தெருக் கோடியில் உள்ள பாதையில்தான் அந்த விபத்து நடந்தது. யாரும் உரிமை கோராத அனாதை பிணமாம். கையில் விளையாட்டு காரொன்றை அணைத்தபடி இருந்ததாம். சோகம் நெஞ்சை அடைக்க நிலைச்சுவரில் சாய்ந்தேன்.

நாட்கள் நகர்கின்றன. வழமைபோல் தண்டவாளத்தில் ரயில் ஓடும் சத்தம். ஆனால் கூடவே அண்ணா அண்ணா என்று அந்தக் குழந்தை அழைப்பது போன்ற மனப்பிரமை எனக்கு. அந்த நடைபாதையில் அச்சிறிய கால்களின் அடையாளம் கானல் நீராய் தெரிந்தது எனது சோகங்களை யாரிடமும் சொல்லி ஆற முடியாது. சொன்னால் சிரிப்பார்கள். ஆனால் அந்த முகம் இன்றும் மனதில் பசுமையாக இருக்கிறது. இறைவா அந்த சின்ன ஆத்மாவை சாந்தியடைய வை.

அந்த பசுமையான நினைவுகள் நெஞ்சில் வாழட்டும். சோகங்கள் அகலட்டும் வழமையான இரவின் இருட்டு சற்றே பயமுறுத்த நடை பாதையில் நடந்து கொண்டிருக்கிறேன்.

# விஜி!........என்னை விடு!.......

எம்.பி.எம்.ரைஷ்தீன்-கிண்ணியா



“என் கையை விடு, என்னால இதைத் தாங்க முடியாது” என உணர்ச்சி தழுதழுத்த குரலில் கூறினேன்.

“அப்படி என்றால் அந்த வில்லையில் ஒன்றை எனக்கும் தாருங்கள். நானும் விழுங்கி உங்களுடனேயே வந்து விடுகிறேன்.” இது அவளின் அழுகையோடு சேர்ந்த வார்த்தைகள்.

தொடர்ந்தால் சோகம் பூசிய சிவந்த முகத்தோடு, தூண்டிலில் பட்ட மீனாய் துடித்தவாறு.

“றமீஸ் அப்படி என்ன நடந்ததற்காக இந்த முடிவெடுத்தீர்கள்?”

“இன்னும் என்ன நடக்க வேணும்” இது எனது கோபம் கலந்த கர்ச்சிப்பு.

“சொல்லுங்களேன் என்னதான் நடந்தது?”... சோகம் நிறைந்த வார்த்தை வினாவோடு என் கரம் பற்றினாள் விஜி...

“விஜி...நம் காதலை உன்னுடைய உறவினரும் விரும்பவில்லை.... என்னுடைய குடும்பத்துக்கும் பிடிக்கவில்லை... ஏன்?... இப்பூவுலகில் வாழும் ஒன்றுக்குமே பிடிக்கவில்லை... அதனால்தான் நான் இந்த முடிவுக்கு வந்தேன்...... விஜி என் விழியிங்கு இருந்தென்ன! இறந்தென்ன?.... அதனால் தான் நான் இந்த முடிவுக்கு வந்தேன்..... விஜி என் விழியிங்கு இருந்தென்ன!... இறந்தென்ன?... அதனால்தான் என் விழியை மூடிவிட முடிவெடுத்தேன்” நான் முடிக்க முன் அவள் தொடர்ந்தால்,

“இங்கப்பாருங்க றமீஸ். எங்க வீட்டாருக்கு விருப்பமில்லன்னு யார் சொன்னது?”

“ம்...யார் சொன்னதா?” வாய்விட்டுச் சிரித்தேன். அவள் சிந்தித்தாள்!”

“உங்க அண்ணன் சபா, அவர்தான் உங்க அன்புக்கு உரித்தான பா... அண்ணன். எங்க வீட்டுக்கு சாய்ந்திரம் வந்து நான்தான் வீரன்னு வாய்க்கு வந்த மாதிரி பேசினான். என்ன செய்ய வீட்டுக்கு வந்துட்டானேன்னு முழுசா விட்டன். இல்லயென்னா கையைக் கால முறிச்சனுப்பியிருப்பன்.” கோபம் கொந்தளிக்க வார்த்தைகளை காற்றில் கரைத்தேன்.

“எங்க அ....ண்...ணனா? உங்க... வீ...ட்...டுக்கா இருக்காது.”

ஓ...ஒன்றும் தெரியாதவ போல ரொம்ப நடிக்கிறியே? அடிக் கிளியே!....

“இஞ்சப் பாருங்க றமீஸ் நான் சொல்றதைக் கேளுங்க...”

“விஜி. தலைக்குமேல வெள்ளம் போனா சாண் என்ன முழம் என்ன?”

“றமீஸ் குடிக்காதீங்க.”.... என்றவன் கையில் எடுத்த தண்ணீர் டம்லரை அப்படியே தட்டிவிட்டால்.

“ஏன்? என்ன நீயும் அணுவணுவாக சாகடிக்கிற? இத விழுங்க விடன்? நிம்மதியா கண்ண மூடிடுவேன்...என்று அழுது கொண்டே கூறினேன்.

“அப்படிச் சொல்லாதீங்க... என்றவள் என் நெஞ்சில் எழும் அனலை அவளின் விழி நீரால் குளிப்பாட்டினாள்.

“ப்ளீஸ் குடிக்காதீங்க. குடிச்சா என்னால இங்கு உயிர்வாழ முடியாது. அப்படிச் சொல்ல மீறி குடிக்கிறதென்டா எனக்கும் தந்திட்டு குடிங்க...நானும் வாறன்” என்றவளின் காந்த விழிகள் அழுகையால் செவ்வானமாயின.

“விஜி.... அழுவாதே” என்றவாறு கேசத்தை கைவிரலால் கோதி எடுத்தேன்.

“றமீஸ், சத்தியமாய் சொல்றன் எங்க அண்ணன் உங்க வீட்டுக்கு வந்த விஷயம் எனக்குத் தெரியாது இதுக்குப் போய்!”

“இந்த முடிவெடுத்திட்டீங்களே?” என்று சொல்லப் போறே அப்படித்தானே?”

“விஜி நான்தான் முன்னமே சொன்னேனே? தலைக்கி மேலே வெள்ளம் போச்சின்னு..”

“அப்பிடின்னா” என்றவள் பதறியே போனாள்.

“விஜி நான் எடுத்த முடிவ மாத்தப் போறதில்ல...தயவு செய்து என்னைத் தடுக்காதே...என்னைக் குடிக்க விடு.. என்றவாறு அவளை இருக அணைத்தபடி இறுதி முத்தமொன்றை இருக அவளிடமே ஒப்படைத்தேன்” இன்னும் அவள் அழுகை நிதர்சனமாகவில்லை.

“றமீஸ் வேண்டாம்...வேண்டாம்...தயவு செய்து என்று சொல்லத் தயங்கிக்கொண்டு வரண்ட நாவோடு வசனத்தை வர்ணித்தாள்.

“விஜி, 'ஐயாம் வெரி சொரி' இது என் நாவில் உச்சரித்த இறுதி வார்த்தையென்று என்னால்கூட விமர்சிக்க முடியவில்லை.

வாசகராகிய நீங்கள் என்னை தயவு செய்து மன்னிக்கவும். மேற்கொண்டு படியுங்கள்.

கையில் வைத்திருந்த அந்த தூக்க மாத்திரையை விஜியின் விழி மூடித் திறப்பதற்கு, தூக்க மாத்திரையை வாய்க்குள் போட்டபடி நிறைந்திருந்த ஒரு டம்லர் தண்ணீரையும் மடக்.... மடக்... என்று குடித்து முடித்தேன்.

அவ்வளவுதான் தூக்கம் என்னை வாரி அணைத்துக்கொண்டது விஜியின் அணைப்பைவிட பிரமாதமாக....

ஹி...ஹி....ஹி......

# தாய் மனசு தங்கம்

பொடிக் கதை



சத்துருக்கொண்டான்–கே.வின்சன்

பறவைகள் தங்களுக்குள் காலை வணக்கங்களைப் பரிமாறிக் கொண்டிருந்தன. கதிரவன் தன் ஒளி நிறைந்த பொற் கிரகணங்களை விரித்ததும் வீடுகளில் ஒளி பரப்பிக் கொண்டிருந்த மின் விளக்குகள் கண்களை மூடிக் கொண்டன. கதிரவனைக் கண்ட மலர்கள் இதழ்களை மலர்த்தி அழகாய்ச் சிரித்தன. புலரும் இன்றைய பொழுது மகிழ்ச்சிகரமானதாகவும், மங்களப் பொழுதாகவும் இருக்க கோயில் மணிகள் பிரார்த்திப்பதுபோல் ஒலிக்கத் தொடங்கின. சிவா 'திடுக்' என எழுந்தான். என்றுமில்லாதவாறு இதயம் படபடத்தது.

அரை மயக்கத்தில் எதிரே இருந்த கடிகாரத்தைப் பார்த்தவன் அதிர்ந்தே விட்டான். "ஓ மை காட் மணி ஏழாப் போகுதே இந்த அம்மா என்ன செய்யுறா. எட்டு மணிக்கு இன்டவியூ இருக்கு கடவுளே" என படபடத்தவாறு அம்மாவைத் தேடினான். அவனது தாயார் மரகதம் தூங்கும் அறைக்குள் எட்டிப் பார்த்தான். அவனது தாயார் இப்போதும் தூங்கிக் கொண்டிருந்தார். சிவாவுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

"அம்மா, அம்மா இன்டைக்கு நான் இன்டவியூவுக்குப் போகணும். நாலு மணிக்கெல்லாம் எழுப்பி விடுங்கன்னு சொல்ல சரின்னு சொல்லிட்டு நீங்க உங்கபாட்டுக்கு நித்திர கொள்றீங்களா? சே...மணி ஏழு. என்ட ஃப்ரெண்ட் தினேஷ் கூட போய் தங்கப் போறேன்னு சொல்ல என்னை பொலிஸ் பிடிச்சுடும் பிரச்சனை காலம் போகாதேன்னு நீங்க சொன்ன சொல்ல கேட்டேன் பாருங்க என்ர புத்திய செருப்பால அடிக்கணும். என்ன ஒரு நாளுமில்லாம இப்படித் தூங்குறீங்க இனி வெளிக்கிட்டு பஸ் பிடிச்சு போக முடியாது. எனக்கு வந்த முதல் இன்டவியூ இது. வயசு போகப் போக கண் மட்டுமில்ல புத்தியும்தான் மங்கிப் போகுது. எனக்கு வர்ற ஆத்திரத்துக்கு...சிவா பற்களை நறும்பினான்.

வெளியே சத்தம் கேட்க சிவா எட்டிப் பார்த்து விசாரிக்க ஒருவர் "தம்பி இங்கே இருந்து டவுனுக்குப் போன பஸ்ஸில இருந்து குண்டு வெடிச்சதாம்." என்று அவர் சொல்லவும் சிவாவின் மனம் அவர்களுக்கு இரக்கப்பட்டது. "கடவுளே நானும் போக வேண்டிய பஸ் அதுதானே? அம்மா இன்டைக்கு மட்டும் நித்திரை கொள்ளாமே என்னை எழுப்பியிருந்தா நானும் போயிருப்பேனே? அம்மாவுக்கு எவ்வளவு கோபமா பேசி விட்டேன். இல்லாவிட்டால் அம்மா காலையிலேயே 'டீ'யோட வந்து என்ன எழுப்புவாவே பாவம் அவவுக்கு சரியான வேலைதான்." என முணுமுணுத்துக்கொண்டவன் தாயின் அருகில் போய்

"அம்மா, அம்மா..."

மென்மையாக எழுப்பினான்.

அவனது தாயார் நிம்மதியான அந்த நீண்ட உறக்கத்துக்குப் போய் வெகுநேரமாயிற்று என்பதை சிவா சிறிது நேரத்தின் பின்புதான் உணர்ந்தான்.

"அம்மா..."

என்ற அவனது கூக்குரல் திசை எங்கும் கேட்டது.

www.padippakam.com


# இலக்கிய நயம்

## அஞ்சியதேன் வஞ்சி?

தருவது ரசிகன்

மங்கையவள் கரத்தில் அவன் அனுப்பிவைத்த மடல் இருந்தது.

ஏற்கனவே படித்துவிட்டாள் இருபது தடவைக்கும் மேலே.

ஒவ்வொரு வரியும் இப்போது அவளுக்கு மனப்பாடமாகிவிட்டது.

மனதோடு இருப்பவன் வரைந். தனுப்பிய மடல் அன்றோ.

அதில் உள்ள வரி ஒவ்வொன்றும் வஞ்சியவளுக்கு திகட்டாத வெல்லச் சுவையன்றோ.

நேரிலே சந்தித்தால் இதழோடு இதழ் சேரும் வேளையிலே நெஞ்ச துடிக்கும். சிந்தை இனிக்கும். மந்தையிலே இருந்து ஓடும் ஆடுபோல இன்னும் சுவைபட மனம் நினைக்கும்.

நேரிலே காணாதபோதும் இதழ் கலந்து இன்சுவையறிந்த பொழுதை மன ஆடு அசைபோடும்.

அப்பொழுதுதனில் மனதுக்கினியவன் தன் உள்ளத்து நிலை சொல்லி எழுதியனுப்பும் மடல் வந்து கரம் ஏற, விழி வண்டுகள் மடல்மீது மொய்க்கும்.

மடல் வழியே அவன் முகம் தெரியும்.

சமயத்திலே மடல் அவனாகவே தெரியும்.

ஏடறியா குழந்தைபோல் மடலை ஆசையோடு புரட்டிப் புரட்டி பார்க்கும் அவள் நெஞ்சக்குள் ஆசையெனும் மான்குட்டி துள்ளி ஓடி குறுகுறுக்கும்.

ஒவ்வோர் எழுத்தாய் விழி உண்ணும்.

ஒவ்வொரு வார்த்தைக்குள்ளும் ஓராயிரம் அர்த்தம் தேடி மனம் ஆராய்ச்சி நடத்தி அலைந்து திரியும்.

ஒரு வார்த்தை எறும்புபோல் மெல்லக் கடித்து குறும்பு செய்யும்.

மறு வார்த்தை கரும்புபோல் இனித்து குளிரச் செய்யும்.

இன்னொரு வார்த்தையோ தேகத்தை நெருப்பாக்கி தவிக்க வைக்கும்.

யாருமறியா இடம் தேடி மடலோடு அமர்ந்து. மனம் பரபரக்க படிப்பதிலேதான் எத்தனை வேகம்.

படித்துவிட்டு மறைத்துவைத்து விட்டு மறுநொடியே மீண்டும் ஒரு தடவை எடுத்துப் படிக்கும் ஆர்வத்திற்கு ஈடாக எது சொல்லினும் பொருத்தமில்லை.

அவன் அருகில் நின்று சுட்டுவிரல் காட்டிப் பேசியதுபோல் உணர்ந்து, மாடத்தில் எரிந்த நந்தாவிளக்கை மங்கையவள் திரும்பிப் பார்த்துக்கொண்டாள். மீண்டும் மடலில் விழி ஏற்றினாள்:

"அந்த நந்தா விளக்கின் சுடர் காற்றின் கரம்பட்டு நடுங்குகிறதே பார்த்தாயா?"

'ஆம். ஆம்' என்று மனதுக்குள் மங்கையவள் ஆமோதித்தாள்.

"அப்படித்தானடி இந்த பிரிவின் துயர் என்னும் இரும்புக்கரம் பட்ட என் நெஞ்சமும் நடுங்குகிறது.

"நேற்று நான் நெரிஞ்சி மலர்களை கண்டேன். எத்தனை அழகு. சின்ன சின்ன பூக்கள். ஆயினும் அந்த நெரிஞ்சியிலே முள்ளும் உண்டென்று நீ அறிவாய் அல்லவா? நம் காதலும் அப்படித்தானடி.

"பூத்துக் குலுங்கும் அன்பென்னும் மலர்கள் மத்தியிலே நாம் கைகோர்த்து நடந்து உலாவரும் வேளையிலே, காலில் குத்திய நெரிஞ்சி முள்ளாக இந்த பிரிவு வந்து இதயத்தில் குத்திவிட்டது பார்த்தாயா?'

மங்கையவள் தன்னையறியாமல் 'அய்யய்யோ' என்று வாய்விட்டு முணுமுணுத்தாள்.

ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது. ஆனால் காதல் ஏட்டில் உள்ள வரிகளில் சுவையிருந்தால் மனதில் இனிக்கும். அந்த வரிகளில் வலி தெரிந்தால் மனதும் வலிக்கும்.

அதுதான் காதல். சாதாரணங்களைவிட அசாதாரணங்களுக்கே காதல் உலகில் கௌரவம் அதிகம்.



அதுதான் 'இதயத்தில் குத்தியது' என்று ஒரு வரி இருக்க, தன்னவன் மேல் கொண்ட பரிவால் உவமையை உண்மை என்று எண்ணி 'அய்யய்யோ' என்றாள் மங்கை.

தொடர்ந்தது மடல்;

"என்னவளே உனக்கு நினைவிருக்கும். அன்றொரு நாள் என் காலில் முள்தைத்து விட்டது. ஆனால் நீயோ, ஏதோ என் விழிக்குள் வேல் பாய்ந்து தைத்தது

"எனக்கு பயமாக இருக்கிறதடி.

"இங்கே களத்திலே எதிரி என்மீது குறிவைத்து வீசும் வேல் உன் விழிபோல் தெரிகிறது. உன் விழிதானே குத்திவிட்டுப் போகட்டுமே, வலிக்கவா போகிறது என்று தடுக்காமல் இருந்துவிடுவேனோ என்றெண்ணியதால் வந்த பயமடி இது."

அவள் நெஞ்சு பதறியது. மறு வரிகள் நெஞ்சில் முட்டியது.

அவள் வெட்கப்பட்டுக்கொண்டிருக்க அவள் பின்புறமாய் பூனைபோல் அடி எடுத்து வைத்து தோள் வழியே எட்டி மடல் பார்த்து, அவள் காதருகே குரல் கொடுத்து பயம் காட்டினாள் தோழி.

மடலை நெஞ்சோடு அணைத்தபடி, பதறி நின்றாள் பாவை. வந்தவள் தோழி



என்று அறிந்தவுடன் பயம் விலக, அவளைப் பார்த்து முறைத்துக் கொண்டாள்.

"உயிர்மீது அத்தனை ஆசையா உனக்கு?"

என்று கேட்டாள் தோழி.

"உயிர் என்ன வெல்லமோ போடி."

என்றாள் பொன் எழிலாள்.

"அப்படியானால் ஏனடி உயிரைக் கையில் பிடித்துக்கொண்டது போல் பயந்தாயாம்?"

"உயிரைவிட நான் அஞ்சவில்லை தோழி. ஆனால் இந்த உயிர் போய் விட்டால் மறுபிறப்பில் அவரை மறந்து போவேனோ என்ற பயம் எனக்கு."

அவள் சொன்ன பதில் கேட்டு தோழி திறந்தவாய் மூடாமல் சிலையெனவே நின்றுவிட்டாள்.

இதனைத்தான் தமிழ் இலக்கியத்தில் எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான நற்றினையில் ஒரு பாடல் மிக அழகாய் சொல்கிறது.

**"சாதல் அஞ்சேன் அஞ்சுவல் சாவேன்**
**பிறப்புப் பிறிது ஆகுவ தாயின்**
**மறக்குவேன் கொல் என் காதலன் எனவே"**

காதலனை சந்திக்கச் செல்வதற்கு முன்னர் தன் முகத்தை பல தடவை நிலைக்கண்ணாடியில் பார்த்துக் கொள்வாள்.

இப்போதோ காதலனின் முகத்தை அவன் கரம்பட்ட மடல்மூலம் கண்டு கொள்ள எத்தனை முறை பார்த்து விட்டாள்.

இப்போதும் பார்த்தபடிதானே பாவையவள் மாடத்தின் ஓரத்திலே நின்று நாணுகிறாள்.

"என் அன்பே! நந்தா விளக்கின் திரியைப் பார்."

மடலிலே இருந்த வரி என்றபோதும் போலன்றோ பதறினாய். துடித்தாய்.

"அம்மட்டோ! என் காலில் தைத்த முள்ளை விரல்களால் எடுத்தால்கூட வலிக்குமென்று உன் இதழ்களால் அன்றோ எடுத்துவிட்டாய்.

"உள்ளங்கால் சிலிர்க்க உச்சி குளிர்ந்ததடி!

"இப்போது வலி இதயத்தில். பிரிவு முள்ளை பிடுங்கிப்போட இந்த உலகத்தில் யாருக்கும் வலிமையில்லை. உன் செந்தூர இதழ்களைத் தவிர."


இளம் தளிர் பருவ வெற்றிலைச் சாறாய் சிவந்தது மங்கையவள் மந்தகாச வதனம். விழிகளோ மடலை உண்டன தொடர்ந்தும், அந்த பயம் போக்கியது.

"அஞ்சாதே அஞ்சுகமே. உன் விழிகள் வெல்லும் வேல்கள். எதிரியின் வேல்களோ தோல்வியின் குறிகள். பிரித்தறிய முடியாதா எனக்கு?

"வேறென்ன? விரைவில் வர ஆயத்தம். 'சென்று வாருங்கள்' என்றென்னை அனுப்பியபோது தந்தாயே செவ்வாய் முத்தம். திரும்பியங்கு வந்து கடன்தீர்க்க கொண்டுள்ளேன் சித்தம். சம்மதமா அன்றில் சமர் போட்டுத்தான் கனியிதழ் பணிந்திடுமா?"

வானை மூடிய மேகமாய் வெட்கம் வந்து முகம் மூடியது. கொட்டிவிட தயாராகும் மேகம்போல் மோகம் வந்து

## குறுக்கெழுத்துப் போட்டி இல—67



### இடமிருந்து வலம்

1. ராகத்தில் ஒன்று.
3. புத்தி இல்லாதவன் கையில் இது இருந்தால் ஆபத்துத்தான்.
6. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பதில் இதுதான் வலியுறுத்தப்படுகிறது.
9. குதிரைச் சவாரி செய்யும்போது இதுவும் முக்கியம்.
10. இது நடந்தால் இரத்தமும் சிந்தும்.
12. சாகாவரம் பெற்ற காதலர் பட்டியலில் இந்தப் பெயரும் உண்டு.
13. பஞ்சாலும் இது செய்யப்படும்.

### மேலிருந்து கீழ்

1. கௌரவிக்கப்படவேண்டிய பெரியோர்களின் நினைவாகவும் இது வெளியிடப்படும்.
2. இது வேண்டுமென்று பாரதியாரும், பராசக்தியிடம் கேட்டார்.
3. மணலில் இதைச் செய்யமுடியாது.
4. நவதானியங்களில் இதுவும் ஒன்று.
5. வீட்டிற்கு வெளியே இருப்பது.
6. இல்லங்களுக்குள்ளும் இது இடம் பிடித்துக்கொள்ளும்.
7. சாப்பாட்டுப் பொருளொன்றும் இதன் பெயரோடு சேர்த்து அழைக்கப்படும்.
8. யானையின் பலம் இதில் தெரியும்.
11. கிளிக்கு இதுதான் சிறை.

***இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 24.09.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:***

**குறுக்கெழுத்துப் போட்டி இல-67**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல. 1772**
**கொழும்பு.**

*சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.*

### குறுக்கெழுத்துப் போட்டி இல-65க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 கா | ற் | 2 று | | 3 க | ட் | 4 சி |
| ல் | | 5 சோ | ழ | ன் | | று |
| 6 ப | சு | | | | 7 ச | வ் |
| ந் | | 8 க | வ | ரி | மா | ன் |
| 9 து | 10 வா | ர | கை | | தா | |
| | க் | | 11 மி | ன் | ன | ல் |
| 12 ச | கு | ன | ம் | | ம் | |

### குறுக்கெழுத்துப் போட்டி இல.65இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. கா.சின்னையா கம்பளை.
2. சில்மியா சின்னலெவ்வை ஏறாவூர்.
3. கி.கவிதா செங்கலடி.
4. ராமையா சிவபாலன் கொழும்பு-04.
5. எல்.முகமட் ஹஸான் ராஜகிரிய.
6. செல்வி.மு.சரோஜினி திருமலை.
7. ஜெ.சங்கர் நுவரெலியா.
8. அஸாரி மொஹிதீன் கட்டுகஸ்தோட்டை.
9. எஸ்.பைரூசா பேருவளை.
10. எம்.தியாகராஜன் நாவலப்பிட்டிய.


இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

## சிந்தியா பதில்கள்

இலங்கை கிரிக்கெட் அணி இங்கு சுற்றுப் பயணம் வந்த பாகிஸ்தான் அணியிடம் வாங்கிக்கட்டிக்கொண்டதே அது பற்றி?

ஏ.கமலேஸ்-கொழும்பு-07.

சிங்கர் கிண்ணப் போட்டிக்கு முன்பு இந்தக் கேள்வியை எழுதி அனுப்பிவிட்டீர்கள். சிங்கர் கிண்ணப் போட்டியை கவனித்தீர்களா கமலேஸ்? கிரிக்கெட் உலக ஜாம்பவான்களையே மூக்கில் விரல் வைக்க வைத்துவிட்டது இலங்கை அணி. அர்ஜுன ரணதுங்கா ஒரு அருமையான கப்டன்.



அர்ஜுன ரணதுங்க

பாகிஸ்தானிடம் வாங்கியதை வட்டியோடு திருப்பிக்கொடுத்திருக்கிறார். வாசிம் அக்ரம் இல்லாதது இலங்கை அணிக்கு வாய்ப்பு என்று நம் நாட்டு வர்ணிப்பாளர்களே கூறியது உறுத்தல்தான். வாசிம் அக்ரம் இல்லாவிட்டாலும் பாகிஸ்தான் அணி வலுவானதுதான். தவிர ஆட்டத்தைத்தான் கவனிக்க வேண்டும். இலங்கை அணி சிறப்பாக ஆடியதை பாராட்டலாம். இந்திய அணியை வெற்றி பெற்றபோதும் 25 ஓவர்களில் இந்தியா சிறப்பாகத்தான் ஆடியது. அதைவிடச் சிறப்பாக இலங்கை அணி ஆடியதே வெற்றிக்குக் காரணம். விளையாட்டுகளில் என்றாலும் ஆரோக்கியமான பார்வையை செலுத்தவும், திறமையை மதிக்கவும் பழகிக்கொள்ள வேண்டும்.

□□

பெண்கள் நவீன ஆடைகள் அணிவது கவர்ச்சிக்காகவா? அல்லது?

திருமதி.சந்திராணி தங்கத்துரை-சவளக்கடை.

அப்படிச் சொல்லிவிட முடியாது. சல்வார் கமீஸ் நவீனமானது. எடுப்பாகவும் இருக்கும். எட்டி உதைக்கவும் வசதியாக இருக்கும்.

□□

குடும்ப பெண்ணுக்கும், நடிகப் பெண்ணுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

என்.முகமட் உஸ்மான்-அநுராதபுரம்.

கமரா முன்பாக முன்னவர் நடிக்கத் தேவையில்லை.

### "அருமையான கப்டன் அர்ஜூன ரணதுங்க"

டியர் சிந்தியா! அடுத்த ஜனாதிபதி யார்?

ச.ராமஜெயம் எட்/அல்கொல்ல எஸ்டேட்

உங்களுக்கு எதிர்பால்.

□□

எமது நாட்டில் அமைதி ஏற்படும் போல் தெரிகிறது. உங்கள் கருத்து?

க.சுதர்சன்-செங்கலடி.

புயலுக்கு முந்தைய அமைதியாகிவிடக்கூடாது.

□□

சச்சின் நம் மண்ணில் போட்ட செஞ்சரி எப்படி?

கே.ஜவாஹர்-புத்தளம்.

ஆரம்பத்தில் தூள். பிறகு நிதானம். நூறைத் தொட்டபின் வேகம். நூறைத்தொட அவர் காட்டிய அந்த நிதானம் நம் பொறுமையைச் சோதித்ததும் உண்மை.

புதிய அரசின் வேகம் பற்றி கூறுங்கள்?

எல்.இல்யாஸ்-கல்முனை.

நீண்டதூர ஓட்டத்தில் எடுத்தவுடன் வேகம் புத்திசாலித்தனமா என்று யோசிக்கவைக்கிறது. மெல்ல, மெல்ல சூடாகும் எஞ்சினே நீண்டகால பாவனைக்கு உகந்தது.

□□

முன்னாள் பிரதமர் ரணிலுக்கும், தற்போதைய பிரதமர் சந்திரிக்காவுக்கும் இடையே உள்ள வேறுபாடு என்ன?

பி.எம்.நியாசத்-மல்லவபிட்டிய.

அவர் ஜனாதிபதிக்கு கட்டுப்பட்டிருந்தார். இவர் ஜனாதிபதியையே கட்டுப்படுத்துவது போலத் தெரிகிறார்.

□□

மரணத்தை வெல்வது எப்படி?

எ.எம்.எம்.ஜலால்-புத்தளம்.

சாதித்துவிட்டுச் சாகவேண்டும்.

□□

பொருளாதார தடை நீக்கம் எதைக் காட்டுகிறது?

ச.ஜெயகரன்-கொழும்பு-06.

வடக்கே உள்ளவர்களுக்கும் வயிறு என்ற ஒன்று இருக்கிறது என்பதை புதிய அரசாங்கமாவது புரிந்துகொண்டதை:

□□

பிரபு நடித்து அடுத்துவரும் படம் எது?

எம்.நித்யா-ஹட்டன்.

ஜல்லிக்கட்டுக்காளை.

□□

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் இன்று இருந்திருந்தால்?

கோ.தர்மராஜ்-கண்டி

ஜெயலலிதா முதல்வராகியிருக்கமாட்டார்.

□□

கியூபாவிலும் சோசலிச அரசு சரியுமா?

ஆர்.சிவநாதன்-மட்டக்களப்பு.

பிடல்காஸ்ரோ உள்ளவரை அந்தக் கதை நடக்காது.

□□

யாரை நம்பக்கூடாது?

மா.உருத்திரா-திருகோணமலை.

எதற்கெடுத்தாலும் தாளம் போடுகிறவர்களை.

□□

கூட்டணியின் வெற்றி பற்றி என்ன கூறுகிறீர்கள்?

எஸ்.தம்பிராசா-அக்கரைப்பற்று.

ஆயுதமும்-ஆட்பலமும் மட்டுமே போதும் என்று நினைத்துக்கொண்டிருந்தவர்களுக்கு விழுந்த அடி.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# மகாபாரதம்

அங்கம் 46

**இவ்வாரம் (18.09.94 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.**

**அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்**

**காலத்தின் குரல்:** நடைபெறப்போகும் சூதாட்டத்தின் முடிவு எத்தகைய விளைவினை ஏற்படுத்தும் என்பதனை கங்காபுத்திரர் பீஷ்மர், துரோணாச்சாரியார், குலகுரு கிருபாச்சாரியார், முதல் அமைச்சர் விதுரர் ஆகிய அனைவரும் நன்கு தெரிந்து வைத்துள்ளனர். இருப்பினும் அவர்களுடைய அமைதியான போக்கு வியப்பினையே தருகிறது. பீஷ்மரை- அவர் எடுத்துக்கொண்ட கடும் சபதம் தடுக்கிறது. துரோணரும் கிருபரும் தங்களுடைய ஜீவனோபாயத்துக்கு திருதராட்டினரையே சார்ந்திருக்க வேண்டியவர்கள். ஏனையோரும் ஏதோ ஒருவகையில் கட்டுண்டிருப்பதனால் சதுரங்க- சூதாட்டம் நடைபெறும் மண்டபத்துக்கு வருவோரை அமைதியுடன் பார்த்துக் காத்து நிற்கின்றனர்.

–காட்சி தொடக்கம்–

**அறிவிப்பாளன்:** மரியாதைக்குரிய பிதாமகர் பீஷ்மர், கிருபாச்சாரியார், துரோணாச்சாரியார், பிரதம அமைச்சர் விதுரர் ஆகியோர் வருகின்றனர்.
விதுரர் ஏனையோரை அவரவர் இருக்கைகளில் அமர்த்துகிறார்.

**அறிவி:** முடிக்குரிய இளவரசர் துரியோதனன், காந்தார மன்னர் சகுனி, அங்கதேச அரசர் கர்ணன், இளவரசர் துச்சாதனன் ஆகியோர் வருகின்றனர்.
இருக்கையில் அனைவரும் அமர்கின்றனர்.

**அறிவி:** சக்கரவர்த்தி யுதிஷ்டிரர் அவருடைய சகோதரர்களுடன் வருகிறார்.
சபையிலிருந்த அனைவரையும் மரியாதையுடன் வணங்கி வாழ்த்துப் பெற்றபின் உரிய இருக்கைகளில் அமர்கின்றனர்.

**துரியோ:** வணக்கம் அண்ணா!

**யுதிஷ்:** வெற்றி பெறுவாயாக...!

**சகுனி:** இம்மாதிரி வாழ்த்துவதனால் சக்கரவர்த்தி தானாகவே இப்போதே தோல்வியை ஏற்கலாமா?

**யுதி:** மாமா! துரியோதனன் எனது தம்பி! அவனுடைய வெற்றியே எனது வெற்றியுமாகும்!

**அறிவி:** அஸ்தினாபுரத்தின் அரசர், பாரத நாட்டின் இணையிலாத் தலைவர் திருதராட்டிரர் பராக்!
தோழிப் பெண்ணின் உதவியுடன் வரும் மன்னரை விதுரர் முன் சென்று அழைத்து வந்து ஆசனத்தில் அமர்த்துகிறார்.

**திருத:** என் அன்புக்குரிய யுதிஷ்டிரனும் என் மகன் துரியோதனனும் வந்து விட்டனரா?

**விதுர:** யாவரும் வந்து விட்டார்கள். தங்கள் ஒப்புதலுக்காகக் காத்திருக்கின்றார்கள்.

**திருத:** ஆட்டத்தை ஆரம்பிக்கலாம்!

**துரி:** அண்ணா! ஆரம்பிக்கலாம்!

**சகுனி:** முதலில் இதற்கான விதிகளை தீர்மானித்துக்கொள்ள வேண்டும்.

**யுதிஷ்:** சகோதரர்கள் மத்தியில் சட்ட விதிகளுக்கு என்ன அவசியம்....?

**துரி:** விளையாட்டு விளையாட்டுத்தான். எவரானாலும் அதற்கான சட்ட விதிகளை அனுசரித்தால் தப்பர்த்தம் கொள்ள பின்னர் வாய்ப்பேற்படாது. நான்தான் விளையாட்டுக்கான பந்தயம் கட்டுவேன். ஆனால் மாமாதான் எனக்காகப் பகடைக் காய்களை உருட்டுவார்.
பீஷ்மர் முதல் அனைவரும் ஆச்சரியமடைகின்றனர்.

**அர்ச்:** ஏன்? பகடைக்காயை உருட்டத் தெரியாத நீர், ஏன் எங்களை விளையாட அழைத்தீர்?

**கர்ண:** மாமாவுடன் விளையாட இந்திரப் பிரஸ்த மாமன்னர் பயந்து விட்டார் போலும்!

**அர்ச்:** தேரோட்டி மகனே! அங்கதேச அரசனே! சகோதரர் துரியோதனர் போர் முனைக்கு தன் பிரதிநிதியையா அனுப்புவார்?

**விதுர:** அர்ச்சுனன் கூறுவதுதான் சரி!

**துரி:** சித்தப்பா! உங்களுக்கு அர்ச்சுனன் கூறுவதுதான் எப்போதும் சரியாக இருக்கும். இப்பொழுது இங்கு விளையாட்டு இடம்பெறுவதானால் மாமாதான் எனக்காக விளையாடுவார். இல்லையேல் அண்ணன் விளையாடாமலே விட்டு விடட்டும்.

**பீஷ்ம:** விளையாட்டில் தோல்வியடைவது அவமானமே இல்லை!

**துரி:** தாத்தா அவர்களே! மரியாதைக் குறைவைப் பற்றியோ அவமானத்தைப் பற்றியோ நான் கூறவில்லை. மாமா எனக்காக விளையாட வேண்டும். இல்லையேல் விளையாட்டே வேண்டியதில்லை!

**திருத:** எதற்கும் ஒரு காரணம் வேண்டுமே மகனே!

**துரி:** அப்பா! இதுதான் என் விருப்பம்! அண்ணன் விரும்பவில்லையானால் எல்லாவற்றையும் சுருட்டுங்கள். விளையாட்டே வேண்டாம். நான் போகிறேன்!

**யுதிஷ்:** தம்பி! மாமாதான் உன் சார்பில் விளையாட வேண்டுமென்றால், அவ்வாறே ஆடலாம்.

**சகுனி:** ஆத்திரம் வேண்டாம் மருமகனே!
யுதிஷ்டிரர் தன்னுடைய கழுத்திலிருந்த மாலையை கழற்றி பந்தயமாக வைக்கிறார்.

**யுதிஷ்:** இந்த விலைமதிப்பற்ற மாலையை பந்தயமாக வைக்கிறேன்.
துரியோதனன் சைகைசெய்ய தாதி ஒரு தாம்பாளத்தில் ஆபரணங்களைக் கொண்டு வருகிறாள்.

**துரியோ:** இவை எனது பணயம்.

**விதுர:** அரசரே வீரனுக்கு படைக்கலன் தருவான். ஆகவே, காந்தார மன்னரே! நீங்கள் துரியோதனனின் பகடைக் காய்களைத்தான் உருட்ட வேண்டும்.

**சகுனி:** அதுசரிதான். அஸ்தினாபுரத்தில் ஒருவரை ஒருவர் நம்புவதில்லை. அதுதான் பெரும் குறை. துரியோதனா! உன்னுடைய பகடைகளை என்னிடம் கொடு!
(துரியோதனன் பகடை கொடுத்ததும்)
விதுரரே! இப்போது திருப்தியா? சரி நீங்களே ஆட்டத்தைத் தொடங்குங்கள்!

**யுதிஷ்:** தம்பிக்காக தாங்கள் விளையாடுவதால் தாங்களே தொடங்கலாம்.

**சகுனி:** தங்கள் விருப்பம் போலாகட்டும்! மருமகனே! நீ என்ன சொல்கிறாய்?

**துரியோ:** மாமா... எனக்கு ஒரு ஆறு போடுங்கள்.

**சகுனி:** ஆறுதானே! உனக்கு நான் எதையும் மறுக்கவில்லை. இதோ ஆறு.
பகடை ஆறு காட்டுகிறது. சகலரும் வியக்கின்றனர். திருதராட்டிரர் மகிழ்கிறார்.

**சகுனி:** பார்த்தீர்களா ஆறு! இதோ பாருங்கள் இப்போது எட்டு... (எட்டு விழுகிறது)

**துரியோ:** மாமா! அடுத்து பன்னிரண்டு!

**சகுனி:** இதோ பன்னிரண்டு! சரி மருமகனே அடுத்து என்ன கேட்கிறாய்...?

**துரியோ:** எட்டு...எட்டு! இதோ எட்டு! சக்கரவர்த்தி யுதிஷ்டிரரே...இதோ எட்டு! பார்த்தீரா?

**துரியோ:** அடுத்து பத்து!

**சகுனி:** பத்து...! இதோ பத்து விழுந்துவிட்டது!

**துரியோ:** மாமா ஒரு ஒன்பது...!

**சகுனி:** ஒன்பது தானே? இதோ ஒன்பது.

**துரியோ:** அர்ச்சுனா! எங்கே அந்த மாலையை இப்படிக் கொடு. அது இந்த விலைமதிப்பற்ற மாலை என்க்குரியது.

**சகுனி:** மருமகனே துரியோதனா! இது உனது முதல் வெற்றி- மாலையை அணிந்து கொள்!

**பீஷ்ம:** மகாராஜா! இத்துடன் இந்த விளையாட்டை நிறுத்த ஆணையிடுங்கள். துரியோதனனின் விருப்பத்துக்காக அவர்கள் அழைக்கப்பட்டார்கள். அவர்களும் வந்தார்கள். துரியோதனன் வென்றான்- பாண்டவர்கள் தோற்றார்கள். இது போதும். விளையாட்டை நிறுத்திவிடலாம்.



**துரியோ:** தாத்தா அவர்களே! தோற்றவர்கள் வெல்வதற்கு ஏற்ற சந்தர்ப்பம் தராவிட்டால் உலகம் பழிக்குமல்லவா?

**திருத:** துரியோதனன் கூறுவதும் நியாயம்தான் பெரியப்பா!

**பீமன்:** அண்ணா! பிதாமகர் கூறும் நியாயங்களுக்கு செவி சாயுங்கள்.

**யுதிஷ்:** பின்வாங்கி ஓடுவது அவமானமல்லவா பீமா?

**சகுனி:** யுதிஷ்டிரரே! அடுத்து உங்கள் பந்தயம் என்ன?

**யுதிஷ்:** எனது பொக்கிஷத்திலிருந்து ஒரு இலட்சத்து பதினெட்டாயிரம் தங்க நாணயங்களை வைக்கிறேன்.

**சகுனி:** உமது தங்க நாணயங்கள் அனைத்தையும் இதோ நான் பறிக்கப் போகிறேன்.

**துரியோ:** மாமா! எனக்கு வேண்டுவது பன்னிரண்டு!

**சகுனி:** எனது நம்பிக்கைக்குரிய படைவீரர்களே! எங்கே...பன்னிரண்டு...இதோ பன்னிரண்டு!
பாண்டவர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும் வேதனைப்படுகின்றனர். கௌரவர்கள் குதூகலிக்கின்றனர்.

**விதுர:** துரியோதனா! பாண்டவர்களின் செல்வத்தை கவர வேண்டாம்; அவர்களுடைய இதயத்தை கவரப்பார்.

**துரியோ:** அப்படியானால் இந்திரப் பிரஸ்த மாமன்னரிடம் விளையாட்டை நிறுத்தும்படி கூறுங்களேன்! நான் தான் அழைப்பு விடுத்தேன். நானே வெற்றியீட்டியுள்ளேன். அவ்வாறிருக்கும்போது அவர்களும் விளையாடி வெல்லுவதற்கு சந்தர்ப்பம் அளிக்காமல் நானே ஆட்டத்தை நிறுத்தி அவர்களை இழிவு படுத்தப் போவதில்லை சித்தப்பா!

**யுதிஷ்:** சரி என்னுடைய இரதத்தை பணயமாக வைக்கிறேன்!

**சகுனி:** இளவரசர் துரியோதனரே! அவருடைய இரதத்தை வென்று தர உத்தரவு தருகிறீர்களா?

**துரியோ:** ஆகட்டும் மாமா... எங்கே... 1, 2, 3,4, 5, 6, 7, 8.... ஆமாம் மாமா எட்டு போடுங்கள்!

**சகுனி:** இதோ பாருங்கள் எட்டு! மருமகனே! நீ கோரிய எட்டே விழுந்துவிட்டது.

**துரியோ:** அண்ணா! இனி நீங்கள் கால் நடையாகத்தான் போக வேண்டும்!

**சகுனி:** அன்பு யுதிஷ்டிரரே! உங்கள் இரதமும் பறிபோய்விட்டது. குந்தியின் மைந்தனே! அடுத்த பந்தயப் பொருள் என்ன?

**யுதிஷ்:** தங்க ஆபரணங்கள் அணிந்த ஒரு இலட்சம் தோழிப் பெண்களை எனது பணயமாக வைக்கிறேன்.

**சகுனி:** துரியோதனனிடமும் ஏராளமான சேடிகள் உள்ளனர். அத்துடன் இந்த ஒரு இலட்சம் சேடியர்களையும் தங்க நகைகளையும் சேர்ப்பதற்கு, எனது அன்பான போர் வீரர்களான பகடைகளே ஒரு ஆறு தாருங்கள். இதோ ஆறு விழுந்து விட்டது. யுதிஷ்டிரரே! அடுத்து உங்கள் பந்தயப் பொருள் யாதோ?

**யுதிஷ்:** தங்க அம்பாரிகள் கொண்ட ஆயிரம் யானைகள்!

**துரியோ:** மாமா! எனக்கு ஏழு வேண்டும்!

**சகுனி:** மருமகனே! ஆயிரம் யானைகளும் தங்க அம்பாரிகளும் உனக்கே! இதோ ஏழு!
பாண்டவர்கள் தடுமாற்றத்துடன் கோபமடைகின்றனர். யுதிஷ்டிரர் அதிர்ச்சியடைகிறார்.

**துரியோ:** தடுமாற்றம் வேண்டாம் அண்ணா! வேறு ஏதாவது பந்தயப் பொருளுண்டா...?

**யுதிஷ்:** என்னிடம் ஏராளமான செல்வமும் சொத்துக்களும் உள்ளன. அத்தனையையும் பணயமாக வைக்கிறேன்.
விதுரர் முதல் சகலரும் அதிர்ச்சியடைகின்றனர்.

**சகுனி:** சக்கரவர்த்தி யுதிஷ்டிரரின் திரண்ட செல்வத்தையும் சொத்துக்களையும் உனதாக்கித்தர வேண்டுமா மருமகனே!

**துரியோ:** மாமா எனக்கு அவை தேவை. அதற்காக ஒரு எட்டு போடுங்கள் மாமா!

**சகுனி:** இதோ! உன் கோரிக்கைப்படி எட்டு! அவர்களுடைய கணக்கிலடங்காச் சொத்துக்களனைத்தும் இனி உன்னுடையவை மருமகனே!

**துரியோ:** இன்னும் பந்தயமாக வைத்தாட ஏதாவது இருக்கிறதா அண்ணா?

**சகுனி:** பேசுங்கள் யுதிஷ்டிரரே! ஏதாவது கூறுங்கள்!

**யுதிஷ்:** ஆமாம்! எனது இளைய சகோதரர்கள், அந்தணர்கள் மற்றும் அவர்களுடைய சொத்துக்கள் நீங்கலாக எனது நகரங்கள், இராஜ்ஜியம், நிலம், எனது குடிமக்கள் அவர்களுடைய உடைமைகள் அனைத்தையும் பணயமாக வைத்து ஆடுகிறேன்.
துரியோதனனும் அவனைச் சார்ந்தவர்களும் குதூகலிக்கின்றனர். அர்ச்சுனனும் பீமனும் இதனை விரும்பவில்லை.

**சகுனி:** இதோ மருமகனே! இந்திரப் பிரஸ்தமே பணயமாக வைக்கப்பட்டுள்ளது. எனது போர் வீரர்களே! நான் எதிர்பார்த்துக்காத்துக் கிடந்த சந்தர்ப்பம்! நான் வெற்றியீட்ட எங்கே ஒரு பன்னிரண்டு தாருங்கள்!
பன்னிரண்டு விழுகிறது. பாண்டவர்கள் பரிதவிக்கின்றனர். விதுரரும் பீஷ்மரும் கண்ணீர் சிந்துகின்றனர். துச்சாதனன் மகிழ்ச்சியில் குதிக்கிறான். திருதராட்டிரரும் மகிழ்கிறார்.

**துரியோ:** மாமா! இந்திரப் பிரஸ்தம் இனிமேல் என்னுடையதே!

**சகுனி:** இந்திரப் பிரஸ்தம் போனாலும் மீண்டும் நீர் வெற்றிபெற வாய்ப்புண்டு. வேறு ஏதாவது பந்தயமாக வைத்து ஆடலாம் மாமன்னரே!
யுதிஷ்டிரர் தனது இளைய தம்பி நகுலனைப் பார்க்கிறார்.

**யுதிஷ்:** எனது இளைய தம்பி நகுலனைப் பணயமாக வைக்கிறேன்.
சபையிலுள்ள சகலரும் அதிர்ச்சியடைகின்றனர்.

**பீஷ்ம:** மகாராஜா! கடவுளுக்காக உடனடியாக இதனை இத்துடன் நிறுத்துங்கள்!

**சகுனி:** ஆனால் பந்தயம் வைத்தாகிவிட்டதே! விளையாடித்தானாக வேண்டும். பகடையினை உருட்டட்டுமா, யுதிஷ்டிரரே!

**யுதிஷ்:** ஆமாம் மாமா!

**சகுனி:** உணர்ச்சிவசப்பட வேண்டாம் யுதிஷ்டிரரே! சிறந்த மன்னன் எவனும் யுத்த முனையிலோ அல்லது விளையாட்டிலோ தோற்றாலும் விசனப்பட மாட்டான். துரியோதனா..? என்ன வேண்டும்?

**துரி:** ஒரு ஒன்பது மாமா!
பீமன் விம்முகிறான்; அர்ச்சுனன் அழுகையினை அடக்க முனைகிறான். பீஷ்மர் வாளை அரை மட்டம் உருவுகிறார்; விதுரரும் திகைப்புற்றுக் காணப்படுகிறார்.
சகுனி பகடையை உருட்ட ஒன்பது விழுகிறது– நகுலன் துரியோதனனின் அடிமையாகிறான். துரியோதனாதிகள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்கின்றனர்.

**சகுனி:** யுதிஷ்டிரரே! நகுலனைத் தோற்றுவிட்டீர்! அடுத்து ஏதாவதுண்டா?
யுதிஷ்டிரன் சகாதேவனைப் பார்க்கிறார்.

**யுதிஷ்:** இப்போது எனது பந்தயப் பொருள் சகாதேவன்!
பீமன் வேண்டாம் என்று சைகை மூலம் தடுக்கிறான்.

**சகுனி:** மருமகனே! சகாதேவனை வெல்ல எனது பகடைப்படை தயார்! என்ன வேண்டும் சொல்!

**துரியோ:** மாமா! எனக்கு வேண்டுவது ஆறு!
சகுனியின் பகடை ஆறு காட்டுகிறது. எல்லோரும் திகைப்புடன் செய்வதறியாது தவிக்கின்றனர். திருதராட்டிரரும் குழம்புகிறார். அடுத்ததாக யுதிஷ்டிரன் அர்ச்சுனனைப் பந்தயமாக வைக்கிறான். துரோணாச்சாரியார் கண்ணீர் வடிக்கிறார். பீஷ்மர் தன் வாளின் கூர்மையில் தடவியமையினால் விரலில் காயம் ஏற்பட்டு இரத்தம் சொட்டுகிறது. சபையினரும் சோகமே உருவாகச் செய்வதறியாது தவிக்கின்றனர்.

**துரியோ:** உங்கள் சகோதரர்களை பணயமாக வைப்பதற்கு அவர்களிடம் விருப்பம் கேட்டீர்களா அண்ணா?

**யுதிஷ்:** அவர்கள் விருப்பம் அவசியமில்லை. காந்தார நாட்டரசரே! பகடையை உருட்டுங்கள்.

**துரியோ:** மாமா...அர்ச்சுனனை வெல்ல எனக்கு ஒரு எட்டுப் போடுங்கள்.

**சகுனி:** இதோ எட்டு போடுகிறேன்-வீரன் அர்ச்சுனனை வெல்லுகிறேன்!
பகடை எட்டைக் காட்டுகிறது. அர்ச்சுனனும் பீஷ்மரும் அழுகின்றனர்.

**துரியோ:** ஆகா! அர்ச்சுனன் இப்போது எனது அடிமை!
யுதிஷ்டிரன் கோபமடைகிறார். இருப்பினும் பீமனைப் பார்க்கிறார். அண்ணன் ஆணைக்கு தம்பி பீமன் மறுக்காமல் மதிப்பளிக்கிறான்.

**சகுனி:** பலசாலியான பீமன் இப்பொழுது பந்தயப் பொருளாக விருக்கிறான் மருமகனே!

**துயோ:** மாமா! ஒரு பன்னிரண்டு!
சகுனி படை உருட்ட பன்னிரண்டு விழுகிறது. சகலரும் வேதனை அடைகின்றனர். தொடர்ந்து யுதிஷ்டிரர் தன்னையே பணயமாக வைக்கிறார்.

**சகுனி:** மருமகனே சக்கரவர்த்தி யுதிஷ்டிரனை வென்றுவிட்டால் முழு உலகமுமே உன் காலடியில். எனது படைவீரர்கள் என்னைக் கைவிடமாட்டார்கள். எது வேண்டும்...?

**துரியோ:** மாமா...! மாமா...! இதில் எனக்கு வெற்றி கிட்ட வேண்டும் மாமா! எங்கே ஒரேயொரு ஒன்பது..!
சகுனியின் பகடைக்காய்கள் ஒன்பதைக் காட்டுகின்றன. பாண்டவர்கள் சகலவற்றையும் இழந்துவிடுகின்றனர். பீஷ்மர் தனது வாளை உடைக்கிறார். துரியோதனனைச் சார்ந்தவர்கள் குதூகலிக்கின்றனர்.

**துரியோ:** யுதிஷ்டிரா..! இப்போது நீ என் அடிமை!
மண்டபத்தில் பயங்கர அமைதி சூழ்ந்திருக்கிறது. பாண்டவர்கள் தலை கவிழ்ந்து இருக்கின்றனர்.

**யுதிஷ்:** இந்த விளையாட்டு இத்துடன் நிறுத்தப்பட வேண்டும். என்னிடம் பந்தயமாக வைத்தாடுவதற்கு இனிமேல் எதுவுமே கிடையாது.

**கர்ண:** ஏன் இல்லை! மான் விழிகளை ஒத்த கண்களை உடைய உங்கள் மனையாள் திரௌபதி இருக்கிறாளே!
சினங்கொண்ட பாண்டவர்கள் கர்ணனைத் தாக்க எழுகின்றனர். இதனைப் பார்த்த துரியோதனனும் கோபமடைகிறான். பாண்டவர்களுக்கு கட்டளையிடுகிறான்.

**துரியோ:** நீங்கள் ஐவரும் இப்போது என் அடிமைகள்- என் ஏவலாளர்கள்!! அமருங்கள்!
பாண்டவர்கள் வெட்கித் தலை குனிந்து அமர்கின்றனர். பீஷ்மர் தனது வாளினை வீசி எறிந்து விடுகிறார். விதுரர் கோபத்துடன் எழுகிறார்.

**விதுர:** மகாராஜா! உங்கள் மருமகன் இந்தப் பேரவையிலே பேரிழுக்கப்பட்டு அவமானப்படுத்தப்படுகிறான். தாங்கள் எதுவும் கூறாமல் பேசாதிருக்கிறீர்கள். உங்கள் மகனை தூர விலக்கி வைக்க தைரியமாகச் செயற்படுங்கள். இல்லையேல் கங்கையில் வழிந்தோடும் நீர் அத்தனையாலுமே கழுவப்பட முடியாத வடுவினை அவன் கௌரவ வம்சத்துக்குச் சேர்க்கப் போகிறான். இந்த நல்ல காரியத்தை உடனே செய்யுங்கள். இல்லையேல் கௌரவ குலம் அழிக்க முடியாத பெரும் பழிக்குள்ளாக்கப்பட்டுவிடும்.

**துரியோ:** சித்தப்பா! அஸ்தினாபுரி அரசர் வரலாற்றிடம் மன்னிப்புக் கேட்க வேண்டிய அவசியமில்லை. வீரர்களினதும் ஆற்றல் மிக்கோரினதும் கைப்பொம்மைதான் வரலாறு. நீங்கள் என் சித்தப்பா என்ற நிலையில்லாமல் சாதாரண பிரதம மந்திரியாக இருந்திருந்தால் - என் தந்தை மீது ஆணை- தோட்டக்காரன் களைச் செடியினைப் பிடுங்குவது போல் உங்கள் தலையைச் சீவியிருப்பேன்! தனக்கு உணவளிப்பவனின் கையையே தன் நகங்களால் கீறும் ஒரு பூனையைப்போல் நடந்து கொண்டாலும் நீங்கள் என் சித்தப்பா தான். உங்களுடைய அரச விசுவாசம் எவ்வாறு எங்களுக்கு மாறுபட்டே இருந்து வந்துள்ளது என்பதை நாங்கள் அறியவில்லை என்று கருத வேண்டாம். பிதாமகர், துரோணாச்சாரியார் மற்றும் கிருபாச்சாரியார்போல் அமைதியாக அமருங்கள் இல்லையேல் சபையைவிட்டு உடனே வெளியேறலாம்.

**விதுர:** என்னை இடைமறித்ததன் மூலம் இந்த சபைக்கே தலைமை தாங்கும் மகாராஜா திருதராட்டிரருக்கே அவமானத்தை ஏற்படுத்திவிட்டாய்! மகாராஜா இருக்கும்போது எவரையும் வெளியேற்றவோ வரவழைக்கவோ உனக்கு அதிகாரம் கிடையாது.
மகாராஜா! பேரழிவு நாட்டை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. அழிவுக்கே அடிகோலும் இந்த ஜந்துவை உடனடியாக அகற்றி விடுங்கள். இந்த சூதாட்டத்தை உடன் நிறுத்துங்கள்!

**துரியோ:** விளையாட அழைப்பு விடுத்தவன் நானே! நிறுத்துவதற்கான ஆணையினையும் நானே பிறப்பித்தாக வேண்டும். மாமா! திரௌபதி பந்தயப் பொருளாக வைக்கப்பட்டுள்ளாள். மாமா! நீங்கள் இப்போ எனக்காக ஒன்பது போடுங்கள். அவளை அடிமை கொள்ளவேண்டிய எண் ஒன்பது.
சகுனியின் பகடை ஒன்பது காட்டுகிறது.

**சகுனி:** இதோ மகாராணி திரௌபதியும் உன் அடிமையாகிவிட்டாள் மருமகனே!
எல்லோரும் பதட்டமடைந்து காணப்படுகின்றனர்.

**துரியோ:** சித்தப்பா! அவள் திரௌபதியை இங்கு அழைத்து வாருங்கள். இன்று முதல் அவள் என் அடிமை. இனி அவள் அரண்மனை- அந்தப்புர வாசியல்ல. ஏனைய அடிமைப் பெண்கள்- வேலைக்காரிகளுடன்தான் அவள் வாழ வேண்டும்!

**விதுர:** மடையனே! பேரழிவை வரவழைக்காதே முட்டாள்!

**துரியோ:** ஒரு பிரதம மந்திரிக்கான கடமையினைச் செய்ய விதுரர் மறுக்கிறார். யாரங்கே...!
காவலன் வருகிறான்.

**துரியோ:** திரௌபதியை உடன் அழைத்து வா...!
காவலன் திரௌபதியின் அந்தப்புரம் சென்று தகவலைச் சொல்கிறான்.

**காவ:** மகாராணி! இளவரசர் தெரிவித்த அந்தத் தகவலைத் தங்களிடம்கூற என் நாவே கூசுகிறது அம்மா!

**திரௌ:** எனது மைத்துனர் துரியோதனன் அநாகரிகமான முறையில் அனுப்பியுள்ள அந்த அநாகரிகத் தகவலை சொல் பார்க்கலாம்!
காவலன் கண்ணீர் வடிக்கிறான். மீண்டும் திரௌபதி கேட்டபோது, சூதாட்டத்தில் தன்னையும் பந்தயமாக வைத்து யுதிஷ்டிரன் ஆடித் தோற்றதையும் சபைக்கு அழைத்து வரும்படி பணிக்கப்பட்டதையும் அழுத வண்ணம் கூறுகிறான்.

**காவ:** சூதாட்ட மண்டபத்துக்கு தாங்கள் வரவேண்டும் என்று இளவரசர் ஆணையிட்டுள்ளார்!

**திரௌ:** ஆணையிட்டாரா? நான் அவனது அடிமையா? எனது கணவன் ஒழுக்கத்தின் சிகரமாயிற்றே? கொடியவன் ஒருவன்கூட தன் மனைவியை பணயமாக வைத்துச் சூதாடத் துணிய மாட்டானே! சூதாடும்போது என் கணவர் மது அருந்தியிருந்தாரா?

**காவ:** இல்லை மகாராணி!

**திரௌ:** அப்போ சுய நினைவுடன்தான் தனது தம்பிமாரையும் என்னையும் பணயம் வைத்தாடித் தோற்றாரா? காவலனே! மீண்டும் அங்கு போ! தன்னைத் தோற்பதற்கு முன்னதாகவே என்னை இழந்தாரா அல்லது தன்னை இழந்தபின் என்னை இழந்தாரா? இந்த வினாவுக்கு விடை கண்டு வா! அதன் பின்னர் என்னை அழைத்துச் செல்!

<u>பின்னணிப் பாடல்:</u>

**அறிவில் லாதவன் அருங்குண நாயகன்**
**அவனியே மெச்சிடும் அற நெறியுணர்ந்தவன்**
**அரசினை யிழந்தனன், ஆருயிர்ச் சோதரர்**
**அனைவரையிழந்தபின் அவனையுமிழந்தனன்**

**ஐவருக்குந்தேவி யவள் அழியாத பத்தினியாள்**
**துருபதனா ரீன்றெடுத்த திரௌபதியை வைத்தாடி**
**தோற்றுவிட்டான் தருமன் துயராழி மூழ்கி நின்றான்**
**மாற்று வழியுண்டோ மாற்றுதற்கு ஊழ்வலியை?**

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

## அருள் ஜுவலர்ஸ்



436331


பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.

3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11





# Kala



JEWELLERS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை நேருக்கு

61 SEA STREET, COLOMBO 11
61 செட்டியார் தெரு, கொழும்பு 11


## விடாது எடை குறைத்தார் திருமதி அமெரிக்கா

[illegible] →



## சிங்கார நட்சத்திரம்

ஆகாசங்களின் [illegible] (House of Spirits) என்ற படத்தில் தோன்றும் [illegible] 27 வயதுடைய அழகி. இந்திய இந்து பெண்ணின் பெயரைப் புனைந்திருக்கிறார்.

[illegible]

## பெனாசிர் பூட்டோவும் ஒட்டிப் பிறந்த இரட்டையரும்



ஆச்சரிய தகவல்: நிடா அன்வர் மற்றும் ஹிரா அன்வர் ஆகிய இரு பெண் [illegible] இரட்டைக் குழந்தைகள். பாகிஸ்தானில் கராச்சி நகரிலுள்ள மருத்துவமனையில் [illegible] தலையை வெட்டிப் பிரிக்கும்போது ஏதாவது ஒரு குழந்தைக்கு உயிராபத்து ஏற்படக்கூடும் என்று [illegible] இக்குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சையினை மேற்கொள்ள பிறநாடு ஒன்றுக்கு அனுப்பி வைக்க ஏற்பாடு [illegible] கூறியிருக்கிறார். [illegible]

## வீட்டுக்குள் புலி

இயற்கைக் காரணங்களால் மட்டுமல்ல மனிதர்களின் செயற்கையான நடவடிக்கைகளினாலும் [illegible] விலங்கினங்கள் பல வம்ச விருத்தியின்றி அழிந்தொழிந்து போகின்றன. [illegible] அதிவேகமாக அருகிவரும் [illegible] ஆபிரிக்கக் காடுகளில் காணப்படும் சீத்தா.

1900ம் ஆண்டில் இந்தச் சீத்தாவின் எண்ணிக்கை ஒரு இலட்சம் [illegible] 10 ஆயிரம் மட்டுமே ஆபிரிக்க காடுகளில் வாழ்கின்றனவாம். [illegible]

[illegible]



சீத்தாவுக்கு வருத்தம்-சிகிச்சை நடக்கிறது



[illegible]



சீத்தா-இங்கே வா! இந்தா செல்ல முத்தம்

தினமுரசு வாரமலர்




[illegible]